April 2024

# தமிழ்

**நற்றமிழரின் நாடித்துடிப்பு**



## சித்திரை சிறப்பிதழ்


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
இனிய
தமிழ் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA™
VARSHA
Idli / Dosa Wet Mix
1Kg
Traditional taste that Lingers

ஐ தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு



April 2024
சுவடி — 14
ஓலை — 2

# உள்ளே...

தேவையற்ற போர்
பெரிய தேர் கோவில்
தமிழே தமிழே
சேரமான் கனவு
தல வலம்
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
காப்போம் நீரை உயிராய்
மருத்துவ தமிழ்
மனச்சுமை போக்கும் நகைச்சுவை



## வணக்கம் பல

உலக மக்களின் ஒரே தேடல் அன்பும் நிம்மதியும்தான்! காலம் காலமாக மனிதன் இவற்றுக்காகத்தான் போராடிக் கொண்டிருக்கின்றான். பொதுமக்களின் நிலை இப்படி என்றால், ஆட்சியாளர்களின் மனநிலை வேறாக இருக்கிறது.

அன்புக்கும் அமைதிக்கும் ஏங்குகின்ற மக்களுக்கு, அதிகாரத்தையும், ஆணவத்தையும், அழித்தொழிக்கும் போரையும் தான் கைகாட்டுகிறார்கள். காரணமே இல்லாமல், போரை எளிதாகத் தொடங்கிவிடுகிறார்கள். வருடக் கணக்காகவும், மாதக் கணக்காகவும் இரண்டு போர்கள் நீடித்த வண்ணம் இருப்பதால் அப்பாவி மக்கள் அல்லலுற்று, அன்றாட அத்தியாவசியத் தேவை மறந்து, அமைதி இழந்து தவிக்கிறார்கள். அவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும் என்ற கட்டாயமும் கடமையும் இருக்கின்ற உலக நாடுகள், இன்னமும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.போரால் தவிக்கும் மக்களுக்கு அமைதியும் ஆறுதலும் கிடைத்திட எல்லாம் வல்ல பொதுவான இறைவன் அருள வேண்டும் என வேண்டுவதே அமைதி நாடும் மக்களின் வேண்டுதலாக இருக்கிறது.

தமிழகத்தில் எண்ணிலடங்கா அற்புதமான கலைப் படைப்புகள் காலம் காலமாக தமிழரின் பெருமைகளை பறைசாற்றும்படி விளங்குகின்றன. அத்தகைய பெருமைமிகு படைப்புகளில் ஒன்றான திருவாரூர் கோவில் குறித்த அற்புதமான பனுவல்களோடு 'ஐ தமிழ்' மலர்கிறது. ஆண்டுகள் போனாலும், தமிழர் இல்லங்களிலும் மனங்களிலும் பழமையைப் பறைசாற்றும் விதமான சரித்திரச் சுவடுகளும், இலக்கிய இன்பங்களும் வந்து நிறைவது தமிழ்ப் புத்தாண்டு தினமான சித்திரை முதல் நாளுக்கு உரித்தான ஒன்றுதான்! அதன்படி பழமையும் செழுமையுமான தமிழ் இலக்கிய வரலாற்றை நினைவு கொள்வதும், அதனை அடுத்த தலைமுறைக்குத் கொண்டு செல்வதும் எமது அத்தியாவசியக் கடமை! இம்மாதம் சித்திரைச் சிறப்பிதழாக மலர்கின்ற இவ்விதழ், தேர்ந்த கவிதைகளோடும் கட்டுரைகளோடும் தமிழ் அன்னைக்கு படைப்பு முத்துக்களால் அலங்காரப்படுத்தி அழகு சேர்க்கிறது நமது ஐ தமிழ். சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு உலகெங்கும் தமிழர் பெருமக்களுக்கு நலமும் வளமும் இன்பமும் தரவல்லதாகவும், உலக மக்களுக்கு நற்செய்தியை வழங்குவதாகவும் அமையட்டும் என்ற வாழ்த்துகளோடு சிறப்புடன் மலர்கின்ற சித்திரைச் சிறப்பிதழை வரவேற்று வாசியுங்கள் நேசியுங்கள்!

அனைவருக்கும் சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்!...

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

IThamil Monthly Magazine
**Chief Editor & Publisher**
Sivanesan
**Editor**
Khottravan
**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar
**Art Editor**
Sriram
**Art & Marketing Director**
Jaya
**Printers**
Kanagam Pathippagam
**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

நிகழ்வு

# தேவையற்ற

**கா**ஸா போர் நிறுத்தம்: ஐ.நா. தீர்மானத்தை தடுக்காத அமெரிக்கா மீது இஸ்ரேல் கோபம் — என்ன செய்தது?


காசாவில் “உடனடியாக போர் நிறுத்தத்தை” அமல்படுத்துவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில். இதில் அமெரிக்கா தனது முந்தைய நிலைப்பாட்டில் இருந்து மாறி இந்தமுறை நடவடிக்கையை வீட்டோ செய்யாமல் தவிர்த்துவிட்டது.இந்த தீர்மானத்தின் படி அனைத்து பணயக்கைதிகளையும் உடனடியாக மற்றும் நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. இஸ்ரேல் — பாலத்தீனம் இடையே அக்டோபரில் போர் தொடங்கியதில் இருந்து போர் நிறுத்த தீர்மானத்தை கொண்டு வர முடியாமல் ஐநா பாதுகாப்பு கவுன்சிலுக்கு சில முட்டுக்கட்டைகள் இருந்தன.

காசாவில் போர் நிறுத்தத்தை அமல்படுத்துவதற்கான தீர்மானம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இஸ்ரேல், ஹமாஸ் ஆயுதக் குழுவினரிடையே ஐந்து மாதங்களுக்கு மேலாக போர் நீடித்து வரும் நிலையில், ரமலான் பண்டிகையை கருதி காசா பகுதியில் மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டி ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

பாதுகாப்பு கவுன்சிலின் 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களால் இந்த தீர்மானம் முன்வைக்கப்பட்டது. இந்த தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் அமெரிக்கா பங்கேற்காத நிலையில், 15 நாடுகளை கொண்ட கவுன்சிலின் மற்ற உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்தனர். இதன்மூலம் காசாவில் போர் நிறுத்தத்தை தற்காலிகமாக அமல்படுத்துவதற்கான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடங்கி ஐந்தரை மாதங்களுக்குப் பிறகு, அதில் 32,000 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் , மேலும் 74,000 பேர் காயமடைந்தனர், 90% க்கும்








# போர்!

அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தனர் மற்றும் கிட்டத்தட்ட அனைவரும் பேரழிவு தரும் பசி நெருக்கடிக்கு தள்ளப்பட்டனர், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் (UNSC ), மார்ச் 25 அன்று, “உடனடி போர்நிறுத்தம்“ மற்றும் ஹமாஸ் பிடியில் உள்ள அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்க அழைப்பு விடுத்தது . காசாவில் உடனடி போர்நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்த ஒவ்வொரு ஐ.நா தீர்மானத்தையும் வீட்டோ செய்த அமெரிக்கா, இம்முறை வாக்களிக்கவில்லை, இது போரைப் பற்றிய பிடென் நிர்வாகத்தின் கொள்கையில் மாற்றத்தைக் குறிக்கிறது. சமீப காலம் வரை போர் நிறுத்தத்தை ஆதரிப்பதற்கான அழைப்புகளை எதிர்த்து வந்த பிரிட்டன் உட்பட ஹிழிஷிசி இன் மற்ற அனைத்து உறுப்பினர்களும் தீர்மானத்திற்கு வாக்களித்தனர். இஸ்ரேல் கோபமாக பதிலளித்தது, வாஷிங்டனுக்கு பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகுவின் நெருங்கிய அமைச்சரவை உதவியாளர்கள் இருவரின் திட்டமிட்ட பயணத்தை ரத்து செய்தது , மேலும் சீனா மற்றும் ரஷ்யாவின் ஆதரவுடன், பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான போர்நிறுத்தத்தை நிபந்தனைக்குட்படுத்தாததற்காக தீர்மானத்தை வெடிக்கச் செய்தது. ஆனால் கோபம் மற்றும் வெடிப்புக்கு அடியில் இஸ்ரேலின் பலவீனம் உள்ளது




இந்நிலையில் தற்போது அமெரிக்காவின் இந்த நடவடிக்கை, காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடர்பாக, அதற்கும் அதன் நட்பு நாடான இஸ்ரேலுக்கும் இடையே வளர்ந்து






வரும் கருத்து வேறுபாட்டைக் குறிப்பதாக அமைந்துள்ளது. இந்த தீர்மானத்தின் மீது ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் 15 உறுப்பினர்களில் அமெரிக்கா தவிர மற்ற நாடுகள் வாக்களிக்க, அமெரிக்கா மட்டும் வாக்களிக்காமல் ஒதுங்கி நின்றது.

இதற்கு முன்னதாக இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில், போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் தீர்மானங்களை ஆதரிக்க முடியாது என்று முன்னர் அவற்றை தடுத்தது அமெரிக்கா. ஆனால் வியாழனன்று, போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் தனது சொந்த வரைவு அறிக்கை ஒன்றை முதல்மு றையாக முன்வைத்தது அமெரிக்கா. இது இஸ்ரேல் மீதான அதன் நிலைப்பாடு கடுமையாகியுள்ளதை குறிப்பதாக அமைந்தது.



ஐ.நா. பாதுகாப்புச் சபையின் காசா தீர்மானத்தை அமெரிக்கா ஏன் புறக்கணித்தது என்பது குறித்து ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதர் லிண்டா தாமஸ்—கிரீன்ஃபீல்ட் விளக்கம் அளித்துள்ளார்.ரஷ்யா மற்றும் சீனாவால் தடுக்கப்பட்ட முந்தைய அமெரிக்க தீர்மானத்தை அவர் முதலில் குறிப்பிட்டார், "அக்டோபர் 7—ம் தேதி ஹமாஸ் நடத்திய பயங்கரவாதத் தாக்குதல்களைக் கண்டிக்க அவர்களால் இன்னும் முடியவில்லை." என்று அவர் கூறினார்."இராஜதந்திர முயற்சிகள் மூலம் நீடித்த அமைதியை முன்னெடுப்பதில் அவர்கள் உண்மையில் ஆர்வம் காட்டவில்லை என்பதை அவர்கள் மீண்டும் மீண்டும் காட்டியுள்ளனர்." என்று லிண்டா தாமஸ்—கிரீன்ஃபீல்ட் கூறினார்.

இன்றைய தீர்மானத்தில், "முக்கிய திருத்தங்கள்" புறக்கணிக்கப்பட்டதாக தாமஸ்—கிரீன்ஃபீல்ட் தெரிவித்தார். குறிப்பாக ஹமாஸின் கண்டனம் தெரிவிக்கப்படாதது குறித்து அவர் ஏமாற்றம் தெரிவித்தார்.

"தீர்மானத்தில் உள்ள அனைத்தையும் நாங்கள் ஏற்கவில்லை. அந்த காரணத்திற்காக, எங்களால் துரதிருஷ்டவசமாக ஆம் என்று வாக்களிக்க முடியவில்லை. இருப்பினும், நான் முன்பு கூறியது போல், இந்த கட்டுப்பாடற்ற தீர்மானத்தில் சில முக்கியமான நோக்கங்களை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம். அனைத்து பணயக்கைதிகளின் விடுதலையுடன் எந்தவொரு போர் நிறுத்தமும் வர வேண்டும் என்பதை சபையில் பேசுவதும் தெளிவுபடுத்துவதும் முக்கியம் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதர் லிண்டா தாமஸ்—கிரீன்ஃபீல்ட் கூறினார்.

போர் நிறுத்த தீர்மானத்தை வீட்டோ செய்ய அமெரிக்கா தவறியிருப்பது முந்தைய நிலைப்பாட்டில் இருந்து அந்நாட்டின் "தெளிவான பின்வாங்கல்" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.காசாவில் ஹமாஸுக்கு எதிரான போர் முயற்சிகளையும், அங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ள 130க்கும் மேற்பட்ட பணயக்கைதிகளை விடுவிக்கும் முயற்சிகளையும் இது பாதிக்கும் என்று அவர் கூறினார். இஸ்ரேல் பிரதமர் பெஞ் சமின் நெதன்யாகு இந்த வாரம் வெள்ளை மாளிகைக்கான இஸ்ரேலிய பிரதிநிதிகளின் பயணத்தை அதிகாரப்பூர்வமாக ரத்து செய்துள்ளார். "அமெரிக்காவின் நிலைப்பாட்டில்



ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாகவே" இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. காசாவில் இஸ்ரேலிய தரைவழித் தாக்குதலை எதிர்பார்க்கும் முன் வரும் இந்த விஜயத்தை ரத்து செய்வதாக நெதன்யாகு முன்னர் அச்சுறுத்தியிருந்தார். இதை பைடன் நிர்வாகம் எதிர்த்துள்ளது.

ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் வழங்கியுள்ள தகவலின்படி, இஸ்ரேலின் குண்டுவீச்சினால் 32,000க்கும் அதிகமான மக்கள், முக்கியமாக பெண்கள் மற்றும் குழந்தைகள் காஸாவில் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் அதிகரித்து வரும் உயிரிழப்பு எண்ணிக்கை குறித்து சமீப காலமாகவே அமெரிக்கா முன்பை விட அதிகமாக இஸ்ரேலை குற்றம்சாட்டி வருகிறது.

காஸாவில் உள்ள மக்கள் அனைவரும் உணவு இன்றி தவிப்பதாக கூறும் அமெரிக்கா, அவர்களுக்கு கூடுதல் மனிதநேய உதவிகளை செய்யுமாறு இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. மனிதநேய உதவிகளை செய்ய இஸ்ரேல் தடையாக இருப்பதாக ஐநா சபை குற்றம் சுமத்தியிருந்தது. அதே சமயம் உதவிகளை விநியோகிப்பதில் ஐநா சரியாக செயல்படவில்லை என்று இஸ்ரேல் குற்றம் சாட்டியது. காஸாவை ஆட்சி செய்து வரும் பாலத்தீன இஸ்லாமியக் குழுவான ஹமாஸ், இஸ்ரேல் மீது முன்னறிவிப்பில்லா தாக்குதலை நடத்தியதில், 1200 பேர் உயிரிழந்தனர். மேலும் 253 பணயக்கைதிகளையும் பிடித்து வைத்துக் கொண்டது. அதனால், அக்டோபர் 7 தொடங்கிய போர் தற்போது வரை நடந்து வருகிறது. "உளவுத்துறை அறிக்கைகள் அனைத்தையும் நாங்கள் சரிபார்த்தோம். மார்வான் இசா வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார்," என்று இதுகுறித்து இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மிரல் டேனியல் ஹகாரி தெரிவித்தார். இஸ்ரேல் தெரிவிப்பதில் தனக்கு 'நம்பிக்கை இல்லை என்றும் அந்த அமைப்பின் ராணுவத் தலைமை மட்டுமே இதுகுறித்து 'இறுதியாக ஏதாவது சொல்லும்' என்றும் ஹமாஸ் அரசியல் தலைவரான இஸாத் அல் ரிஷ்க் கூறுகிறார்.




இசா இந்தக் குழுவின் 'மூன்றாம் நிலையில் இருக்கும் தலைவர்' என்றும், அக்டோபர் 7ஆம் தேதி தெற்கு இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் 'முக்கிய ஏற்பாட்டாளர்களில் ஒருவர்' அவர் என்றும் ரியர் அட்மிரல் ஹகாரி கூறியுள்ளார். இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலில், 1,200 பேர் கொல்லப்பட்டனர், 253 பேர் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் காஸாவில் பதில் தாக்குதல் மேற்கொண்டது. காஸாவில் இதுவரை 32,400க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாகவும், கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் 81 பேர் உயிரிழந்துள்ளதாகவும் ஹமாஸ் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காஸாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக முட்டுக்கட்டை நிலவி வருகிறது. காஸாவில் உடனடியாக போர் நிறுத்தத்தை அமல்படுத்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் முதன்முறையாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு



எதிராக இஸ்ரேல் கடும் எதிர்வினையைப் பதிவு செய்துள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் வாக்கெடுப்பின் போது அமெரிக்கா வாக்களிக்கவில்லை. இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக பிரிட்டன் உட்பட 14 பாதுகாப்பு சபை உறுப்பினர்கள் வாக்களித்தனர். போர் நிறுத்தம், மீதமுள்ள பிணைக் கைதிகளை நிபந்தனையின்றி விடுவித்தல் மற்றும் மனிதாபிமான உதவியை விரிவுபடுத்துதல் ஆகியவை இந்தத் தீர்மானத்தில் அடங்கும்.

இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியும் ராணுவ ஆதரவாளருமான அமெரிக்கா, அக்டோபர் 7 தாக்குதலுக்கு ஹமாஸை கண்டிக்கத் தவறிய தீர்மானத்தை விமர்சித்துள்ளது. இருப்பினும் இஸ்ரேலின் போர் முறைகள் தொடர்பாக அதிகரித்து வரும் கோபம் காரணமாக இந்தத் தீர்மானத்தின் மீது வாக்களிப்பதில் இருந்து அமெரிக்கா விலகிக் கொண்டது. ஆனால் அமெரிக்கா இந்தப் போரின் முக்கிய நோக்கங்களுக்கு முழு ஆதரவளிப்பதாகக் கூறியது.

இந்த முன்மொழிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இஸ்ரேல், வாஷிங்டனுக்கான தனது தூதுக்குழுவின் பயணத்தை ரத்து செய்துள்ளது. காஸாவின் தெற்கு நகரமான ரஃபாவில் தரைவழித் தாக்குதலை நடத்துவதற்கான திட்டத்தைப் பற்றி விவாதிக்க தூதுக்குழு அங்கு செல்வதாக இருந்தது.



தற்போது 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் ரஃபாவில் தஞ்சமடைந்துள்ளனர். முழு அளவிலான தாக்குதல் மனித பேரழிவாக நிரூபிக்கப்படலாம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. பின்னர் ஹமாஸ் போர் நிறுத்த திட்டத்தை நிராகரித்து அறிக்கை வெளியிட்டது. அமெரிக்கா, கத்தார் மற்றும் எகிப்து நாடுகளின் மத்தியஸ்தத்துடன் தோஹாவில் நடைபெற்ற மறைமுக பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தத் திட்டம் உருவானது.

“நிரந்தர போர் நிறுத்தத்துடன்” காஸாவில் இருந்து இஸ்ரேலிய படைகள் முற்றிலுமாக வெளியேறவும், இடம்பெயர்ந்த பாலத்தீனியர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பவும் அழைப்பு விடுத்த தன் அசல் கோரிக்கையைத் தான் பற்றி நிற்பதாக ஹமாஸ் கூறியது.ஹமாஸின் நிலைப்பாடு, ‘பேச்சுவார்த்தை மூலமான ஒப்பந்தத்தில் அதற்கு எந்த ஆர்வமும் இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. கூடவே ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானத்தால் ஏற்பட்ட சேதத்தை உறுதிப்படுத்துகிறது,” என்று செவ்வாய்கிழமை காலை இஸ்ரேலிய பிரதம மந்திரி அலுவலகம் தெரிவித்தது.

ஹமாஸின் திசை திருப்பும் கோரிக்கைகளை இஸ்ரேல் ஏற்றுக் கொள்ளாது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. “ஹமாஸின் ராணுவ மற்றும் அரசாங்க திறன்களை அழித்தல், எல்லா பிணைக் கைதிகளையும் விடுவித்தல், காஸா, இஸ்ரேலிய மக்களுக்கு எதிர்கால அச்சுறுத்தலை ஏற்படுத்தாததை உறுதி செய்தல் போன்றவற்றை உள்ளடக்கிய தனது போர்



நோக்கங்களை இஸ்ரேல் தொடர்ந்து அடையும்," என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர் இந்த விமர்சனங்களை நிராகரித்துள்ளார்."இந்த அறிக்கை கிட்டத்தட்ட எல்லா வகையிலும் தவறானது. பிணைக் கைதிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு இது நியாயம் இல்லாதது" என்று அவர் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் கூறினார்."செய்தி அறிக்கைகள் மூலம் ஹமாஸின் எதிர்வினை பற்றிய தகவல்கள் பகிரங்கமாயின. ஆனால் அவர்களது பதிலின் உண்மையான சாராம்சம் இதுவல்ல. இந்த எதிர்வினை ஐநா பாதுகாப்பு சபையில் வாக்கெடுப்புக்கு முன் தயாரிக்கப்பட்து, அதற்குப் பிறகு அல்ல என்று என்னால் கூற முடியும்," என்றார் அவர்.

கத்தாரின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாஜித் அல்—அன்சாரி தோஹாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், மறைமுகப் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்படவில்லை, அவை தொடர்கின்றன என்றார். "பேச்சுவார்த்தைகளுக்கான கால அட்டவணை எதுவும் இல்லை. ஆனால் நாங்கள் எங்கள் கூட்டாளர்களுடன் பேச்சுவார்த்தை முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம்," என்று அவர் கூறினார். ஆனால் 10 நாட்கள் பேச்சுவார்த்தைக்குப் பிறகு இஸ்ரேல் தனது பேச்சுவார்த்தைக் குழுவைத் திரும்ப அழைத்ததாக இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள் காட்டி இஸ்ரேலிய ஊடகங்களும் ராய்ட்டர்ஸ் செய்தி முகமையும் தெரிவித்துள்ளன.

இரானுக்கு பயணம் மேற்கொண்ட

ஹமாஸ் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியா, இஸ்ரேல் முன்னெப்போதும் இல்லாத வகையில் அரசியல் தனிமையை எதிர்கொள்வதை ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானம் காட்டுவதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாத இறுதியில் ஒரு வார கால போர் நிறுத்தத்தின் போது இஸ்ரேலிய சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 240 பாலத்தீன கைதிகள் 105 இஸ்ரேலிய பிணைக் கைதிகளுக்கு ஈடாக விடுவிக்கப்பட்டனர்.

ஹமாஸ் நிராகரித்த புதிய ஒப்பந்தம், ஆறு வாரங்களுக்கு போர் நிறுத்தத்தை முன்மொழிந்ததாகக் கூறப்படுகிறது. கூடவே 800 பாலத்தீன கைதிகளுக்கு ஈடாக ஹமாஸால் பிடிக்கப்பட்ட 40 இஸ்ரேலிய பிணைக் கைதிகளை விடுவிப்பதும் இதில் அடங்கும்.




ஆனால் காஸாவில் போரில் தோல்வியை ஏற்கும் அறிகுறி இன்னும் தெரியவில்லை. சமீபத்திய இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் பல டஜன் பாலத்தீனர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. ரஃபாவின் புறநகரில் உள்ள குடியிருப்பு கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் ஒன்பது குழந்தைகள் உட்பட குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டதாக பாலத்தீன ஊடகங்களும் உள்ளூர் சுகாதார ஊழியர்களும் கூறுகின்றனர். முசாபா பகுதியில் உள்ள அபு நக்கீராவின் வீட்டில் டஜன் கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சம் அடைந்திருந்தனர் என்றும் கூறப்பட்டது.

காஸா நகரில் அல்—ஷிஃபா மருத்துவமனைக்கு அருகே வான்வழித் தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டதாக வடக்கு காஸாவில் உள்ள அபு ஹசிரா குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ராய்ட்டர்ஸ் செய்தி முகமையிடம் தெரிவித்தனர்.24 மணிநேரத்தில் 60 இலக்குகளைக் குறிவைத்ததாகவும், 'பயங்கரவாத சுரங்கப்பாதைகள், பயங்கரவாத உள்கட்டமைப்புகள் மற்றும் ராணுவ உள்கட்டமைப்புகள்' இதில் அடங்கும் என்றும் இஸ்ரேலிய ராணுவம் செவ்வாய்கிழமை காலை தெரிவித்தது. இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் 'அல்—ஷிஃபா மருத்துவமனை பகுதியில் துல்லியமான தாக்குதல் நடவடிக்கைகளை




மேற்கொண்டனர்’ என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடுமையான சண்டை காரணமாக நோயாளிகள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் ஆபத்தில் இருப்பதாக பாலத்தீனர்கள் மற்றும் உதவிக் குழுக்கள் தெரிவித்துள்ளன. 175 ‘பயங்கரவாதிகள்’ கொல்லப்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் யாரும் பாதிக்கப்படவில்லை என்றும் ராணுவம் தெரிவித்துள்ளது.

வடக்கு காஸாவில் விமானத்தில் இருந்து போடப்பட்ட மனிதாபிமான உதவிகளைச் சேகரிக்கும்போது 18 பாலத்தீனர்கள் கொல்லப்பட்டதாக காஸாவில் உள்ள ஹமாஸின் அரசு ஊடக அலுவலகம் செவ்வாயன்று கூறியது. உணவுப் பொட்டலங்களைச் சேகரிக்கும்போது 12 பேர் கடலில் மூழ்கி இறந்தனர். அதேநேரம் பொருட்களை எடுக்கும்போது ஏற்பட்ட ‘ கூட்ட நெரிசலில்’ சிக்கி ஆறு பேர் இறந்தனர் என்று கூறப்பட்டது.இந்த அறிக்கையில் மேலதிக தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. திங்களன்று வடக்கு நகரமான பைட் லாஹியாவில் கடற்கரைக்கு அருகே ஏர் டிராப்பின் போது குறைந்தது ஒரு நபராவது நீரில் மூழ்கியதை வீடியோ காட்சிகள் காட்டின.

திங்களன்று அமெரிக்க விமானம் வடக்கு காஸாவில் 18 மனிதாபிமான உதவிப் பொட்டலங்களைப் போடாக பெண்டகனை மேற்கோள் காட்டி ராய்ட்டர்ஸ் தெரிவித்தது. ஆனால் பாராசூட்டில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அவை தண்ணீருக்குள் விழுந்தன. ஆனால் யாரும் உயிரிழந்ததை உறுதிப்படுத்த முடியவில்லை.




இஸ்ரேலிய பிணைக் கைதி யூரியல் பரூச் கொல்லப்பட்டதாகவும், அவரது உடல் ஹமாஸிடம் இருப்பதாகவும் இஸ்ரேலிய ராணுவம் அவரது குடும்பத்திடம் கூறியதாக பிணைக்கைதிகள் மற்றும் காணாமல் போன குடும்பங்களின் மன்றம் தெரிவிக்கிறது.35 வயதான, இரண்டு பிள்ளைகளின் தந்தையான பரூச், அக்டோபர் 7ஆம் தேதி சூப்பர்நோவா இசை விழாவின் போது காயமடைந்தார். பின்னர் அவர் கடத்தப்பட்டார்.அதே நேரத்தில் காஸாவில் ஒரு காவலர் துப்பாக்கி முனையில் தன்னை பாலியல் வன்புணர்வு செய்ததாக நவம்பரில் விடுவிக்கப்பட்ட ஒரு பெண் பிணைக் கைதி நியூயார்க் டைம்ஸ் செய்தித்தாளிடம் கூறினார்.நாற்பது வயதான அமித் சுசானா தான் சிறைப்பிடிக்கப்பட்ட போது பாலியல் வன்முறைக்கு ஆளானதாகத் தெரிவித்ததாக செய்தித்தாள் குறிப்பிடுகிறது.

பிணைக் கைதிகள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதற்கான தெளிவான மற்றும் உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும், “அத்தகைய வன்முறை தொடரக்கூடும் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன,” என்றும் இந்த மாதத் தொடக்கத்தில் ஐ.நா குழு கூறியது. இஸ்ரேல் தெளிவான முடிவின்றி போரைத் தொடர்ந்தால், அது கொல்லப்படுவதைத் தவிர அது எதிர்கொள்ளும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சவால்களை மோசமாக்கும். பாதுகாப்பற்ற, தாக்குதலுக்கு உள்ளான, முற்றுகையிடப்பட்ட, குண்டுவீச்சுக்கு ஆளான காஸாவில் அதிகமான பாலஸ்தீனியர்கள். திரு. நெதன்யாகு இரண்டு தேர்வுகளை எதிர்கொள்கிறார்.

அவர் **UNSC** இன் செய்தியை தீவிரமாக எடுத்துக் கொள்ளலாம், போரை நிறுத்தலாம், அவசர மனிதாபிமான உதவிகளை காசாவிற்குள் அனுமதிக்கலாம் மற்றும் அனைத்து பணயக்கைதிகளை விடுவிக்கவும் மற்றும் அவரது துருப்புக்களை என்கிளேவிலிருந்து திரும்பப் பெறவும் சர்வதேச மத்தியஸ்தர்கள் மூலம் ஹமாஸுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தலாம். அல்லது, நிரந்தரப் போர் நிகழும் நிலையில் தனது நாட்டை தொடர்ந்து இருளில் இட்டுச் செல்லலாம்.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




## சொல்றாங்க... சொல்றாங்க...



"தி.மு.க.வுக்கு மாற்று அ.தி.மு.க; அ.தி.மு.க.வுக்கு மாற்று தி.மு.க என்ற நிலை இருப்பதால்தான் பா.ஜ.க போன்ற கட்சிகளால் ஊடுருவ முடியவில்லை!"

**தொல். திருமாவளவன்**

(உண்மைதான்! இருக்க வேண்டியவங்க ஒழுங்கா இருந்தா யாரும் ஊடுருவ முடியாதுங்க!)



"பா.ஜ.க.வை வீட்டுக்கு அனுப்பும்வரை தூங்கப் போவதில்லை"

**உதயநிதி ஸ்டாலின்**

(உங்க கூட்டணியில் இருக்கிறவங்க எல்லாரும் இப்படி ஒண்ணா சொல்லுவாங்களா? ஆளாளுக்கு ஓடிப்போய் தூங்குறாங்களே!?)



"பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்க வேண்டிய அவசியமில்லை!"

**இ.பி.எஸ்**

(ஆமா! கூட்டணி இல்லாமலே அவங்க சொல்ற வேலையை செய்யும்போது, பெயரளவுக்கு எதுக்கு கூட்டணி?)



"தி.மு.க, அ.தி.மு.க கட்சிகளுக்கு மாற்று வேண்டும் என்பதாலேயே பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்துள்ளோம். அடுத்த தேர்தலை குறித்து இப்போதே சொல்ல முடியாது!"

**அன்புமணி ராமதாஸ்.**

(இப்பவே எங்கே கிடக்கிறார்னே தெரியலே! இதிலே அடுத்த தேர்தலைப் பற்றிக் கேட்டா எப்படிங்க?)

நிகழ்வு

# பெரிய தேர்

## திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயில்

பூங்கோயில் அல்லது திருமூலட்டாணம் என்ற மூலவர் திருக்கோயிலும், அறநெறியென்னும் அசலேசமும் இருவேறு பாடல் பெற்ற திருவாரூர் கோயில்களாயினும், இவை அனைத்தையும் கொண்ட திருவாரூர் கோயில், தியாகராஜர் திருக்கோயில் என்றே அழைக்கப்படுகிறது.

பூங்கோயில் உள்ள பெருமானை புற்றிடங்கொண்டான், திருமூலஸ்தானமுடையர், வன்மீகநாதர் என்றும், அறநெறியில் ஆட்கொள்ளும் இறைவனை அறநெறி மகாதேவபட்டாரகர், அறநெறி ஆழ்வார் என்றும் கல்வெட்டுகளும், தேவாரப் பாடல்களும் குறிக்கிறது. பிற்காலத்தில் அறநெறி ஆழ்வாரை அசலேஸ்வரர் என அழைக்கத் தொடங்கினர். பூங்கோயிலும் திருமூலட்டாணத்தின் உற்சவ மூர்த்தியான செப்புத் திருமேனியைத் தியாகராஜர் என்றும், அசலேசத்தின் உற்சவ மூர்த்தியான சோமாஸ்கந்தர் திருமேனியைத் தன்மவிடங்கதேவர் என்றும் அழைக்கின்றனர்.

தியாகராஜரின் பொற்கோயில்: கோயிலின் நடுநாயகமாக விளங்கும் புற்றிடங்கொண்டானின் பூங்கோயிலையொட்டித் தென்புறமாக உள்ள கற்கோயிலே தியாகராஜர் திருக்கோயிலாகும். இந்த இரண்டு கோயில்களின் மகாமண்டப் பகுதிகள் இணைக்கப்பட்டு ஒரே கோயிலாக காட்சியளிக்கிறது. பூங்கோயிலாம் கற்கோயில் தொன்மையான ஒன்றாகும். தியாகராஜர் கற்கோயில் முதலாம் ராஜேந்திர சோழனின் காதலி பரவை என்ற நங்கையின் வேண்டுகோளுக்கிணங்க கி.பி. 1029—31—ல் கட்டப்பட்டது என்பதை இக்கோயிலில் உள்ள கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

செங்கல் கோயிலாக இருந்ததைக் கற்கோயிலாக கட்டியது மட்டுமின்றிப் பரவை என்ற அந்நங்கையின் விருப்பத்திற்காக ஸ்ரீவிமானத்துக்கும் கருவறையின் சுவர்களுக்கும் ராஜேந்திரசோழன் பொன்னும் வேய்ந்துள்ளான். இதை இக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில், உடையார் வீதிவிடங்கதேவர் குடத்திலும் வாய் மாடையிலும் நாலு நாசியிலும் உள் குடத்திலும் பொன்வேய்ந்தான் என்று கூறுகிறது. கருவறையின் கதவுகளுக்கும், மண்டபத் தூண்களுக்கும் செம்பினால் தகடு சாத்தப்பட்டதாகவும் இங்குள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது.

கங்கை முதல் கடாரம் வரை வென்ற ஒரு சோழப் பெருமன்னன் தன் அருமை காதலி பரவை நங்கை







# கோவில்

**தங்கராஜு**

என்ற ஒரு பெண்ணரசியின் வேண்டுகோளுக்காக இத்தனையும் செய்த ஒரு திருக்கோயிலே இன்று நாம் காணும் இந்த அழகிய திருக்கோயில். ராஜேந்திரசோழன் வேய்ந்த பொற்றகடுகளைக் காலம் விழுங்கிவிட்டாலும் இத்தனையும் கூறும் கல்வெட்டுகளைக் கருவறையின் சுவர்களின் காணும்போது பெருமித உணர்வு ஏற்படுகிறது.

கட்டடக்கலையின் அம்சங்கள்:

இத்திருக்கோயிலின் முதல் பிராகாரத்தின் தளம் பிற்காலத்தில் உயர்த்தப்பட்டதால், கருவறையின் உபபீடப் பகுதி தளத்தில் தாழ்வாய் உள்ளது. இப்போது பத்மபீட பகுதியில் இருந்துதான் நாம் தளத்தை காணமுடிகிறது. பத்ம பீடத்தின் இதழ்கள் அழகுற மேல்நோக்கி வளைந்துள்ளன. பத்மத்திற்கு மேல் குமுதவரி வளைவுபட திகழ்கிறது. அதன்மேல் யாளி வரிமானம் பெரிய அளவில் தொடர்கிறது. இவற்றின் ஒவ்வொரு மூலையிலும் வீரர்களின் சிற்பங்கள் உள்ளன.

யாளி வரிமானத்திற்கு மேல் வேதிகையும், கால், போதிகை, உத்திரம் எழுதகம் போன்றவையும் அமைந்துள்ளன. கபோதகம் யாளம் அடங்கிய பிரஸ்தளமாக தொடர்கிறது. மூன்று கோஷ்டங்கள் உள்ளன. அதில் முறையே தென்புறம் ஆலமர் செல்வரும், மேல்புறம் ஆழியும், சங்கும் ஏந்திய திருமாலும், வடபுறம் நான்முகனும் இடம் பெற்றுள்ளனர். கோஷ்ட








தோரணங்கள் இருபுறமும் வளைவுகளுடன் காணப்படுகின்றன. சிகரம் வட்ட வடிவ அமைப்பிலும் நான்கு மூலைகளிலும் நந்திகள் பெற்றும் திகழ்கிறது. தளத்தில் யாளிவரிமானம் ஒன்றும் உள்ளது.

கிரீவமும் சிகரமும் அழகிய சுதை வேலைப்பாடுகளுடன் உள்ளன. மகநாசிக் கூட்டுக்கு கீழ் தேவதை கல் சிற்பங்கள் உள்ளன. கருவறையுடன் இணைந்த அந்தராளம் 6 தூண்களுடன் அழகுமிக்கதேவ சபையாகதிகழ்கிறது. இதன் தென்புறமும், வடபுறமும் பல கணிகள் உள்ளன. இதற்கு முன்பு உள்ள மகாமண்டபம் பிற்கால திருப்பணிகளுக்கு உட்பட்டாலும், மூலத்தானத்தின் மகாமண்டபத்துடன் இணைந்தே உள்ளது. வாயிற்படிகள் தென்புற திருச்சுற்றில் உள்ளன.

திருவாரூர் தியாகராஜரின் தெய்வீக அழகை எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருக்கலாம். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மனுநீதிச் சோழர், முசுகுந்த சக்கரவர்த்தி போன்ற ஆன்றோர்கள் தரிசித்த இடம்.




இவர்களை போன்ற எத்தனையோ ஆன்றோர்களின் மனதில் பக்திப் பெருக்கையும், நுண்ணிய கலை உணர்வையும், இசை வெள்ளத்தையும் தோற்றுவித்த பெருமான் இவர்.

முதலாம் ராஜேந்திர சோழன் தனது காதலி பரவை நங்கையின் ஆசையை நிறைவேற்ற செங்கல் கட்டுமானத்தால் இருந்த தியாகராஜப் பெருமான் கோயிலை கருங்கற்களால் எழுப்பினார். தியாகராஜர் மீதான பரவையின் பக்தியில் ராஜேந்திர சோழனுக்கு அளவில்லாத ஈடுபாடு. அவளை தேரில் ஏற்றி தன் அருகில் வைத்துக்கொண்டு திருவாரூரை சுற்றி உலாவாக அழைத்து வந்தான். தியாகராஜர் முன்னர் இருவரும் அருகருகே நின்று வணங்கினர். அந்த இடத்தில் ராஜேந்திர சோழன் ஒரு பெரிய விளக்கு செய்து வைத்தான். சோழர்களின் மனதுக்கு பிடித்த தெய்வம் தியாகராஜர்.

அதேபோல, தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களும் தியாகராஜரிடம் அளவில்லாத பக்தி கொண்டிருந்துள்ளனர். மராட்டிய மன்னர் காலத்தில் தியாகராஜப் பெருமான் மீது பல நாட்டிய நாடகங்கள் இயற்றப்பட்டன. அவ்வாறு இயற்றப்பட்ட தியாகராஜர் குறவஞ்சி எனும் நாடகம் இக்கோயிலில் நாட்டியமாக பலகாலம் நடிக்கப்பட்டு வந்தது. தியாகராஜருக்கு அருகில் 2 வாள்கள் உறையிட்டு வைக்கப்பட்டிருக்கும். ராஜா








அல்லவா தியாகராஜர். ஆதலால், அவர் அருகில் வேறு எங்கும் காண முடியாத 2 வாள்களைத் தரிசிக்கலாம். பண்டைய காலத்தில் அரசர்கள் அவை தெய்வ சக்தி உடையனவாக கருதினர். அவற்றிக்கு வழிபாடும் செய்தனர். தெய்வத்திடம் இருந்து தங்களது வாள்களைப் பெற்று போருக்குச் செல்லும் மரபும் உண்டு.


சயாம் நாட்டு கலைப்பொருள்:

தியாகராஜரை தரிசிக்கும் பக்தர்களுக்கு வெள்ளிக் கிண்ணத்தில் விபூதி பிரசாரம் வழங்கப்படும். இந்த பாத்திரம் நம் நாட்டில் செய்யப்பட்டது அல்ல. பர்மா, மலேசியா ஆகிய நாடுகளை கடந்து சயாம் நாட்டில் செய்யப்பட்ட ஒரு கலைப் பொருளாகும். அந்த பாத்திரத்தை சுற்றிலும் அழகான உருவங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். அனுமன், வாலி, சுக்ரீவன் ஆகியோரது உருவங்களும், உயிர்த்துடிப்புடன் கூடிய யானை, சிங்கம் இவைகளின் உருவங்களும் காணப்படுகின்றன. சிங்கத்தினுடைய முகம் சயாம் நாட்டு சிற்பம் என்பதை காட்டும். அதேபோல வாலி, சுக்ரீவன் அனுமன் ஆகியோருடைய உருவமும், ஆடை அணிகலன்களும் காணப்படுகின்றன.



இந்த பாத்திரத்தின் விளிம்பில் தமிழில் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகத்தில் வங்காரம் பேரையூர் சடையப்ப பிள்ளை மகன் ஆறுமுகத்தா பிள்ளை, தியாகராஜர் சுவாமி உபயம், எடை ரூ. 23.5 என்று எழுதப்பட்டிருக்கும். பாத்திரத்தின் அடிப்பகுதியில் 89 என்ற எண்ணும், ஒரு சிங்கத்தின் உருவமும் காணப்படுகிறது. இந்த சயாம் நாட்டு கலைப் பொருள் குறித்து, தொல்லியல் பேரறிஞர் டாக்டர் இரா. நாகசாமி கட்டுரை எழுதியுள்ளார்.

அதில், அந்த பாத்திரத்தில் உள்ள எண் 89, பர்மிய மொழியில் பர்மிய லிபியால் எழுதப்பட்டுள்ள வாசகம் குறித்து தனது நண்பர் சென்னை அடையாற்றில் இருந்த டும்சைன் என்பவர் மூலம் அறிந்துகொண்ட தகவல்கள் கூறியுள்ளார்.



அதன்விவரம், மாங்குவே என்ற பெண்ணுடையது இந்த பாத்திரம். அதனுடைய எடை 17 ரூபாய் 12 அணா என்று எழுதப்பட்டிருக்கிறதாம். 89 என்பது அந்த பெண்மணி தன்னுடைய பதிவேட்டில் இட்ட எண்ணாக இருக்கக்கூடும். இந்த பாத்திரத்தின் கலைப்படைப்பை காணும்போது இது பர்மாவில் செய்யப்பட்டது அல்ல என்று தெரிகிறது. சயாம் நாட்டில் இருந்து பர்மாவுக்கு வந்து அங்கிருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் வாங்கி வந்து திருவாரூர் தியாகராஜருக்கு கொடுத்து இருக்கிறார் என்பது தெரியவருகிறது என கூறியதை பதிவு செய்துள்ளார். கலைப்பொருள்கள் தேசத்தைக் கடந்து, காலத்தை கடந்து, மனித குலத்தை இணைக்கவல்ல சக்தி வாய்ந்தவை என்பதை இப்பாத்திரம் எடுத்துக்காட்டுகிறது. பல பொருள்களை வெறும் உயிரற்ற கலைப் பொருளாகவே காண்போர் உண்டு.




திருவாரூரில் பிரசித்தி பெற்ற தியாகராஜர் கோவில் அமைந்துள்ளது. இக்கோவில் சைவ சமய தலங்களில் முதன்மை தலமாகவும், சர்வதோஷ பரிகார தலமாகவும் விளங்குகிறது.

உலகிலேயே மிகப் பெரிய தேரான ஆழித்தேர் திருவாரூர் கோவில் தேராகும். தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் சோழ நாடு காவிரி தென்கரைத் தலங்களில் அமைந்துள்ள 87ஆவது சிவத்தலமாகும். திருவாரூர் சப்தவிடங்க ஸ்தலங்களின் தலைமை இடமாகவும் திகழ்கிறது. இது திருவாசகத் திருத்தலங்களில் ஒன்றாகவும் உள்ளது.

ஆனால் நம் நாட்டவர் எவை எல்லாம் உயர்ந்த படைப்புகளோ அவற்றை தெய்வத்துக்கு அர்ப்பணித்து அதில் பேரின்பம் கண்டுள்ளனர். இந்த கலைப் பொருளை தியாகராஜர் கோயிலுக்கு கொடுத்த ஆறுமுகத்தா பிள்ளையும் அந்த மரபை பின்பற்றி இருக்கிறார் எனலாம். கோடிக்கணக்கான பக்தர்களுக்கு இந்த அருமையான பாத்திரத்தில் இருந்து தியாகராஜருடைய அருட் பிரசாதமாக விபூதி கொடுக்கும் கலனாக இது திகழ ஆறுமுகத்தா பிள்ளை கொடுத்து இருக்கிறார். கலைகள் வந்து சேரும் புண்ணிய இடமாக கோயில்கள் திகழ்ந்தன என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு. இந்த கலைப் பொருளில் கடந்த சுமார் 30 ஆண்டுகளாக விபூதி பிரசாதம் வழங்கப்படுவதில்லை என கூறப்படுகிறது.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा



# சங்கவலம் வருவோம்

சங்கத்தால் வளர்ந்து வானுயர நிமிர்ந்திட்ட
சிங்கத் தமிழினம் தானிருந்த நிலைமறந்தே
அங்கத்தி லொன்றுகுறை கண்டாற் போலேதான்
பங்கமுடன் கிடக்கும் நிலையென மயங்கலாமோ?

வாய்மொழியே வாழ்வுமொழி எனக் கொண்டே
வாழ்ந்து வந்தது வற்றாத்தமிழ்ச் சங்ககாலம்!
வாய்மொழி ஒன்றும் வாழ்வுமொழி ஒன்றுமென
வாழ்ந்து வரலாமோ வெற்றாய் இந்தக்காலம்?

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென'
நன்னெறி காட்டிய அவ்வை பிறந்ததிங்கே!
'அன்பின் வழியது உயிர்நிலை' என்றேதான்
தன்னெறி காட்டிய அய்யன் பிறந்ததிங்கே!

எந்தையும் தாயும் தினமகிழ்ந்துக் குலாவிய
நந்தமிழ் மண்ணின் பெருமைகள் ஆயிரமாயிம்
சிந்தையில் சிறப்புடன் ஏற்றிட வீறுகொள்வோம்!
அந்தக்கால நன்னூல் பலவும் பயில்வோம்!

சித்தர்களும் ஞானிகளும் தீந்தமிழில் செப்பிய
தத்துவமா மருந்தாய் புத்தியைத் தெளிவிக்கும்
எத்தனை எத்தனையோ உண்டிங்கு ணர்வோம்!
அத்தனையும் பெற்றிட விழைவு கொள்வோம்!

நற்றமிழ் பாடித்திரிந்து அரசினை நெறிப்படுத்திய
கற்றறிந்த புலவர்க்குப் பரிசில்கள் பலவுந்தந்தே
கொற்றவரும் பணிந்து புரந்திட்ட இம்மண்ணைப்
பெற்றநாடாய் பெற்றதிலே பெருமை கொள்வோம்!

தங்குதடை எதுவரினும் தடையாவு முடைத்தே
சிங்கநிகர் தமிழர் நம்பெருமை தனையுணர்வோம்!
மங்காப் புகழ்மிகு தமிழ்நிலத்தில் உவப்புடனே
சங்கவலம் வருவோம்! இன்பத்தமிழ் பெறுவோம்!

**கொற்றவன்**



தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தமிழ் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
TAMIL PUTHANDU VAZTHUKAL
மலர்ந்திருக்கும்
தமிழ்
சித்திரைப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
வாழ்த்துக்கள்



கட்டுரை

# தஞ்சை

### கங்கை கொண்ட சோழபுரத்தை சோழர் தலைநகராக மாற்றியது ஏன்?

சோழர்களின் ஆட்சியில் தலைநகராக விளங்கிய தஞ்சாவூர் வளமான நிலப்பரப்பை உடையது. பெருவுடையார் கோவில் எனும் பிரகதீஸ்வரர் ஆலயம் உள்ள பகுதி.

தந்தை ராஜராஜசோழன் பதவியில் இருக்கும் போதே கி.பி. 1012ஆம் ஆண்டு இணை அரசனாகப் பதவியேற்றார் ராஜேந்திர சோழன். அடுத்த இரு ஆண்டுகளில் சோழப் பேரரசின் அரியணை முழுவதுமாக அவர் வசம் வந்து சேர்ந்தது. கி.பி. 1014ஆம் ஆண்டு முதல் தஞ்சையில் மணிமுடி சூடினார் ராஜேந்திர சோழன்.

அரசனாகப் பதவியேற்றதும் அவர் அரண்மனைக்குள் இருந்த நாட்களைவிட, போர்க்களத்தில் இருந்த நாட்கள்தான் அதிகம். போரில் அரசர்களை வீழ்த்தி அவர்கள் ஆட்சிப்பகுதியை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் அரசர்கள் பலரைப் பார்த்திருப்போம். ஆனால் வீழ்த்தியவர்களிடமே மீண்டும் அரியாசனத்தை ராஜேந்திர சோழன் ஒப்படைத்த நிகழ்வு, ஒருமுறை அல்ல, பல முறை மிகச் சாதாரணமாக நிகழ்ந்திருக்கிறது. கங்கை முதல் கடாரம் வரை நடைபெற்ற பல போர்களில் அவர் வென்ற போதிலும், அப்பகுதிகள் அந்தந்த அரசர்களிடமே மீண்டும் வழங்கப்பட்டது. கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையில் தலைமைக்கு கட்டுப்பட்டு வரி செலுத்தும் அரசாக அவற்றை ராஜேந்திர சோழன் மாற்றியதாக வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

சாளுக்கியர், பாண்டியர், சேரர், சிங்கள அரசர், வங்கதேச அரசர், கடார அரசர் என இத்தனை பேரை ராஜேந்திரன் வீழ்த்த எடுத்துக்கொண்ட மொத்த காலம் வெறும் 10 ஆண்டுகள்தான். அரசனாகப் பதவியேற்ற கி.பி. 1014 முதல் 1024 வரை போர்க்களம் மட்டும்தான் ராஜேந்திரன் தன் வாழ்வில் பார்த்தது.

ராஜராஜன் காலத்திலேயே சோழர்களின்







## க. மாயகிருஷ்ணன்

படைபலம் பெருகிய போதிலும், அவை உச்சம் பெற்றது ராஜேந்திரன் காலத்தில்தான். போருக்கு ஆயத்தமாகி படைகள் வெளியேறுவதும், வென்ற பின் ஆரவாரத்துடன் அரண்மனைக்கு திரும்புவதும் தஞ்சையில் வழக்கமாக நடைபெறும் நிகழ்வுகள்.

ஆனால் ராஜேந்திரன் காலத்தில் ஒரே நேரத்தில் அவர் கங்கை நோக்கிப் படையெடுக்க, அவரது தளபதிகள் ஈழம் நோக்கிப் படையெடுப்பர். இதனால் மிக அதிக படைகள் வருவதும் போவதுமாக இருக்கும். இவையனைத்தும் நெற்களஞ்சியமான தஞ்சைக்கு வேறு மாதிரியான இடைஞ்சலைக் கொடுத்தது. இருந்தபோதிலும் அரசாங்கம் பலமாக நடைபெறுவதற்கு பொருளாதாரம் மிக முக்கியம். அந்தப் பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு வணிகம் பெருகிட வேண்டும். அதன் அடிப்படையில் வணிகர்களுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து உள்நாடு மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் ஏற்றுமதி வணிகம் நடைபெற வேண்டும் என்ற நோக்கில் ராஜேந்திர சோழன் சிந்தித்துச் செயல்படுத்திய திட்டத்தின் இறுதி வடிவம்தான் தலைநகரமான கங்கை கண்ட சோழபுரம்.




தஞ்சாவூரில் இருந்து எப்படி கங்கைகொண்ட சோழபுரம் தலைநகராக உருவாக்கப்பட்டது என்பது பற்றி கங்கைகொண்ட சோழபுரம் மேம்பாட்டுக் குழும தலைவரும்,



பொறியாளருமான கோமகன் கங்கைகொண்ட சோழபுரம் உருவாக்கம் குறித்து விளக்கினார். "இந்தப் பகுதி வணிக நகரமாக உருவாக்கப்பட்டதில் கொள்ளிடம் என அழைக்கப்படும் ராஜேந்திர சோழப் பேராறு உறுதுணையாகவும் முதன்மைக் காரணியாகவும் இருந்தது.



சோழப் பேரரசு வணிகத்திற்கு முன்னுரிமை வழங்கிய காலகட்டத்தில் சிறந்து விளங்கிய பல்வேறு வணிக குழுக்கள் பற்றிய செய்திகள் மூலம் இதை உணரலாம். இந்திய பெருங்கடல் பரப்பும், இந்தியா, இலங்கை, தென்கிழக்கு ஆசிய கடற்கரைகள் அனைத்துமே சோழ ஆதிக்கத்தின் கீழே இருந்தன. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து சிறப்பாக இருந்ததையும் அது துறைமுகத்தோடு நிலவழி மூலமும் இணைக்கப்பட்டிருந்தது என்பதையும் தற்போதைய நீர் வழித்தடங்களை ஆய்வு செய்வதன் மூலம் அறிய முடியும்," என்று பொறியாளர் கோமகன் கூறினார்.



சோழர்களின் நீர் ஆதார அமைப்புகள் அரச குடும்பத்தினர் பெயரில் வழங்கப்பட்டிருப்பது அந்த அமைப்புகளின் மீது அவர்கள் கொண்டிருந்த ஆதிக்கத்தை, பங்களிப்பை, ஈர்ப்பை வெளிப்படுத்துவதாக உள்ளது. "ராஜேந்திர சோழ பேராறு என்னும் கொள்ளிடம் ஆறு, கடல் முகத்துவாரம் காவிரி பூம்பட்டினத்திற்கு வடக்கே 6 மைல் தொலைவில் உள்ளது. இந்தக் கழிமுக கடற்கரை சங்க காலத்தில் இருந்தே துறைமுகத் தகுதியைப் பெற்று கடல் வணிகத்தில் சிறந்து விளங்கியது. இதை அகப்புறச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

பட்டினப்பாலை என்ற நூலில் உள்நாட்டில் கடற்கரை உப்பை விற்று பதிலீடாக விளைபொருளை ஏற்றி வந்த படகுகள் வரிசையாக குதிரைகள் நிறுத்தப்படுவது போல் நிற்கின்றன எனக் கூறுவதன் மூலம் தெரிந்துகொள்ள முடியும். தஞ்சையில் இருந்து 50 கி.மீ தொலைவில் காவிரி வடிநிலப் பகுதியான கொள்ளிடத்தின் வடகரையில் ஒரு பெரிய நிலப்பகுதி தேர்வு செய்யப்பட்டது. தலைநகருக்கு நீர்வளம் மிக முக்கியம் என்பதால் 20 மைல் நீளத்திற்கு ஒரு பெரிய ஏரியை ராஜேந்திரன் வெட்டினான். தஞ்சையைப் போல மிகப் பெரிய அரண்மனையைக் கட்டி எழுப்பினான். அகழி, கோட்டைச் சுவருடன் 1,900 மீட்டர் நீளமும் 1,350 மீட்டர் அகலம் கொண்டதாக புதிய தலைநகரம் கட்டி எழுப்பப்பட்டது," என்கிறார் கோமகன்.

கங்கைகொண்ட சோழபுரம் தலைநகரமாக



உருவாக்கப்பட்டதில் கொள்ளிடம் என அழைக்கப்படும் ராஜேந்திர பேராறு உறுதுணையாகவும் முதன்மைக் காரணியாகவும் இருந்தது. இந்த ஆற்றின் தென்கரை கரிகாலக்கரை எனவும் வழங்கப்படுகிறது.நீர்வழி போக்குவரத்து தடத்தை பயன்படுத்திய வணிகக் குழுக்கள்

ராஜேந்திர சோழன் காலத்திய கொள்ளிடம் நீர்வழிப் போக்குவரத்து தடமாக இருந்ததற்கான சான்றுகளை உறுதிப்படுத்த அக்காலத்தில் இருந்த வணிகக் குழுக்கள் மற்றும் அவற்றின் சேவைப் பிரிவுகள் நகரங்கள் பற்றி தெரிந்துகொள்வது அடிப்படை. சோழர்கள் காலத்திய சமூகம் பெரு வளர்ச்சியடைவதற்கு கடல் வணிகம் பெரிதும் உதவியதுஅது பதினோராம் நூற்றாண்டில் மிகச் சிறப்பாகவே செயல்பட்டது. சோழர்கள் காலத்து வணிக குழுக்கள் தங்களுக்கான பாதுகாப்புப் படையை வைத்துக்கொள்ளும் வலிமையையும் உரிமையையும் பெற்றிருந்தனர்.

“வீரர், அங்ககாரன், கைக்கோளர், கொங்காள்வர், செட்டி, வலங்கை வீரர், வீர கோடியார், சீட்புலி உள்ளிட்ட 21 பிரிவுகள் இருந்தன. இவர்கள் வணிக நகரங்களிலும் நீர்வழி தடத்திலும், நில வழித்தடத்திலும் முக்கிய இடங்களில் வாழ்ந்திருக்கின்றனர். இவர்கள் இருந்த இடம் இவர்கள் பெயராலேயே அழைக்கப்பட்டு இன்றும் சற்று மறுவி அவர்கள் பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகிறது. கொள்ளிட தென் கரையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் உள்ள சிட்புலியூர் தற்போது சீப்புலியூர் என்று அழைக்கபடுகிறது. கடலூர் மாவட்டம் கொள்ளிட வடகரை காட்டுமன்னார்குடி வட்டத்தில் செட்டித்தாங்கல் ஊராட்சி, அரியலூர் மாவட்டம் கொள்ளிட வடகரை தா.பழூர் வட்டத்திற்கு உட்பட்ட அங்ககாரன் பேட்டை தற்போது அன்னக்காரன் பேட்டை என்று அழைக்கப்படுகிறது. தா.பழூர் வட்டம் அங்ககார நல்லூர் தற்போது அங்கராயநல்லூர் என்று அழைக்கப்படுகிறது. இருகையூர், இடங்கண்ணி ஆகிய ஊர்கள் தற்போதும் அதே பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகின்றது.மேற்கண்ட ஊர்கள் வணிகக் குழுக்களுக்கு உதவும் நோக்கில் அவர்கள் வழித்தடத்தில் இருப்பிடம் கொண்டு அவர்கள் வணிக பயணத்திற்கு ஏதுவாக கொள்ளிடக்கரை ஓரமாகவே வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு இது மிகப்பெரிய சான்று,” என்று ஊரின் பெயர்களைப் பழங்கால பெயர்களுடன் படித்து தற்போது வழங்கப்படும் பெயர்களையும் விவரித்தார் கோமகன்.




கங்கைகொண்ட சோழபுரம் சோழர்களின் தலைநகரமாக மட்டுமல்லாது வணிக நகரமாகவும் வடிவமைக்கப்பட்டது என்பதற்கான சான்றுகள் நிறைய உள்ளன. அவ்வகை வணிக நகரத்திற்கு நிலவழிகள்,நீர் வழிகள் அடிப்படை.அவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகவும் அமைந்திருந்தன. பயணத்திற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களும் நீர் தேவையும் அதற்குக் காரணம்.இதன்படி கங்கைகொண்ட சோழபுரத்தை இணைக்கும்

பெருவழிகள் நீர் தடத்தை ஒட்டியே இருந்துள்ளன. இவை பெரும்பாலும் வணிகத் தலங்களையும் அதிகார மையங்களாக விளங்கிய ஊர்களையும் இணைத்து இருக்கின்றன. கொள்ளிடக்கரை இணைக்கும் திருமுட்டம் ஏறப்போன பெருவழி என முக்கிய வழிகள் பெருநகரங்களை இணைக்கும் சாலைகளுடன் இணைந்து இருந்தன என்பதற்கு கல்வெட்டு ஆதாரங்களும் உள்ளன," என்று



இருபுறமும் உள்ள சாலை அக்கால பெரு வழியாக இருந்தன.

அதைத்தொடர்ந்து பொறியாளர் கோமகன் பெருவழிச்சாலை இணைத்த ஊர்களைப் பற்றி விளக்கி கூறினார். "மீன்சுருட்டி, காட்டுமன்னார்குடி, வீராணம் ஏரி, நெடுஞ்சேரி ஆகிய ஊர்களை சிதம்பரத்துடன் இணைக்கும் இராசராசன் பெருவழி, ஆயுதக்களம், உதயநத்தம், சோழமாதேவி, குணமங்கலம், விக்கிரமங்கலம், விளாங்குடி, கீழப்பழுவூர் பகுதிகளை திருச்சியுடன் இணைக்கும் விளாங்குடையான் பெருவழிஉட்கோட்டை, வானாதிராயன் குப்பம், வீரசோழபுரம், குழவுடையார் பகுதிகளை அணைக் கரையுடன் இணைக்கும் கூழையானை போனபெருவழி. (கூழை என்றால் படை அணி என்று பொருள்)



பள்ளி விடை, வெத்யார்வெட்டு, கல்லாத்தூர், ஆண்டிமடம், விளந்தை, தஞ்சாவூர் பகுதிகளை திருமுட்டத்துடன் கூறினார்.கங்கைகொண்ட சோழபுரத்தின் தெற்கு வாசல் வேம்புக்குடியில் இருந்துள்ளது. வேம்புக்குடி வாசலுக்கு போன வழியை பற்றி கல்வெட்டு தெளிவாகக் குறிப்பிடுகின்றது. கொள்ளிடத்தின் வடகரையில் அணைக்கரை வழியாகத்தான் கங்கைகொண்ட சோழபுரத்திற்குள் நுழைய முடியும்.

வேம்புக்குடி வாசல் ராஜேந்திர சோழ பேராற்றின் வடகரை ஊராக மட்டுமல்லாது உள்நாட்டு படகு துறையாகவும் இருந்துள்ளது. வீரநாராயண பேரேரி எனப்படும் வீராணம் ஏரிக்கு நீரேற்றும் மதுராந்தகப் பெரிய வாய்க்கால் என்று அழைக்கப்படும் வடவாறு இங்கிருந்துதான் பிரிந்து கிளை ஆறாகச் செல்கிறது."உள்நாட்டு நீர் வழித்தட மரக்கலங்கள் துறையாகப் பயன்படுத்தும் வகையில் வேம்புக்குடிவாசலின் கரை வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த இடத்தில் கொள்ளிடம் தெற்கு தடம், வடக்கு தடம் என இரண்டாகப் பிரிந்து நடுவில் ஒரு திட்டை உருவாக்கி மீண்டும் சிறிது தூரத்தில் ஒன்றாக இணைந்து ஓடுகிறது. அத்திட்டு அணைக்கரை என இன்றும் வழங்கப்படுகிறது," என்று கூறினார் கோமகன்.

கொள்ளிடத்தில் இந்தத் திட்டின் குறுக்கே ஆங்கிலேயரால் கி.பி.1826இல் கதவணைகள் அமைக்கப்பட்டது. இதற்குத் தேவையான கற்கள் கங்கைகொண்ட சோழீச்சுரத்தை தகர்த்து எடுத்துச் செல்லப்பட்டது. சென்னை— கும்பகோணம்— தஞ்சை தேசிய நெடுஞ்சாலை ழிபி45சி தடம் இதன் மீதுதான் செல்கிறது.இயற்கையை மாற்றுவது அவ்வளவு எளிதல்ல, ஆனால் அறிவியல் நுட்பத்துடன் இணைந்து இயற்கையை மனித வளத்திற்கு தகுந்தவாறு மாற்றிய பெருமை ராஜேந்திர சோழனையே சேரும் என்று கூறிய பொறியாளர் கோமகன் எவ்வாறு மாற்றப்பட்டது என்பதையும் விவரித்தார்.

“இயற்கை அமைப்பில் இந்த இடத்தில் கொள்ளிடம் இரண்டாகப் பிரிவதற்கான சாத்தியக்கூறுகள் நிச்சயமாக இல்லை. மேற்கிலிருந்து ஓடிவரும் நீர்த்தடம் வடவாறு எனப்படும், மதுராந்தக பெரிய வாய்க்காலுக்கு நீரை வழங்கி தன் வேகத்தை குறைத்துக் கொள்வதோடு தன் இயல்பான வேகத்தோடு அதைக் கடக்கின்றது. இது தென்புறமாக தடம் மாறுவதற்கான நிலவியல் நீரியல் தேவையும் இல்லை இயற்கையாக ஆறு தன் போக்கிலிருந்து வடபுறமாக தான் தடம் மாறுகின்றன. இதற்கு வடபுல காந்தவிசை காரணம். கொள்ளிடம் இவ்விடத்தில் இயற்கையாக நிலவியல் நீரியல் அடிப்படையில் வடக்கு திசையில்தான் ஓடியிருக்க வேண்டும். ஆனால் இது சோழனின் மனித ஆற்றலால் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

கொள்ளிடம் நீர் வழித்தடமாகப் பயன்படுத்தப்பட்டபோது அதற்கான முதன்மை உள்நாட்டு ஆற்றுத் துறையாக அணைக்கரை எனும் வேம்புக்குடி வாசல் வடிவமைக்கப்பட்டது. அதன்படி கொள்ளிடத்தில் தென்புறப்பகுதி மரக்கலங்களை ஆற்றுத் துறையில் கையாளுவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது,” எனத் தெரிவித்தார்.

சோழர்கள் நீரின் வேகத்தைக் கட்டுப்படுத்த அதன் நீர்பரப்பை அதிகப்படியாகக் கூட்டியுள்ளனர். மேற்கிலிருந்து வரும் நீரின் அளவு இரண்டாகப் பிரிகிறது. இதனால் நீரின் வேகம் மட்டுப்படுத்தப்படும். அகன்ற நிலப்பரப்பால் நீரியியல் பண்பு நீர் நிலையியல் பண்பாக மாற்றப்படுகிறது.இந்த அறிவியல் தத்துவத்தை ராஜேந்திர சோழன் வெகு லாகவமாகக் கையாண்டுள்ளார். கொள்ளிடம் வழியே வரும் மரக்கலங்களுக்கு இந்த இடம் ஆற்றுத் துறையாகப் பயன்பட்டு வணிக நகரத்திற்கான பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி தளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறியலாம்.இந்தத் துறையில் இருந்து படை அணிகள் (கூழை) மரக்கலங்கள் மூலம் நீர் வழித்தடம் வழியாக கிழக்கு கடலை விரைவாக அடையும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. வணிகப்படையினர் இந்த ஆற்றங்கரையை வாழ்விடமாகக் கொண்டதை இதன் மூலம் உறுதிப்படுத்தலாம். கடல் வழி வந்த கப்பல்களில் இருந்து உள்நாட்டிற்கு தோணி, படகுகள் மூலம் நீர்த்தடத்தின் வழியே வணிகப் பொருட்கள் வந்தன என்பதற்கு பட்டினப்பாலை பாடல்களே சான்று.

தஞ்சையில் இருந்து காவிரி வழியே மண்ணியாற்றை அடைந்து அதிலிருந்து பிரியும் நீர்த்தடங்கள் கொள்ளிடத்தில் இணையும் ஓடம் போக்கிகளின் தடம் இன்றும் உண்டு. அந்த இடம் படகுத்துறை, தோணித்துறை என வழங்கப்படுகின்றன.மண்ணியார் தலைப்பில் கதவணைக்கு அருகே ஓடம்போக்கி அணையும் தற்போது பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் இருக்கின்றது. மண்ணி ஆற்றில் இருந்து திருப்புரம்பியம் அருகே உள்ள கொந்தகை எனும் இடத்திலிருந்து பிரியும் ஓடம்போக்கி ஆறு கொள்ளிடத்தில் இணைகிறது.




திருப்பனந்தாள் அருகே மண்ணியாற்றில் இருந்து பிரியும் ஓடம்போக்கி நீர் தடம் கொள்ளிடம் தென்கரையில் இணைகிறது. அதேபோல் கொள்ளிடம் வடகரையில் உள்ள மருதையாறு வணிக நகரங்களை இணைத்து கொள்ளிடத்தில் கலக்கிறது. ராஜேந்திர சோழன் வடபுலத்தில் கங்கை வெற்றிக்குப் பிறகு வந்தடைந்த இடம் கொள்ளிடத்தின் தென்கரையில் உள்ள திரு லோக்கியம்.

இங்குள்ள “ராஜேந்திர சோழதேவர் கங்கை கொண்டு எழுந்தருளுகின்ற இடத்து தொழுது” எனத் தொடங்கும் கல்வெட்டும் இதை உறுதி செய்கிறது. ராஜேந்திர சோழன் கடல் பகுதியில் இருந்து கொள்ளிட நீர் வழித்தடத்தில் வந்து சேர்ந்த இடம் இதுவே ஆகும்.

ராஜேந்திர சோழன் கட்டமைத்த நீர்வழி, நிலவழி தடங்கள்

கொள்ளிடத்தில் வடக்கு தெற்கு தடங்களின் நிலவியல் மண்ணடுக்குகளை ஆய்வு செய்யும்போது வடக்குத்தடம் கிடை மட்டத்தில் இருந்து 9 மீட்டர் ஆழத்திலேயே ஆற்றின் உறுதியான படிமமான கங்கர் எனப்படும் சுண்ணாம்புப் பாறை உள்ளது. ஆனால் இந்த வகை பாறை தெற்கு தடத்தில் சுமார் 20 மீட்டர் ஆழத்தில்தான் கிடைக்கிறது.

வடக்குத் தடத்தில் ஆறு நீண்டகாலம் பாய்வதால்



சுண்ணாம்புப் பாறை படிமம் வரை இயற்கை மண் அடுக்குகள் அரிக்கப்பட்டு 9 மீட்டர் அளவிலான மணல் படிமத்தால் நிரப்பப்பட்டுள்ளது. ஆனால் தெற்கு தடம் வடக்குத்தடத்தைவிட 11 மீட்டர் சுண்ணாம்புப் பாறையின் படிமம் மேற்பரப்பில் கூடுதலாக உள்ளது. இந்த அடுக்கின் மீதான மணல் சேர்க்கையும் குறைவாகவே உள்ளது. வடக்கு தடத்தோடு தெற்கு தடத்தை ஒப்பிடும்போது சுண்ணாம்புப் பாறையின் மேல் அடுக்குகள் வெவ்வேறான தன்மையுடையதாகவும் உள்ளது.

வடக்குத்தடத்தின் வடகரையிலிருந்து வடவாறு எனும் மதுராந்தக பெரிய வாய்க்கால் பிரிந்து செல்வதால் அதற்கான நீர் ஏற்றம் வடபுறத்தின் கிடைமட்ட நீரேற்றத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும். இதனால் வடபுறத்தின் மண் அடுக்கு அரிப்பும், மேலடுக்கு மணல் சேர்க்கையும் அதிகமாக இருக்க வாய்ப்புண்டு. ஆனால் தெற்கு புறத்தடத்தில் அவ்வகையான பெரிய வாய்க்கால் அமைப்புகள் இல்லை. வடக்கு புற வாய்க்கால்கள் பிற்காலத்தியவை.


கொள்ளிட ஆற்றில் வடபுற தடத்தில் உள்ள அணைக்கரை, வேம்புக்குடி வாசல் பகுதியில் நீரியல் பண்புகளான நீரோட்டம்,நீரோட்ட வேகம், மற்றும் ஆற்றின் போக்கு அடிப்படையிலும் இயற்கையானது ஆகும். தென்புறத் தடம் அதன் அமைப்பின் அடிப்படையில் செயற்கையாகவே உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மண் அடுக்குகள் ஆய்வின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. கொள்ளிடத்தின் மீது மனித ஆற்றல் ஆதிக்கம் செலுத்தியுள்ளது இதன் மூலம் தெளிவாக அறிய முடியும். நீரியல் தன்மையை தளர்த்தி நீர் நிலையியல் தன்மை புகுத்தப்பட்டுள்ளது உறுதிப்படுத்தப்படுகிறது. அந்த ஆதிக்கத்தை செலுத்தியது ராஜேந்திர சோழன் என்பதால் தான் கொள்ளிடம் ராஜேந்திர சோழ பேராறு என அழைக்கப்படுகிறது. அந்த இடத்தில் மரக்கலங்களுக்கு ஆற்றுத் துறையை உருவாக்கி நீர் வழித்தடத்தில் கூடுதல் வசதியை மேம்படுத்தியதே இதற்குக் காரணம். வணிக நகரமாக அமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இடத்தில் கடற்பயணத்திற்கு ஏதுவான உள்நாட்டு நீர் வழித்தடமும் அமைக்கப்பட்டு அது நிலவழி பெருவழிகளோடு இணைக்கப்பட்டிருக்கிறது.




இவ்வாறு ராஜேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரத்தை தலைநகராக மாற்றியதுடன் மக்களின் பொருளாதாரம் மேன்மை பெறுவதற்கும் படைகள் போர்களுக்குச் சென்று வர நிலவழி மற்றும் நீர் வழித்தடங்களை நேர்த்தியாக உருவாக்கியதை மண் ஆய்வுகளுடன் தெளிவாக பொறியாளர் கோமகன் விவரித்தார்.

கங்கை வரை ராஜேந்திரன் படையெடுத்து வென்ற பிறகு, அங்கிருந்த அரசர்களை வைத்து கங்கை நீரைத் தனது தலைநகருக்கு எடுத்து வந்ததன் நினைவாக, நகருக்கு “கங்கை கொண்ட சோழபுரம்“ என்ற பெயர் நிலைபெற்றதாகக் கூறுகிறார் விழுப்புரம் பேரறிஞர் அண்ணா கலைக் கல்லூரி வரலாற்றுத் துறை பேராசிரியர் ரமேஷ்

பிபிசி தமிழிடம் இந்த நகரின் பெயருக்கான பின்னணியை விவரித்தார்.



கி.பி.1025ஆம் ஆண்டு சோழப் பேரரசின் புதிய தலைநகரம் உதயமானது. இதை திருவாலங்காட்டு செப்பேடுகள் உறுதி செய்கின்றன. தலைநகர் மாற்றம் பெற்றபின் கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் ஆட்சி செய்தார் ராஜேந்திரன். இக்காலத்தில் சிற்சில போர்கள், கலகங்கள் நடைபெற்ற போதிலும், அவை மக்களின் அமைதிக்கும் வாழ்விற்கும் இடையூறுகளை ஏற்படுத்தவில்லை.ஆதலால் கி.பி 1025 முதல் 1044 வரையிலான அமைதிக் காலத்தை “பிற்கால சோழர்களின் பொற்காலம்” என வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ராஜேந்திர சோழர் மன்னராட்சியிலும் கூட்டாட்சி முறையை நெறிப்படுத்தியவர் கூறுகிறார் பேராசிரியர் ரமேஷ்.“சோழர்களால் கைப்பற்றப்பட்ட பிறகும், பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும் அந்த மன்னர்களே தொடர்ந்து ஆட்சி செய்து வந்தனர். ராஜேந்திரன் கங்கை முதல் கடாரம் வரை வென்றபோதும் இந்த நிலை நீடித்தது.வென்ற பகுதிகளை முழுவதுமாகத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து ஆட்சி நடத்தியிருந்தால் ராஜேந்திரன் தனியாளாக 4 லட்சம் சதுர கி.மீ. பரப்பளவை ஆண்டிருப்பார். தற்போதைய இந்திய நாட்டின் பரப்பளவே அதைவிடக் குறைவுதான். (இந்தியாவின் பரப்பளவு 3.287 லட்சம் சதுர கி.மீ.)” என்றும் பேராசிரியர் ரமேஷ் கூறினார்.

நீர்வழித் தடத்தின் மூலமாகத் தனது நாட்டை வளமான நாடாகவும் வணிகத்தின் மூலமாக பொருளாதார மேன்மை மிகுந்த நாடாகவும் ராஜேந்திர சோழன் மாற்றினான். கங்கை வெற்றிக்காக ராஜேந்திரன் கங்கைகொண்ட சோழன் என்னும் புகழ்பெற்ற பெயரைப் பெற்றதுடன் அவர் அமைத்த புதிய நகரம் கங்கைகொண்ட சோழபுரம் என அழைக்கப்பட்டது.திருக்கழிப்பாலை பால்வண்ணாநாதர் கோவிலில் நான்கு சோழர்கால கல்வெட்டுகள் உள்ளன. அதில் முதலாம் ராஜராஜ சோழனின் 26வது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டில் மஹாதேவன் என்பவன் நுந்தா விளக்கு எரிப்பதற்காகப் பத்து காசுகளை தானமாக வழங்கியுள்ளதைக் குறிப்பிடுகிறது.

ராஜேந்திர சோழன் காலத்தில் வெளியிடப்பட்டுள்ள சிதைந்த கல்வெட்டு ஒன்றில் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்த திரிபுவனமாதேவி பேரங்காடியை சார்ந்த கூத்தன் அடிகள் என்ற வணிகன் பொன் வழங்கியுள்ளதையும், இவன் பெருநல்லூர் என்ற ஊரைப் பூர்விகமாகக் கொண்டவன் என்றத் தகவலையும் கூறுகிறது.இம்மன்னரது மற்றொரு சிதைந்த கல்வெட்டில் பூர்வதேசம், கங்கை, கடாரம் கொண்ட போன்ற சொற்களும், கங்கைகொண்ட சோழபுரம் மாளிகை குளியல் அறையின் பணிப் பெண்ணாகப் பணியாற்றிய ஒருவர் இக்கோவிலுக்கு தானங்களை வழங்கியுள்ள தகவலையும் சுட்டுகிறது.

“விக்கிரம சோழப் பிரம்மமாராயன் என்பவன் திருக்கழிப்பாலை பால்வண்ண நாதருக்கு நாள்தோறும் ஒரு நாழி தும்பைப்பூ வழங்குவதற்காகத் தானம் வழங்கியுள்ளதை மற்றொரு துண்டுக் கல்வெட்டின் வாயிலாக அறியலாகிறது. எனவே ராஜேந்திர சோழன் காலத்தில் கொள்ளிடம் ஆற்றின் வழியாகத் தலைநகர் கங்கைகொண்ட சோழபுரத்திற்குச் செல்லும் நீர்வழிப் பாதையின் அருகில் இக்கோவில் கட்டப்பட்டிருந்ததாலேயே கங்கைகொண்ட சோழபுரம் பேரங்காடியைச் சார்ந்த வணிகரும், மன்னரின் மேலாண்மையைப் பெற்றிருந்த பணிப்பெண்ணும் இக்கோவிலுக்கு தானங்களை வழங்கி சிறப்பித்துள்ளதை நோக்கும்போது தேவிக்கோட்டைக்கும், கங்கைகொண்ட சோழபுரத்திற்கும் இடையே நிச்சயமாக கொள்ளிடம் ஆற்றின் வழியாக நீர்வழிப்பாதை ஒன்று செயல்பட்டிருக்க வேண்டும்.”




மேற்கண்ட வணிகனின் ஊரான பெருநல்லூர் என்ற ஊர் இன்று நல்லூர் என்ற பெயருடன் மகேந்திரப்பள்ளியின் தெற்குப்பகுதியில் அமைந்துள்ளது. மேலும் கங்கை பகுதியின் வெற்றியின் சின்னமாகத்தான் சோழ கங்கம் என்னும் பேரேரி வெட்டப்பட்டது. திருவாலங்காட்டு செப்பேடுகள் இதை “ஜலமயமான சயத்தம்பம்“ நீர்மயமான வெற்றித் தூண் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சரித்திரத் தொடர்



# சேரமான் கனவு

45

## 45. சிங்கத் தீவில் சிங்க ராணி!

கொற்றவன்

செங்கதிரோன் தன் செங்கதிர்களைப் பரப்புவதற்குள்ளாக, இருள் விலகாத அதிகாலை வேளையிலே தெலோஸ் தீவுக்குள் ஒரு கலவரச் செய்தி பரவிக் கொண்டிருந்ததால், வீரர்கள் தங்கள் படைக்கலன்களைச் சுமந்தபடி கடற்கரையை நோக்கி விரைந்தனர்.

‘சிங்கமுகத்துடன் முகப்பில் ஈட்டிகளைத் தாங்கியபடி பிரமாண்டமான ஒரு போர்க்கப்பல் வந்து நிற்கிறது. நம் தீவை அக்கப்பல் சூறையாட வந்திருக்கிறது!’

மேற்படித் தகவல்தான் தீவு முழுதும் திகில் கிளப்பிக் கொண்டிருந்தது.

தங்கள் தூக்கத்தை விரட்டியடித்த அக்கப்பலை நேரில் காணக் கடற்கரைக்கு அணிவகுத்த வீரர்கள், அங்கு கண்ட காட்சியால் மலைப்பில் சிலையாகி நின்றார்கள்.

அதேநேரம் கடலரசியில்...



கரையை நெருங்கி நின்றதும், தீவின் வீரர்கள் கடலரசி மீது தாக்குதல் நடத்தக்கூடும் என்பதை முன்னரே கணித்து விட்ட வளவத்திரையன், கப்பல் முகப்பில் உள்ள அன்னச் சிறகு போலிருந்த படகொன்றில், தாலியாவையும் அவளது தோழிகள் இருவரையும் துணையாக அவர்கள் நாட்டு வீரர்கள் நால்வரையும் அனுப்பி வைத்து, தெலோஸ் தீவுக்கு கடலரசி வந்த விவரத்தைத் தெரிவிக்குமாறு பணித்தான்.

முதலில் வீரர்களை அனுப்ப இருந்தவனிடம், தீவில் தன்னை அறிந்தவர்கள் அதிகம் என்றும், தான் சென்று நிலைமையை எளிதில் விளக்கிவிட முடியும் என்றும் பிடிவாதமாக தாலியா கூறிடவே, அவளது வார்த்தைகளை ஏற்று அவர்களுடன் அனுப்பிட இசைந்தான் வளவத்திரையன்.

கடலரசியைக் கண்டு அத்தீவின் வீரர்கள் சிலையாகி மலைத்து நிற்பதைப் போலவே கடலரசியில் இருந்த வீரர்களும் தீவின் கரையில் தென்பட்ட வீரர்களையும், அவர்களிடையே வரிசையாக அணிவகுத்து நின்ற சிங்கங்களையும் பார்த்து பிரமித்துப் போயினர்.

ஆழியை நோக்கி நிமிர்ந்து பார்க்கும்படி நின்றிருந்த அந்தப் பெண் சிங்கங்கள், ஆடாமல் அசையாமல் இருப்பதை உற்றுநோக்கி உணர்ந்த பின்னரே அவை, உயிரற்ற சிங்கச் சிலைகள் என்பது புரிந்தது.

தொலைவில் கப்பலிலிருந்து பார்க்கும்போது, உண்மையிலேயே கரையில் சிங்கங்கள் வேட்டைக்குத் தயாராக இருப்பது போன்றதொரு

உணர்வினைத் தோற்றுவிக்கும். புதிதாக அத்தீவுக்கு வருபவர்களின் கலங்கள் அதைக் கண்டு கலக்கம் அடையும். இதற்காகவே அந்தப் பெண் சிங்கச் சிலைகளை அமைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டான் வளவத்திரையன்.



"வரிசைகட்டி அமர்ந்திருக்கும் இந்தச் சிங்கங்களைப் பார்க்கும் எவரும் இத்தீவுக்கு வரமாட்டார்கள்! அதற்காகத்தான் இந்த ஏற்பாடு!" என்றான் வில்லவன்.

தன் மனவோட்டத்தைப் புரிந்து கொண்டவனாகப் பேசிய வில்லவனைக் கண்டு புன்னகைத்த வளவத்திரையன், "உண்மைதான்! ஆனால் வருபவர்களை எதிர்கொள்ளும் அளவுக்குப் படைபலம் இல்லாதாவர்கள் என்பதையும் அவர்கள் நமக்கு உணர்த்துகிறார்கள்!" என்றான்.

"அதெப்படி இவர்களிடம் படைபலம் இல்லை எனக் கூறுகிறாய்?"

"அகல உழுவதைவிட ஆழ உழுவது நன்று என்பார்களே! அதை உணராதவர்களாக அல்லவா இந்த வீரர்கள் இங்கே வரிசைகட்டி தங்கள் எண்ணிக்கையைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்!"

வளவத்திரையன் அவ்விதம் கூறியதைக் கேட்டதும்தான் வில்லவனுக்கும் உண்மை புரிந்தது. மொத்தமாய் இருநூறு முதல் முன்னூறுக்குள் மட்டுமே அங்கே வீரர்கள் கரை நெடுக வேல்கம்பு நட்டதுபோல் வரிசை கட்டி நின்றிருந்தார்கள்.

"நிற்கும் இவ்வீரர்கள் ஒரு குழுவாக நின்றிருந்தால், படைபலத்தின் ஒரு பிரிவு மட்டும் வந்திருக்கிறதென எண்ணலாம். இவர்கள் தங்கள் பலத்தை மிகைப்படுத்திக் காட்டவே கரைநெடுக வந்து கடைபரப்பி வைத்ததுபோல் இப்படி நிற்கிறார்கள். போதாக்குறைக்கு சிங்கச் சிலைகளும் புதியவர்களைப் பயமுறுத்தும் நோக்கிலேயே வைக்கப்பட்டிருக்கிறது. எனவே இச்சிறு தீவுக்கு அடிக்கடி அந்நியர்களால் தொல்லை நேர்கிறது என நினைக்கிறேன்!" எனக் கூறிய வளவத்திரையனின் கூர்த்த மதியைக் கண்டு வியந்தபடி அங்கு வந்தார் தியோதாராவின் குழுவைச் சேர்ந்த ஒரு முதியவர்.

"சரியாகச் சொன்னீர்கள் தம்பி! இத்தீவின் சூழலைக் கணநேரத்தில் கச்சிதமாகக் கணித்து விட்டீர்கள்!" தமிழ் நன்கறிந்தவராக இருந்த அவர், மேலும் தொடர்ந்தார்.

"சேர நாட்டில் இருந்து புறப்படும்போது, இவ்வளவு பெரிய கப்பலின் பொறுப்பை இந்த இளைஞனிடம் கொடுத்திருக்கிறார்களே என நானும் சற்று கவலை கொண்டேன். ஆனால் தாங்கள் மிகச் சிறந்த கடலோடி என்பதை இந்தப் பயணம் முழுதும் கண்டுணர்ந்து விட்டேன். எதிர்காலம் உங்களை மிக உயரத்தில் ஏற்றி வைக்கும். இங்கே எங்களைப் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்த்ததற்கு மிக்க நன்றி தம்பி!" என அவனது கரங்களைப் பற்றிக் கொண்டு நெகிழ்ந்து கூறியவரின் வார்த்தைகளில் நன்றிப் பெருக்கும், அன்பும் கலந்திருந்தது.

வளவத்திரையனைப் பெரியவர் வாழ்த்தியது

கண்டு வில்லவன் பெருமிதம் கொண்டான்.

அதேநேரம்...

தெலோஸ் தீவின் கரையில் வாழ்த்தொலி கிளம்பியது.

வரிசை காட்டி நின்ற வீரர்கள் தங்கள் கைகளில் ஏந்தியிருந்த வாளினை உயர்த்திப் பிடித்து "ஓஹோ! ஓஹோ!..." என கிரேக்க மொழியில் ஏதோ ஒரு ஆரவாரத்தைக் கிளப்பி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஆழம் குறைவாக இருந்ததால் தொலைவிலேயே நங்கூரமிட்டிருந்த கடலரசியில் இருந்து அன்னப்படகின் மூலம் பயணித்து தியோதாராவும், வில்லவனும், வளவத்திரையனும் தீவில் கால் பதித்தனர். அவர்களுக்கு ராஜ மரியாதை வழங்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து கடலரசியிலிருந்து இறங்கிய 400 வீரர்களையும் பார்த்து மிரண்டே போயினர் அத்தீவின் கிரேக்க வீரர்கள்.



தாலியா மூலம் தகவல் தெளிவாகப் போய் சென்றதன் விளைவு என்பது கடலரசியில் இருந்த அனைவருக்கும் புரிந்துவிட்டது.

சற்றைக்கெல்லாம், தெலோஸ் மன்னர் பாரிஸ் மற்றும் அமைச்சர் பெருமக்களோடு தீவின் பெரும்புள்ளிகள் பலரும் வரிசைக் கட்டிக் கொண்டு கடலரசியை வரவேற்கத் திரண்டு வந்தனர்.




அந்த நாள், தெலோஸ் தீவின் ஒரு இனிமையான நாளாக அமைந்தது.

கரையை ஒட்டிய பகுதி

வீரத்துக்கு பெயர் பெற்றவர்களாக விளங்கும் தங்களையும் மிஞ்சும் அளவுக்கு சேரநாட்டு வீரர்கள் உடல் வலிமையும், போற்பயிற்சியில் திறம் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்த உடனையே அவர்களால் உணர முடிந்தது.

'பாம்பின் கால் பாம்பறியும்!' என்பது போல் 'வீரத்தை வீரமே அறியும்!' என்பது அங்கே உறுதிப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

மிகச் சிறப்பான ராஜஉபசாரத்துடன் அவர்கள் தீவுக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். வழிநெடுகிலும் மலர் தூவி அழைத்துச் செல்லப்பட்டனர்.

தியோதாராவையும் தாலியாவையும் கண்ட



அத்தீவின் பெண்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஒலி எழுப்பினர். அதைக் கண்ட வில்லவனும் வளவத்திரையனும் இப்பெண்கள் இருவரும் சாமானியப் பட்டவர்கள் அல்ல, ஏதோ உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் என்பதை உணர்ந்து கொண்டனர்.

ஆரவாரமும் அமர்க்களமுமாக அத்தீவின் கடற்கரை அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்த அந்நேரம்...

அதே கடற்பரப்பின் சற்றுத் தொலைவில் அணிவகுத்து நின்ற சில கப்பல்களில் இருந்தவர்கள் இக்காட்சிகளை எல்லாம் கவனித்த வண்ணம் இருந்தனர்.

விருந்தோம்பலில் சிறந்து விளங்கும் தமிழர் பண்பாட்டுக்குச் சற்றும் குறைந்ததல்ல தங்கள் நாட்டு விருந்தோம்பல் எனச் சான்று பகர்ந்திடும் விதத்தில் அமைந்திருந்தது தெலோஸ் மாளிகை விருந்து!

அந்த மாளிகையில் இருந்து பார்க்கும்போது வளவத்திரையனின் பார்வைக்குக் கடற்பரப்பில் கடலரசி நிற்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

தெலோஸ் தீவின் சிங்கச் சிலைகளைத் தாண்டி, சிங்கத் தீவை காத்து நிற்கும் சிங்கராணி போல் நங்கூரமிட்டிருந்தது கடலரசி!

மன்னர் பாரீஸ் அளிக்கும் இந்த விருந்து, இதுவரை தான் உண்டிராத புதுவித சுவையுடன் இருப்பதை உணர்ந்து ரசித்தான் வளவத்திரையன்.




தன் செம்பழுப்பு மீசையை நீவிவிட்டபடியே மன்னர் பாரீஸ், வில்லவனைப் பார்த்து எதுவோ வினவினார்.

“உங்கள் நாட்டு விருந்துபோல் இல்லாது போனாலும், எங்கள் நாட்டு விருந்தோம்பல் உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதா எனக் கேட்கிறார் மன்னர்!” என அவர் கூறியதை மொழிபெயர்த்தாள் தாலியா.

“சிறப்பான இந்த அறுசுவை உணவு வகைகளை மிஞ்சும் வகையில் இருக்கிறது அரசரின் உள்ளத்து உணர்வுகள்! இந்த விருந்து எனக்கு மட்டுமல்லாது, என்னைச் சார்ந்த நானூறு வீரர்களுக்கும் சேர்ந்து வழங்கப்பட்டிருக்கிறதே... அதைத்தான் இந்த விருந்தின் பெரிய மகிழ்ச்சியாக நினைக்கிறேன் தாலியா!” வில்லவன் பூரிப்புடன் கூறியதை அப்படியே மொழிபெயர்த்து மன்னரிடம் சொன்னாள் தாலியா.

அதன்பின் மன்னருக்கும் வில்லவனுக்கும் நடந்த உரையாடலை உடனுக்குடன் மொழிபெயர்த்த வண்ணம் இருந்தாள் தாலியா.

“உங்களுக்கு அளிக்கப்படும் இந்த விருந்தின் ஒவ்வொரு பண்டங்களும் உங்கள் வீரர்கள் நானூறுபேருக்கும் அளிக்கப்படுகிறது! எனவே



என் விருந்தில் எவ்வித ஏற்றத் தாழ்வும் இல்லை!”

“மிக்க நன்றி அரசே! உங்கள் நாட்டின் ஒரு பெண்ணைக் காப்பாற்றியதற்காக இவ்வளவு பெரிய மாளிகையில் உயர்தர விருந்து தரும் உங்கள் உள்ளம் மிகவும் உயர்ந்தது!”

வில்லவன் வார்த்தைகளை உள்வாங்கிய மன்னர் பாரீஸ், தன் அருகே அமர்ந்திருக்கும் தியோதாராவைப் பார்த்து புன்னகை புரிந்தபடியே பேசத் தொடங்கினார்.

“இவள் இந்நாட்டின் மாபெரும் கவிஞரின் ஒரே மகள்! மேலும் இவளே ஒரு கவித்தாரகைதான்! எனவே இவளைக் காப்பாற்றியதன் மூலம் எங்கள் மொழியின் பற்பல பண்பட்ட பாடல்களை நீங்கள் காப்பாற்றியிருக்கிறீர்கள் என்பதுதான் உண்மை!”

“அப்படியா? தியோதாரா ஒரு கவிஞரின் மகள் என்ற செய்தியை மட்டும்தான் தாலியா என்னிடம் கூறியிருக்கிறாள். ஆனால் தியோதாராவே ஒரு கவித்தாரகை என்பதை யாரும் எனக்குச் சொல்லவில்லையே!” என்ற வில்லவன் பார்வை, தியோதாரா மீதும் தாலியா மீது மாறிமாறிப் பாய்ந்தது.

அவர்கள் இருவரும் அவனைப் பார்த்து குறும்பாகச் சிரித்தனர்.



“இன்னும் என்னென்ன விவரங்கள் சொல்லாமல் மறைத்திருக்கிறார்களோ தெரியவில்லை!” எனக் குறும்புச் சிரிப்புடன் கூறிய வளவத்திரையன் ஒரு சிறு பழத்தை எடுத்து வாயில் போட்டான்.

மன்னர் பாரீஸ் கேட்டார், “நாங்கள் ஒரு சம்பவம் கேள்விப்பட்டோம். உங்கள் சேரநாட்டின் பேரரசர், தன் மகளையே ஒரு கவிஞருக்கு பரிசாக அளித்திருக்கிறார் என்று எங்கள் வணிகர்கள் கூறினர். அது உண்மையா?

மன்னர் கூறியதைத் தாலியா மொழிபெயர்த்ததும் வில்லவனுக்கு விக்கித்தது. தலையைத் தட்டிக்கொண்டு தன்னை நிலைப்படுத்திக் கொள்ள முயன்றான். அந்த நிலைமையைச் சமாளித்தான் வளவத்திரையன்.

“ஆம் அரசே! முற்றிலும் உண்மைதான்!”

“என்னவொரு விந்தை? ஒரு மன்னன் தன் மகளையே புலவனுக்குப் பரிசுப் பொருளாக அளித்ததை நான் புகழ்வதா? இகழ்வதா என்று தெரியவில்லை!” என்ற மன்னர் ஒருவிதமாகச் சிரித்தார். அதைக் கண்டதும் வில்லவன் தாலியாவை வினாக்குறியுடன் நோக்கினான். மொழிபெயர்ப்பில் இருந்தவள் சற்றே சங்கடமாக நெளிந்தாள்.

“சொல்! தாலியா! எங்கள் மன்னர் ஒரு புலவருக்காகத் தன் மகளைப் பரிசளிக்கவில்லை! எங்கள் மொழியை வளப்படுத்தும் அந்தப் பெரும் புலவருக்குப் பெரும் மரியாதையைத் தரவேண்டும் என்பதற்காகவே, தன் மகளைவிட விலையுயர்ந்த பரிசு கிடையாது என நினைத்தே, தன் மகளைப் பரிசளித்தார்!” வில்லவன் உணர்வுப் பிழம்பாக அதைக் கூறினான்

“ஆம் தாலியா! எங்கள் மாமன்னர் செங்குட்டுவர் தமிழ்மொழியை உயிராக நேசிக்கிறார். தந்தைக்குப் பின் தனையனும் தம் மொழிக்கு வளமூட்டி பெருமை சேர்க்க வேண்டும் என்ற காரணத்துக்காகவே பெரும்புலவர் பரணருக்குத் தன் மகனைப் பரிசளித்திருக்கிறார்!” வளவத்திரையனும் தன் பங்குக்கு விளங்கினான். அதனைத் தாலியா மொழிபெயர்த்தாள்.

மனம் நெகிழ்ந்தனர். சில கணங்கள் அமைதியைத் தொடர்ந்து மன்னர் பாரீஸ் வினா எழுப்பினார்.

“அந்தக் கவிஞர் அப்படி என்னதான் பாடல் பாடினார்? உங்களுக்கு அப்பாடல் பற்றி ஏதேனும் தெரியுமா?”

“தெரியாமலென்ன? மிக நன்றாகவே தெரியும்! எங்களுக்கு மட்டுமல்ல, சேரநாட்டு மக்கள் பலரும்கூட அப்பாடலை மிக அழகாகப் பாடுவார்கள்!” வளவத்திரையன் கூறினான்.



“அப்படியா? மொழியை உயிராக நேசிக்கும் மன்னரா உங்கள் மன்னர்? கேட்கவே மிகவும் நெகிழ்ச்சியாக இருக்கிறது! அவரது தாய்மொழிப்பற்று வியக்க வைக்கிறது. நான் அவரது கால்தூசுக்கு ஒப்பாக மாட்டேன்! அவர் பாதங்களுக்கு என் சிரம்பணிந்த வணக்கங்கள்!” தம் கண்கள் மின்ன, மன்னர் பாரீஸ் உள்ளம் நெகிழச் சொன்னதைக் கேட்டு தியோதாராவும் தாலியாவும் ஒருகணம் வார்த்தையற்றவர்களாக இருந்தனர்.

சிறிதுநேர அமைதிக்குப்பின் தாலியா மொழிபெயர்க்க, வில்லவனும் இளந்திரையனும்

“ஓ! அவ்வளவு புகழ்பெற்ற பாடலா அது? எங்கே அப்பாடல் பற்றி சற்றே விளக்குங்கள்!” என்ற மன்னரின் ஆர்வம், வளவத்திரையனையும் பற்றிக் கொண்டது.

“கேளுங்கள் அரசே!” என்றவன், பரணர் பாடிய பதிற்றுப்பத்து பாடலின் சில வரிகளைப் பாடினான். மிக அழகான இசைப்பாடலைப் போல் அவன் பாடிய அந்தச் சில வரிகளை அங்கிருந்தோர் அனைவரும் மெய்மறந்து

ரசித்தவண்ணம் இருந்தனர்.

“கோடுநரல் பௌவம் கலங்க வேல்இட்டு
உடைதிரைப் பரப்பில் படுகடல் ஓட்டிய
வெல்புகழ்க் குட்டுவன் கண்டோர்
செல்குவம் என்னார் பாடுபு பெயர்ந்தே.” என்ற வரிகளைப் பாடிய வளவத்திரையன், “என்ன அரசரின் வல்லமையைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது! தாலியா, சேரமன்னரைப் போல் நானும் இந்தத் தீவில் கப்பல்களை வேலியாக நிறுத்தவேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது!” அகமகிழ்வுடன் அந்த வார்த்தைகளை உதிர்த்தார் கிரேக்க சிற்றரசர்.



தாலியா பாடலின் பொருள் விளங்குகிறதா?”என வினவினான். அவள் இதழ்குவித்து இல்லை என்பதாகத் தலையசைத்தாள்.

“சொல்கிறேன், கேளுங்கள்! ‘கடலின் மீது நிற்கும் எங்கள் கலங்களைப் பார்த்தால், கடலுக்கே வேல்களால் வேலியிட்டதைப் போலிருக்கும். அவ்விதமாகக் கடலின் மீது கலம் செலுத்தும் எங்கள் மாமன்னரின் கடல்திறம் கண்டால் கடலே அஞ்சி நடுங்கிப் பின்வாங்கும்’ என்று பாடுகிறார் புலவர் பரணர்.”

வளவத்திரையன் கூறிய அந்தப் பாடல் மன்னருக்குப் புரியவைக்கப்பட்டபின் அவர் வியப்பின் உச்சிக்கே சென்றார். “ஆகா! அந்தப் புலவரின் புலமையே புலமை! ஆழ்கடலே கலங்கும்படி படை!... கடலுக்கே வேலியிட்டபடி கலங்கள் நிற்கும் காட்சி!... உங்கள்



அதன்பின் சேரநாட்டின் பெருமை, தெலோஸ் தீவின் பெருமை என இரு தரப்பினரும் தத்தமது நாட்டுச் செய்திகளைப் பகிர்ந்தபடியே அந்த விருந்து மகத்தான விருந்தாகிச் சிறந்தது.

வில்லவனையும் இளந்திரையனையும் கட்டித் தழுவி தன் அன்பை வெளிப்படுத்திய அரசர் மீண்டும் ஒருமுறை வில்லவன் கரங்களைப் பற்றித் தன் கண்களில் ஒற்றியபடி கூறினார்.

“வில்லவா! எங்கள் நாட்டின் கவித்தாரகையை காப்பாற்றிய உங்கள் உதவியை என் வாழ்நாள் உள்ளவரை மறக்கவே இயலாது!”

அதுகேட்டு தியோதாராவைப் பார்த்தான் வில்லவன். அவளது கண்கள் பொலிந்தன.

சற்றைக்கெல்லாம் சேரநாட்டு வீரர்கள் கிரேக்கத்தின் சிறப்பு விருந்தினர்களாக அரண்மனையில் தங்குவதற்கான ஏற்பாடுகள் தீவிரம் அடையத் தொடங்கின.

(கனவு தொடரும்...)


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
இனிய
தமிழ் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA™
VARSHA
1Kg
Traditional taste that Lingers

கவிதை

# கல்லும் கலையும்

காலம் முழுதும் பார்த்து ரசிக்கும்படி
கல்லிலே உன்னைச் செதுக்கி வைத்தான்
கலையழகில் மனம் கரையும் விதமாய்
கற்பனை யாலே வடிவ மைத்தான்!

ஆண்டுகள் எத்தனைக் கடந்து போயின
அறிந்தவர் இங்கே யாரும் இல்லை!
ஆயினும் இளமை சிறிதும் மாறா(து)
இருக்கும் கலையிது மாற்ற மில்லை!

கண்திறந்து நமைப் பார்த்த தில்லை!
கனிவாய் திறந்தும் பேச வில்லை!
எண்ணம் முழுதும் உன்வச மானது
எப்படி அதுதான் புரிய வில்லை!

மதுக்குடம் சுமக்கும் மங்கையுன் எழிலில்
மயங்கும் உலகிது பொய் இல்லை!
செதுக்கிய கலைஞன் மறைந்து போயினும்
சிலையில் அவன் புகழ் அழியவில்லை!

தாளில் கோடொன்று இழுத்திட் டாலும்
கச்சித மாயது வருவது மில்லை.
கல்லும் உளியும் கலைஞன் திறமையும்
சொல்லில் வடிக்க முடிய வில்லை!

புயலாய் மழையாய் வெயிலாய் இயற்கை
தாக்குதல் அழகைச் சிதைக்க வில்லை!
உயிராய் நமது கலையை நினையா(து)
இருந்தால் அதன்பெயர் உள்ளம் இல்லை!



**இராதை பிரபாகரன்**

கவிதை

# முன்வினை

தெரிந்தால் மட்டும்
பெரிதாய் என்ன
சொல்லிவிடப் போகிறீர்கள்?

நீ சொல்வதெல்லாம்
எல்லாரும்
செய்வதுதான் என்பீர்கள்!
வேண்டாம்
வேண்டவே வேண்டாம்!

உங்களிடம்
பகிர்ந்து கொள்ளாத
சுய உறுத்தல்களோடு
எனக்கு
துன்பம் நேரும்போதெலாம்...

'அந்த'
முன்வினைகளே காரணமென
ஆறுதல் இன்றி
தன்னந்தனியே தவித்து
கலங்கிக் கொள்ளப் போகிறேன்!



**புவனகிரி கல்யாண்**

நடிகர் ஜெயம் ரவி தற்போது அறிமுக இயக்குநர் புவனேஷ் அர்ஜுனன் இயக்கத்தில் 'ஜீனி' என்கிற பேண்டசி படத்தில் நடிக்கிறார். இப்படத்தில் நாயகிகளாக கீர்த்தி ஷெட்டி, கல்யாணி பிரியதர்ஷன் மற்றும் வாமிகா கேபி உள்ளிட்டோர் நடிக்கிறார்கள். வேல்ஸ் இண்டர்நெஷனல் தயாரிப்பில் 100 கோடி பட்ஜெட்டில் உருவாகும் இப்படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். தனக்கென தனியிடம் பிடித்து வளர்ந்து வரும் தென்னிந்திய நடிகைகளில் ஒருவராக உயர்ந்து வருகிறார் கீர்த்தி ஷெட்டி. 'ஜீனி' படத்தின் முதல் பார்வை வெளியான நிலையில், தற்போது இரண்டாவது போஸ்டர் வெளியிடப்பட்டுள்ளது.

## கீர்த்தி காட்டும் கீர்த்தி ஷெட்டி!



## கீர்த்தியின் 100 கோடி பட்ஜெட்!!



## பிரஜின் நடிப்பில் 'படிக்காத பக்கங்கள்'

## 'படிக்கின்ற பக்கங்களாக' இருக்கட்டும்!

வித்தியாசமான கதைக்களங்களை தேர்ந்தெடுத்து நடித்து வரும் விக்ரம் பிரபு, அடுத்ததாக 'ரெய்டு' திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் நடிகை ஸ்ரீதிவ்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இயக்குனர் கார்த்தி இயக்கத்தில் உருவாகி வரும் இப்படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. அதிரடி ஆக்ஷன் காட்சிகள் நிறைந்துள்ள இந்த டீசரை ரசிகர்கள் இணையத்தில் அதிகம் பகிர்ந்து வருவதால், படத்தின் வெற்றி உறுதி என படக் குழு
அறிவித்திருக்கிறது.

## பிரியமான பிரியா பவானி!

நடிகர் விஷால் தற்போது இயக்குனர் ஹரி இயக்கத்தில் 'ரத்னம்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் நடிகை பிரியா பவானி ஷங்கர், யோகி பாபு, சமுத்திரக்கனி, கௌதம் மேனன் நடித்துள்ளனர். இதில் பவானி சங்கரின் நடிப்பு பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது. அனைவரிடம் பிரியமான அணுகுமுறையுடன் வலம் வரும் பிரியாவுக்கு படங்கள் அடுத்தடுத்து வந்தவண்ணம் இருக்கின்றன. 'ரத்னம்' படப்பிடிப்பு முடிவடைந்து 'போஸ்ட் புரொடக்ஷன்' பணிகள் நடந்து வருகின்றன. சில வாரங்களுக்கு முன் 'டோன்ட் வோரி டா மச்சி' என்ற இப்படத்தின் பாடல் ரசிகர்களிடம் வரவேற்பைப் பெற்றது.



பவானி பிரியமாய் வரட்டும் பவனி!

## 'கேம் சேஞ்சர்' முதல் பாடல்!

தெலுங்கு நடிகர் ராம் சரணை வைத்து 'கேம் சேஞ்சர்' படத்தினை இயக்குகிறார் ஷங்கர். இந்தப் படத்தில் கியாரா அத்வானி, அஞ்சலி ஆகியோருடன் எஸ்.ஜே. சூர்யாவும் நடித்துள்ளார். தமன் இசையமைக்கிறார். ஷங்கர் இயக்கிய 'பாய்ஸ்' படத்தில்தான் தமன் முதன்முதலாக நடிகராக அறிமுகமானார். இப்படத்தின் முதல் பாடலான 'ஜரகண்டி' பாடலை தயாரிப்பு நிறுவனம் வெளியிட்டுள்ளது. பிரபுதேவாவின் நடன இயக்கத்தில் ராம் சரண், கியாரா அத்வானியின் நடனம் கவனத்தை ஈர்த்து வருகிறது.



சரண்... 'நாட்டு நாட்டு' அற்புதம்!..

ஆன்மிகம்

# தல வலம்

## வைகுண்டநாத பெருமாள்

புலனகிரி செயபாலன்

‘அண்டமும் எண்திசையும் நிலனும்
அலை நீரோடு வான் எரிகான் முதலா
உண்டவன் எந்தை பிரானது இடம்
ஒளிமாடங்கள் சூழ்ந்து அழகாய கச்சி
விண்டவர் அண்டைக் குழாமுடனே
விரைந்தார் சீரியச் செடுவில் முடித்து
பண்டு ஒருகால் வளைத்தான் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே!’
—திருமங்கை ஆழ்வார் பாசுரம்



108 திவ்யதேசங்களில் 57—வது திவ்யதேசமாகும். காஞ்சிபுரத்தில் உள்ள 14 திவ்ய தேசங்களில் இதுவும் ஒன்று. இங்கு இது இரண்டாவது மிகப் பழமையான கோவிலாகக் கருதப்படுகிறது.

பெருமாள் — பரமபத நாதன், வைகுண்ட நாதன்.

நிலை — வீற்றிருக்கும் திருக்கோலம். திருமுகமண்டலம் மேற்கு.

தாயார் — வைகுந்தவல்லி தாயார். தனிச் சன்னதி.



விமானம் — முகுந்த விமானம், அஷ்டாங்க

விமானம். தீர்த்தம் — ஆயிரம் தீர்த்தம், கோயில் தென்மேற்கில் உள்ளது.

கோயில் 0.5 ஏக்கர் (0.20 ஹெக்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

மோட்சம் — வைகுண்டம்

மோட்சம் என்பதனை சைவர்கள் கைலாயம் என்பார்கள். வைணவர்கள் வைகுண்டம் என்பார்கள். காஞ்சிபுரத்தில் கைலாய நாதர் கோயிலும் வைகுண்டநாத பெருமாள் கோயிலும் உள்ளது.

தலவரலாறு


விதர்ப்ப நாட்டு மன்னன் விரோசனன். இவன் பகவான் கண்ணனின் வம்சம். இவனுக்கு பல வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லை.இதனால் மன்னன் சில முனிவர்களிடம் சென்று யோசனை கேட்டபோது, 'கண்ணன் ருக்மணியை திருமணம் செய்தபோது, அவருக்கு குழந்தை பாக்கியம் இல்லை. அதனால் கண்ணன் திருக்கயிலாயம் சென்று சிவபெருமானை வழிபட்டார். சிவன் அருளால் கண்ணன் ருக்மணிக்கும் குழந்தை பிறந்தது. அதற்கு 'ப்ரத்யும்னன்' எனப் பெயரிட்டு வளர்த்தனர். அதுபோல கண்ணன் வம்சத்தில் வந்த தாங்களும் திருக்கயிலாயம் சென்று சிவனை வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்!' என்று யோசனை கூறினர்.

அதைக் கேட்ட விரோசனன், 'முனிவர்களே! திருக்கயிலாயம் நெடுந்தொலைவில் உள்ளது. அங்கே சென்று வழிபட மாதக் கணக்கில் ஆகுமே!' என்று கூறி கண்கலங்கினான். கேட்ட முனிவர்கள் 'கவலை வேண்டாம். காஞ்சிபுரத்தில் உள்ள கைலாயநாதர் கோயிலுக்குச் சென்று வழிபட்டாலே திருக்கயிலாயம் சென்று ஈசனை வழிபட்ட நற்பலன் கிட்டும்!' என்றனர்.

அதன்படியே கயிலாயநாதர் ஆலயம் சென்று ஆலயத் திருப்பணிகளைச் செய்து வழிபாடு செய்தான். மன்னன் கனவில் தோன்றிய ஈசன், 'மன்னா! உமக்கு வைகுண்டத்தின் வாசல் காப்பாளர்களான ஜெய விஜயர்களே குழந்தைகளாக வந்து அவதரிப்பர்!' என்று கூறி மறைந்தார்.

ஈசன் அருளியபடி மன்னனுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தனர். அவர்களுக்கு பல்லவன் வில்லவன் எனப் பெயரிட்டு வளர்த்தான். அவர்கள் சிறு வயதிலிருந்தே மகாவிஷ்ணுவை பூஜித்து வந்தனர். வாலிப வயது வந்த போது இருவரும் காஞ்சிபுரத்தில் கயிலாயநாதர் ஆலயத்தின் வடமேற்கு மூலையில் அஸ்வமேத யாகம் செய்தனர். அவர்களுக்கு வைகுண்டத்தில் இருக்கும் வடிவிலேயே மகாவிஷ்ணு



காட்சி அளித்து சேவை சாற்றினார். அவர் காட்சி தந்த இடத்திலேயே பெருமாள் கோவில் கொண்டார். அந்த இடமே தற்போது பரமேஸ்வர விண்ணகரம் என்னும் திருத்தலமாகும்.



ஒரு சமயம் கந்தர்வ கன்னி ஒருத்தி, தவத்தில் இருந்த பரத்வாஜ முனிவர் மீது மையல் கொண்டு அவரது தவத்தைக் கலைத்தாள். அதனால் அவர்களுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. திருமாலும் திருமகளும் வேடர் வடிவம் கொண்டு அக்குழந்தையை வளர்த்து வந்தனர்.

பின்பு ஒரு காலத்தில் பல்லவ மன்னன் தங்கள் குலம் தழைப்பதற்கு புத்திர பேறு வேண்டினான். பெருமாள் குழந்தையை பல்லவ மன்னனிடம் சேர்த்து, அப்பாலகனுக்கு வீற்றிருக்கும் கோலத்திலும், பள்ளி கொண்ட கோலத்திலும், நின்ற கோலத்திலும் 18 கலைகளையும் போதித்தார். அவன் பரமேஸ்வரன் என்னும் பெயரில் வளர்ந்து இத்திருக் கோவிலை கட்டி, மூன்று தலத்திலும் பெருமாளை எழுந்தருளச் செய்தான்.

கோயில் அமைப்பு

மணல் பாறைகளால் ஆன அதிக புடைப்பு சிற்பங்கள் நிறைந்த குடைவரைக் கோயில் அமைப்பைக் கொண்டது. பல்லவ மன்னர்களின் குடைவரைக் கோயில் போன்ற இத்தலத்தின் கருவறையும் அதைச் சுற்றியுள்ள பிரகாரம் மற்றும் தூண்கள் யாவும் ஒரே பாறையில் குறையப்பட்டதாகும். கோயிலின் கூரைகள் தூண்கள் இன்றி சுவர்களால் தாங்கப்படுகின்றன. சோழர்கால கல்வெட்டுகள் மண்டபத்தின் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன.



விண்ணகரம் என்றால் வைகுண்டம் என்று பொருள். இக்கோயில் கருவறை மூன்று அடுக்குகளாக அமைந்துள்ளது. மேல்தளத்தில் பெருமாள் நின்ற கோலத்திலும் பல்லவனுக்கும் வில்லவனுக்கும் காட்சி தருகிறார். நடுத்தளத்தில் வடக்கே தலை வைத்து தெற்கில் திருப்பாதம் நீட்டியபடி சயனக் கோலத்தில் காட்சி தரும் இவர், கீழ்த்தளத்தில் பரமபத நாதராய் மேற்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்தில் சேவை சாற்றுகிறார். மூன்று கருவறைகளும் தனித்தனியான அமைப்பைக் கொண்டது. விமானத்து மூன்று திசைகளிலும் உள்ளே சிறிய வாயில்கள் உள்ளன.

அழகிய திருச்சுற்று அதன் உட்புறம் சுவருடன் இணையான திருச்சுற்று மாளிகை எனும் மண்டபம். இந்த மண்டபத்தில் நான்கு பக்கங்களை சிம்மங்களுடன் உள்ள தூண்கள் தாங்கி நிற்கின்றன. மண்டப உட்புறச் சுவற்றில் இரண்டு அடுக்குகளாகத் தொடர் சிற்பங்கள் ஒவ்வொன்றின் மீதும் பல்லவ கிரந்த எழுத்துகளில் விளக்கம் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

திருச்சிற்றுக்கு நடுவே பரமேஸ்வர விண்ணகரம் எனப் போற்றப்படும் வைகுந்தநாதப் பெருமாள் கோயில். இச்சன்னதியில் ஸ்ரீதேவி, பூதேவி இரு பக்கங்களிலும் உள்ள வைகுந்தநாதர் திருவுருவச் சிலை உள்ளது. வைகுந்தவல்லி தாயார் கிழக்கு பார்த்து தனிச்சன்னதியில் சேவை சாற்றுகிறார்.

கருவறை — சிற்பங்கள்

கருவறையின் புறச்சுவர் முழுவதும் திருமாலின் பல்வேறு திருக்கோலங்கள் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. கருடாழ்வார் தோளில் திருமால் அமர்ந்திருக்க, அருகே ஸ்ரீதேவி நிற்பது, சங்கு சக்கரம் ஏந்திய திருமால் அமர்ந்திருக்க அடியார்களும் தெய்வங்களும் தொழுது



நிற்பது, ஐந்துதலை நாகரின் கீழ் பரமபதநாதன் அமர்ந்திருக்க, திருமகள் வணங்குவது, தாமரை மலர் மீது மலரவன் நிற்க, இருபுறமும் சூரிய சந்திரர் கையை உயர்த்தி போற்றுவது, முனிவர்கள் நால்வர் அமர்ந்திருப்பது, விஷ்வக்சேனனுக்கு திருமால் மாலை சூட்டுவது, இரணியனை மடியில் கடத்தி உடல் பிளக்கும் நரசிங்கர் வடிவம் எனக் கருவறையின் புறச்சுவர் முழுவதும் சிற்பக் காட்சிகள்.

இக்கோயிலின் மேல் மாடியில் இரணியனை வதம் செய்யும் நரசிம்மன், நரகாசுரனை வதம் செய்யும் கிருஷ்ணன், வாலியை வதம் செய்யும் ராமாவதாரம் போன்ற சிற்பங்கள் உள்ளன. பல்லவர், சோழர் மற்றும் பாண்டியர் படைத்த எந்த வைணவ கோயில்களிலும் இந்த அளவுக்கு சிற்பக் காட்சிகள் இல்லை என்றே சொல்லலாம்.

சுரங்கம்

இங்குள்ள மூலவர் சன்னதிக்கும் முன் மண்டபத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் இடைக்கழி எனும் சுரங்கப்பாதை இருப்பதை அறிந்த வெள்ளைக்காரர்கள் அதனைத் தோண்டிக் காண முனைந்த போது, இவ்வூர் பொதுமக்களும், இப்பெருமாள் மீது பேரன்பு கொண்ட இஸ்லாமிய பக்தர் அலி முகமதுகான் என்பவரும், இச்சுரங்கத்தையும் கோயிலில் இருந்து செல்லக்கூடிய வழியினை மூடி அதன் மேல் படிக்கட்டுகளை அமைத்து மூலவர் சன்னதிக்கு நடந்து செல்லக்கூடிய பாதையை மாற்றி விட்டனர். மூடப்பட்ட பகுதியை இன்றும் காணலாம். இங்கிருந்து மாமல்லைக்கும், கைலாசநாதர் கோயிலுக்கும், பரமேஸ்வர வர்மன் அரண்மனைக்கும் சுரங்கப்பாதை இருந்ததாக செவிவழிச் செய்தி!

இக்கோயிலில் நடன நிகழ்ச்சிகளை அரங்கேற்றம் செய்ய இரண்டு ராஜ தர்பார்கள் இருந்தன. அவை இன்று சாதாரண மண்டபங்களாக விளங்குகின்றன.

திருமங்கை ஆழ்வார்




இத்தலத்தைப் பற்றி திருமங்கையாழ்வார் 10 பாசுரங்கள் பாடியுள்ளார். அதில் பல்லவ மன்னன் பரமேஸ்வரன் தனது அரசு சம்பந்தப்பட்ட அனைத்து அலுவல்களிலும், தான் போருக்கு செல்வதற்கும் இப்பெருமாளை வழிபட்டு சென்று வெற்றி பெற்றான் என்பதை,

தேர்மன்னு தென்னவனை முனையில் செறுவில்

திறல் வாட்டிய திண் சிலையோன்

பார்மன்னு பல்லவர்கோன் பணிந்து வரும்

பரமேச்சுர விண்ணகர மதுவே' —எனக் குறிப்பிடுகின்றார்.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், மணவாள மாமுனி, ராமானுஜர் ஆகியோரும் இத்தலத்துக்கு வந்துள்ளனர்.

கட்டிடக்கலை

13ம் நூற்றாண்டில் இப்பகுதி பாண்டியர்களிடம் சென்ற பின்னர், தெலுங்கு சோழ ஆட்சியாளர்களான விஜய நந்தகோபாலனிடம் சென்றது. பிற்காலத்தில் பல்லவர்கள், சாளுக்கிய சோழர்கள், சம்புவராயர்கள் மற்றும் விஜயநகர பேரரசின் மன்னர் குமாரகம்பண்ணா ஆகியோராலும் ஆளப்பட்டது. இக்கோயில் பலரால் புனரமைக்கப்பட்டது. இக்கோயிலையும்



சுப்பிரமணியர் கோவில் மற்றும் கைலாசநாதர் கோயில்கள் விஜயநகர பேரரசர் கிருஷ்ணதேவராயர் (1502—1529) காலத்தில் கட்டப்பட்டது. இவர் ஆற்றிய தொண்டின் நினைவாக அவருக்கு இத்தலத்தில் சிலை வைக்கப்பட்டுள்ளது.

கோயிலின் முழு அமைப்பும் கூடும் மண்டபமாக இருந்தது. அது குலோத்துங்க சோழர் ஆட்சியின் போது சரிந்ததால், வைகுண்ட பெருமாள் உருவகத்தைக் கொண்ட கோவிலுடன் மண்டபத்தை அவர் மீண்டும் கட்டினார் என்றும் சொல்லப்படுகிறது. ஆகம நெறிப்படி கூடும் மண்டபம் கிராமத்தின் மையப்பகுதியில் கட்டப்பட்டு அதைச் சுற்றி கோயில்கள் அமைக்கப்பட்ட விவரங்கள் கல்வெட்டுகளில் உள்ளன.

குடவோலை

கிராமவாசிகள் தங்கள் பிரதிநிதிகளை தாங்களே தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அனுமதிக்க வேண்டும் எனக் கூறியதாகவும், அவர்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட பராந்தகச் சோழர், குடவோலை முறையை ஏற்படுத்தியதாகவும், தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள், அதற்கான விதிகள், வாக்காளர்களின் தகுதிகள் என்ன என்பவற்றையும் கோயில் கல்வெட்டு கூறுகிறது.

திருவிழா

வைகாசியில் பிரம்மோற்சவம் பத்து நாட்களும், மார்கழியில் வைகுண்ட ஏகாதசியும் முக்கிய திருவிழாக்கள் ஆகும். பெரும்பாலும் அனைத்து பெருமாள் கோவில்களில் வைகுண்ட ஏகாதசி நாளில் பரமபத வாசல் திறப்பார்கள். ஆனால் இங்கு ஜெய விஜயர்களே ஆலயம் அமைத்ததால், இத்தலத்தில் வைகுண்ட ஏகாதசி நாளில் தனியாக சொர்க்கவாசல் எனும் பரமபத வாசல் கிடையாது.



சிறப்பு — பதவி

வைகுண்ட ஏகாதசி நாளில் இந்த ஆலயத்தில் வழிபடுவது ஒருவரது ஆயுட்காலத்திற்கு பிறகு வைகுண்ட பதவி பெற்றுத் தரும் என்பது ஐதீகம்!

வைகுண்ட ஏகாதசி நாளில் காஞ்சிபுரம் கைலாயநாதர் திருக்கோயிலில் வழிபட்டு, பின்னர் அருகில் உள்ள பரமேஸ்வர விண்ணகரம் எனும் வைகுண்ட நாதப் பெருமாள் கோயிலில் வழிபாடு செய்ய வேண்டும்.

நேர்த்திக்கடன்

வைகுண்ட ஏகாதசி நாளில் இத்தலக் கருவறை தீபத்தில் பசுமை சேர்த்து வைகுண்ட நாதனை வழிபடுவது சிறப்பு. குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள், பிறந்த குழந்தைகள் ஆரோக்கியமான நீண்ட ஆயுளுடன் வாழவும், குழந்தைகளுக்கு நல்ல அறிவு, ஒழுக்கம் வாய்க்கவும் முதலில் இங்கு உள்ள கைலாயநாதர் ஆலயத்தில் வழிபட்டு, அதன் பின்னர் பரமபதநாதனான வைகுண்டநாதரை வழிபட வேண்டும் என்கிறார்கள் பக்தர்கள்.

சர்ப்ப தோஷம் உள்ளவர்கள் ஆயில்யம் நட்சத்திர தினத்தில் வந்து வழிபட சர்ப்ப தோஷங்கள் அகலும் என்பது நம்பிக்கை. ஏகாதசி மற்றும் சனிக்கிழமைகளில் இத்தலப் பெருமாளை வழிபட்டால் சகல மேன்மைகளும் வந்து சேரும்.

பூஜை

தினமும் 6 கால பூஜை வைகாசன ஆகம முறைப்படி தென்கலை சம்பிரதாயத்துடன் நடத்தப்படுகிறது. இரவு பூஜையின் போது வேதங்கள் ஓதப்படுகின்றன. கோயில் தொல்லியல் துறையால் நிர்வகிக்கப்படுகிறது.

திறக்கும் நேரம்

தினமும் காலை 7 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம்

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து அரை கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது.

(தொடரும் வலம்.....)

# புத்தக விமர்சனம்

## பக்தியும் பார்த்தசாரதியும்
### (வாழ்வியல்)




**ஆசிரியர்:**

முனைவர் க.ர.லதா

**விலை : ரூ. 230**

**வெளியீடு:**

**ஜோதிபதிப்பகம்,**
**சென்னை–37.**

எழுத்தாளர் தீபம் நா. பார்த்தசாரதியின் நூல்களை ஆய்வு செய்து வரும் அவருடைய உறவினரும் பேராசிரியருமான நூலாசிரியர் எழுதிய நூல் இது. பார்த்தசாரதியின் நூல்களை ஆய்வு செய்வதோடு, அவருடைய நூல்களை மீண்டும் பதிப்பிக்கச் செய்து எழுத்துலகில் பெரிய பங்களிப்பை ஆற்றி வருகிறார்.அழகர் மலை, அழகர் கோயில் வரலாறும் வழிபாடுகளும், திருமாலையும் ஸ்ரீரங்க கத்யமும், தொண்டரடிப் பொடியாழ்வாரின் பக்திநெறி, திருமூலர் காட்டும் அரசன், திருமூலரின் அட்டாங்க யோகம் உணர்த்தும் செய்திகள், திருவாசகத்தில் ஐந்தெழுத்து மந்திரம், மாணிக்கவாசகரின் சைவ நெறி, சித்தர்களின் உடலியல் சிந்தனைகள், சட்டை முனிவரின் வாழ்வும் வாக்கும், பத்திரகிரியார் மெய்ஞ் ஞானப் புலம்பலில் புலனடக்கம், மனுமுறை கண்ட வாசகம் பட்டியலில் பசிப்பணி, குமரேச சதகம் காட்டும் அரசன் போன்ற கட்டுரைகள் சைவம், வைணவம் என்று ஒருசேர ஆன்மிக விருந்தளிக்கிறது இந்த நூல்.

நா.பா.வின் வாழ்வும் எழுத்தும் குறித்து நூலில் அலசப்பட்டுள்ளன. பார்த்தசாரதியின் 38 நூல்களின் விவரங்களைத் தொகுத்து, 25 கட்டுரைகளாக நூலாசிரியர் தொகுத்துள்ளார். இந்த நூலைப் படித்து முடிக்கும்போது, மூல நூல்களை வாசிக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்படுத்தும் நல்லதொரு நூல்.

சிறுகதை



# சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

**ரிஷபன்**

ஹோய்..ஹோய்’ என்று மெலிதான சத்தம் கேட்டது.

பல்லக்கு தூக்கிகள் முகத்தில் ஆஸ்வாசம். சில்லென்ற காற்று முகத்தில் அடிக்க ஆரம்பித்து விட்டது. “நாம் அரங்கனை நெருங்கி விட்டோம்” என்ற குரல் கேட்டது.

“எப்படி சொல்கிறீர்கள்”

“தென் திருக் காவிரியின் சமீபம் வந்து விட்டோம்.. சோலைகள் அதோ தெரிகின்றன.. என்ன ஒரு சுகந்தம்.. குளிர்ச்சி ..காற்றில்.பரிமள வாசனை.. “

“தேவி உறங்குகிறாரா” மெல்லிய நகைப்புடன் ஒருவன் சொன்னான்.

“அவருக்கு உறக்கமா.. அரங்கனைப் பார்க்கும்வரை அவருக்கு வேறேது நினைப்பு”

“மானுடர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே”

பல்லக்கு உள்ளே ஆண்டாள் இந்தப் பேச்சை எல்லாம் கேட்டுக் கொண்டுதானிருந்தாள்.



திரைச் சீலையை விலக்கி எட்டிப் பார்த்ததில் விஷ்ணுசித்தர் தம் தளர்ந்த நடையில் முன்னால் சென்று கொண்டிருந்தது தெரிந்தது.

ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து எத்தனை கல் தூரம்.. ஆனால் அவர் ஒரு வார்த்தை கூட மறுப்பு சொல்லவில்லை. என்றைக்குத்தான் சொல்லியிருக்கிறார்..

‘அப்பா..’





'என்ன குழந்தாய்'

'எனக்கு நேரம் வந்து விட்டதப்பா' பெரியாழ்வார் தாம் பெறாத மகளை உற்றுப் பார்த்தார். என்ன ஒரு தீட்சண்யம்.. கண்களில்.

இவள் மானிடப் பிறவியல்ல. இத்தனை நாட்கள் அப்பா, பெண்ணாய் ஆடிய நாடகம் அதன் திரையைப் போடும் காலம் வந்து விட்டது.

மளுக்கென்று உள்ளே ஏதோ தளும்பியது. பிரியப் போகிறோம் என்பதே இவ்வளவு வேதனை தருமா.. கேசவா..

'போகலாம்மா'

வேறு பேச்சே இல்லை. மளமளவென்று வேலைகள் நடந்தன.

ஸ்ரீவில்லிப்புத்தூரே அமர்க்களப்பட்டது.

'பட்டர்பிரான் கோதை ஸ்ரீரங்கம் போகிறாளாம்'

'அரங்கனைத்தான் மணக்கப் போகிறாளாம்'

'என்னடி இது அதிசயமா இருக்கு'

'கோதை விஷயத்துல எல்லாமே ஆச்சர்யம் தான்'

ஆண்டாளின் காதுகளில் இந்தப் பேச்சு விழாமலில்லை. ஆனால் அவள் அதற்காக பதில் பேசுவதும் இல்லை.

திரு நந்தவனத்தில் திருத்துழாய் மண்டிக் கிடந்தது. அதன் வாசம் காற்றில் மணத்துக் கொண்டிருந்தது. அதன் மண்ணில் போய் அமரும் போதெல்லாம் தாய் மடி உணர்கிற மனசு.

அங்கே தான்






விஷ்ணுசித்தர் ஆண்டாளைக் கண்டார் முதன் முதலில்.

அழாத அழகான குழந்தை.. துளசிச் செடியின் கீழ். அவரைப் பார்த்ததும் சிரித்தது.

'யார் இங்கே விட்டது.. '

நந்தவனம் முழுக்க பார்வை அலசியது. ஒரு வாரமாகவே ஏதோ ஒரு நினைப்பு. விடியலில் தூக்கம் கலைந்து பிரம்ம முஹூர்த்தத்திற்கு முன்பே விழிப்பு.

'உங்க கூட வந்து இருக்கட்டுமா' பிஞ்சுக்குரலின் கொஞ்சல் த்வனி. ஆனால் எதிரே யாரும் இல்லை.

'ப்ரபோ.. என்ன இது உன் விளையாட்டு.. ஏதோ என் போக்கில் உனக்கு புஷ்ப கைங்கர்யம் செய்து காலத்தைக் கழிக்கிறேன்.. அடியேனுக்கு அதுவே போதும்'

'அப்பா..'

இந்த முறை ஸ்பஷ்டமாய் குழந்தைக் குரல்.



என்ன அழகான மழலை..

ஒரு பக்கம் அந்தக் குரலின் மீது மனசுக்குள் ஈர்ப்பு.. இன்னொரு பக்கம் சம்சாரக் கடலில் பிணைக்க விதியின் விளையாட்டா என்ற அச்சம்..

இதோ கனவு பலித்து எதிரே துளசி மண்ணில் பிஞ்சுக் குழந்தை.

அதன் பாதங்கள் சிவந்த மலர் போல..

'முகுந்தா.. கேசவா.. '

சீதக்கடலுள் அமுதன்ன தேவகி

கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த

பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்

பாதக் கமலங்கள் காணீரே பவள வாயீர்! வந்து காணீரே



'கோதை.. கோதை..'

யசோதையாகிப் போன பெரியாழ்வார் இப்போது தந்தையாகவும் ஆகிவிட்டார்.

அவள் வளர்ந்ததில் அவர் பங்கு ஏதுமில்லை. என்ன ஆச்சர்யம்.. தவழ்ந்தது.. பிடித்து நடந்தது.. அவர் பாசுரங்களைக் கூடவே பாடியது.. எதுவுமே மானுடக்குழந்தையின் செயல்கள் இல்லை.. என்ன ஒரு அவசரம். ஒரு வயதுக்குள் ஸ்பஷ்டமாய் பேச்சு.

'கோதை.. நீ யாரம்மா'

வாய் விட்டு கேட்டிருக்க வேண்டும்.

"என்னப்பா.."

"ஒண்ணுமில்லை"

தேவ ரகசியங்கள் அப்படியே இருப்பதுதான் சுவாரஸ்யம்.

வடபத்ர சாயிக்கு கோதை சூடிக் கொடுத்த மாலைகளை சூடிக் கொள்வதில் தான் எத்தனை ஆனந்தம். அதை முதலில் பார்த்த ஆழ்வார் ஆடிப் போனார்.

'என்ன காரியம் பண்ணி விட்டாய் அம்மா'

குழந்தை மலங்க விழித்தது. அதில் என்ன தப்பு..

'அபச்சாரம் மகளே'

'அப்பா..'

வேறு மாலை கட்டி எடுத்துபோனார் அன்று. திரும்பி வந்தால் கோதை அன்று சாப்பிடவே இல்லையாம். தேஜஸ் குறையாமல் படுத்திருந்த கோதையைப் பார்த்தார்.

'எழுப்பலாமா'

வேண்டாம். அவள் தப்பு புரியட்டும். மனசு வைராக்கியம் போதித்தது. தாமும் உணவருந்தாமல் படுத்தார். கனவில் கண்ணன் வந்தான். வடபத்ர சாயியின் சித்தம் வேறு விதமாய் இருந்ததைப் புரிய வைத்தான்.

'விஷ்ணுசித்தரே.. உமது மாலை இன்று பரிமளிக்கவில்லை எமக்கு.. கோதை சூடிக் கொடுத்த மாலையே எமக்கு உகப்பு'


தூக்கிவாரிப் போட்டது ஆழ்வாருக்கு.

'எம்பெருமானே.. என்ன சொல்கிறீர்'

'அவள் என்னுடையவள்..'

வேறு வார்த்தைகளே இல்லை. இதை விட அழகாய் எப்படிச் சொல்ல முடியும்..

மறுநாள். ஆழ்வார் மாலையைத் தொடுத்து கோதையிடம் கொடுத்தார்.




"ஏண்டி பெண்ணே.. கண்ணன் வருவானா.. உன் பாட்டுக்கு'

சீறிய சிங்கம் அறிவுற்று தீ விழித்தது அப்போது கோதையின் பார்வையில்.

'அதில் என்ன சந்தேகம் மாமி..'

'இல்ல.. நாமெல்லாம் வெறும் மனுஷ ஜென்மம்டி.. பகவானைப் பார்க்கறதே கஷ்டம்.. இதுல அவனே புருஷனா..'

'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமேயாவேம் உனக்கே யாமாட்செய்வோம்'



'சூடிக் கொள் கோதை..'

அவள் அதை எதிர்பார்த்த மாதிரி ஆட்சேபம் தெரிவிக்காமல் வாங்கி சுவாதீனமாய் அணிந்து கொண்டு ஆடியில் அழகு பார்த்து மீண்டும் களைந்து குடலையில் வைத்துக் கொடுத்தாள்.

பட்டர் வாங்கும்போதே சொல்லி விட்டார்.

"ஸ்வாமி.. இன்று நேற்றை விட அழகு ஜொலிக்கிறது மாலையில்.."

எம்பெருமானின் முகத்தில் முறுவல். ஆழ்வாரை கடாக்ஷித்தான்.

'கோதை பாவை நோன்பு நோற்கப் போகிறாளாம்..'

எல்லோர் வீட்டிலும் பெண்குழந்தைகள் அடம் பிடித்தன.

'கண்ணனுக்காகவாம்.. ஆய்ப்பாடி பெண்களைப் போல..'

'நாங்களும் போவோம்'

'என்னடி இது அதிசயம்'

'எம் பொண்ணு இத்தனை சமத்தா'

'கோதை பண்ண சாமர்த்தியம்'

வில்லிப்புத்தூர் இன்னொரு ஆய்ப்பாடி ஆனது. மார்கழிக் குளிர் மறைந்து போனது. பாவை நோன்பு நோற்று பாடிப் பரவசம் ஆனார்கள்.

'கோவிலுக்கே வரதில்ல.. ஆனா பாரேன் அவளுக்கு.. என்ன நெஞ்சழுத்தம்.. பகவானைத்தான் கல்யாணம் பண்ணிப்பாளாம்'

'ஆழ்வார்ட்ட எல்லா திவ்ய தேச எம்பெருமான்களைப் பத்தி கேட்டாளாம்.. ஸ்ரீரங்கம் நம்பெருமாளைப் பத்தி கேட்டதும் அவரைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொல்லிட்டாளாம்'

'என்னடி இது அதிசயம்.. தக்குணூண்டு பொண்ணா இருந்துண்டு.. இப்படி ஒரு பிடிவாதமா'

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத

முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்

மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து

என்னைக் கைத்தலம் பற்ற கனாக்கண்டேன் தோழீ! நான்

'நிஜமாவே அவ மனசுல பகவான் தாண்டி இருக்கான்'

'ஆழ்வார் படற வேதனையைப் பார்த்தா பாவமா இருக்குடி'

'சீச்சீ.. அவருக்கு கோதை என்ன செஞ்சாலும் ஆட்சேபணை இல்லைடி'

ஊர் மக்கள் ஆழ்வாரையும் புரிந்து வைத்திருந்தார்கள். கோதையையும் புரிந்து வைத்திருந்தார்கள்.

விஷ்ணுசித்தருக்கு முதலில் கொஞ்சம் மனக்குறைதான்.

‘ஏம்மா.. இவ்வளவோ ஈடுபாட்டோட இருக்க.. ஸந்நிதிக்கு வரமாட்டேங்கிறியே’


‘இல்லப்பா’

‘அதான் ஏம்மா’

கோதையின் சிரிப்பில் ஆயிரம் அர்த்தங்கள். ‘போனால் என்னால் திரும்பி வர முடியாதே’

‘ம்ம்..’

மேலே வற்புறுத்தாமல் விட்டு விட்டார். கோதை எது செய்தாலும் சரியாகத்தான் இருக்கும் என்கிற நம்பிக்கை.



‘அரங்கனைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்’ என்று சொன்னபோதும் அவரால் மறுப்பு சொல்ல முடியவில்லை. ‘சாத்தியமாடி குழந்தே’ என்று மனசுக்குள் எழுந்த கேள்வி கோதையின் தீர்க்கமான பார்வையின் முன் அடிபட்டுப் போனது.

ஸந்நிதிக்கு போனார். ‘என்னப்பனே.. அடியேன் என்ன செய்யட்டும்’

விடியலில் மீண்டும் கனவு. ‘அழைச்சுண்டு வா எம்மிடம்’ அரங்கனின் குளிர் முறுவல் தெரிந்தது.

இதோ கிளம்பியும் வந்தாச்சு.

வடதிருக்காவிரியின் கரையில் மண்டபம். தீர்த்தமாடி புது மணப்பெண் போல அலங்கரித்துக் கொண்டும் ஆகிவிட்டது. அரங்கன் கோவில் முரசின் ஒலி கேட்டது. கைங்கர்யபரர்கள் மாலை மரியாதைகளுடன் வந்தார்கள்.



“ஸ்வாமி.. ஸந்நிதிக்கு அழைச்சுண்டு வர எங்களுக்கு உத்திரவு”

திருவீதி ஜனங்கள் ஆச்சர்யமாய் சூழ்ந்து பின்னாலேயே வந்தார்கள்.

யானை பிளிறிற்று.. நடக்கப்போகும் அதிசயம் உணர்ந்த மாதிரி. ‘ரெங்கா.. ரெங்கா’

நாழிகேட்டான் வாசல் நுழைந்து பிரதட்சிணமாய் வந்து இதோ மூலஸ்தானம். இரு திருமணத்தூண்கள் நடுவில் காயத்ரி மண்டபத்தில் கஸ்தூரி ரெங்கன். சயனத்திருக் கோலம்.

தேவியை மீண்டும் பார்த்ததில் உல்லாசம் திருமுக மண்டலத்தில்.

‘தீபாரத்தி ஆகட்டும்’ பட்டர் கை நடுங்க தீபம் உயர்த்திக் காட்டினார்.

திருவடி.. அயனைப் படைத்த நாபிக்கமலம்.. ஸ்ரீவத்ஸம்..திருவார மார்பு.. கண்டம்.. திருமுகம்.. பவளச் செவ்வாய்..

‘வா.. பூதேவி.. உன் ஆசை தீர என்னைத் தமிழால் ஆண்டாய்.. ஆண்டாளுமானாய்.. அத்தனை ஆழ்வார்களையும் விஞ்சியது நின் தமிழ்.. இனியொருவர் உன்னைப் போல வரப் போவதுமில்லை.. மனதுக்கினியானைப் பாடப் போவதுமில்லை..’

ஆழ்வார்.. பட்டர்.. ஸ்ரீபாதந்தாங்கிகள்.. ஜனங்கள்.. எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க.. தடுக்கவோ.. தவிர்க்கவோ இயலாத படி.. ஆண்டாள் தனக்கான இடம் என்கிற ஸ்வாதீனமாய் மெல்லடி பெயர்த்து கர்ப்பக் கிரஹத்தினுள் போய்..

ஆழ்வார் தம் பெருமையெல்லாம் மறந்து தேம்பியதை அத்தனை பேரும் பார்த்தார்கள்.

ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால்

திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனான்!

கவிதை

# ஒரு மனிதன் ஒரு கதவுடன்

ஒரு மனிதன்
நகரத்து வீதியில் கதவோடு
நடந்து கொண்டிருக்கிறான்;
அதன் வீட்டைத் தேடி.

தன் மனைவி, குழந்தைகள், நண்பர்கள்
அந்தக் கதவின் வழியாக வருவதாக
கனவு காண்கிறான்.
கட்டவேயில்லாத தன்னுடைய அந்த வீட்டின்
கதவு வழியாக உலகமே
கடப்பதைப் பார்க்கிறான்:

மனிதர்கள், வண்டிகள், மரங்கள்
விலங்குகள், பறவைகள் என்று எல்லாமும்.

பூமிக்கு மேலாக எழுகின்ற
அந்தக் கதவு
மோட்சத்தின் பொன் கதவாக
இருக்க ஏங்குகிறது மேகங்கள், வானவில்
அரக்கர்கள், தேவதைகள் மற்றும் முனிவர்கள்
அதன் வழியில் கடப்பதாக
கற்பனை செய்கிறது.

ஆனால் கதவருகே
காத்திருப்பது நரகத்து முதலாளி.
இப்போது அது
பசுமையான காற்றுடன் ஊஞ்சலாடி
வண்டி இழுக்கிற வீடற்றவனுக்கு
நிழல் தரும் மரமாக
இருக்க ஏங்குகிறது.

ஒரு மனிதன் ஒரு கதவோடு
நகரத்து வீதியில் நடக்கிறான்;
ஒரு நட்சத்திரம் அவனோடு நடக்கிறது.




**கே.சச்சிதானந்தன்**

ஆளுமை

# தமிழர்

## அடக்கமே வடிவான அழகிரிசாமி !

புதுமைப்பித்தன் பரம்பரையில் பூத்த மலர், கு.அழகிரிசாமி. புதுமைப்பித்தனைப் போலவே சிறுகதையில் சாதனை படைத்தவர் அவர். எளிய நடை, சித்திரிப்பின் லாகவம், உள்ளோடும் துயர இழை, அமர்த்தலான நகைச்சுவை, கமழும் மண்ணின் மணம், உள்ளடக்கத்திற்கு ஏற்ற சொல்லாட்சி எனப் பல அழகுகள் கூடிச்சேர்ந்தது அவரது எழுத்துக் கலை. தமிழில் சிறுகதைக்காகச் சாகித்ய அகாடமியின் விருதைப் பெற்ற முதல் எழுத்தாளர் கு.அழகிரிசாமிதான் (1970). அதைக் காண வாய்ப்பைப் பெறாத துரதிர்ஷ்டசாலியும் அவரே.

கதையைத் தவிர கவிதை, மொழிபெயர்ப்பு, கட்டுரை, நாடகம், நாவல், பதிப்பு எனப் பல துறைகளிலும் அவர் தன் ஆற்றலைக் குறைந்த ஆயுளுக்குள் பதிவுசெய்திருக்கிறார். கவிதையைக் கையில் எடுத்தாலும் புதுமைப்பித்தன் பாதி வழியில், அதை விட்டுவிட்டு வந்துவிட்டார். கு.அழகிரிசாமி இலக்கிய உலகில் நுழைந்தது கவிதையையும் மொழிபெயர்ப்பையும் கைபிடித்துக் கொண்டுதான். அழகிரிசாமி, கவிதையைச் சிறுகதையைப் போலப் போஷிக்கவில்லையே தவிர, அதைக் கைவிடவில்லை. அழகிரிசாமியின் அறியப்படாத கவிதை முகத்தின் ஒரு சாயலை இக்குறிப்பில் நாம் பார்க்கலாம்.

கவிஞன் பிறப்பு: கு.அழகிரிசாமியின் முதல் கவிதை 'கலைமகள்'ளில் (1943) வெளிவந்தது. பிறந்த இடைசெவல் கிராமத்தில் எல்லோரும் அவரது ஆங்கிலப் புலமையையும் சித்திரச் சிறப்பையும் கண்டு மயங்கி நின்றபோது, அவரது கவிதை ஆற்றலைக் கண்டுகொண்டவர் அவர் நண்பர் க.வ.கந்தசாமி. அவருக்குள்ளிருந்த கவிஞனைக் கண்டுகொண்ட இன்னொருவர் 'ரசிகமணி' டி.கே.சி. 1944இல் திருச்சியில் நிகழ்ந்த வானொலியின் முதல் கவியரங்கில் (13.4.1944) டி.கே.சி. (62 வயது) அழகிரிசாமியைத் (21 வயது) தன்னுடன் பாடவைத்துள்ளார்.



தான் பார்த்த அரசு வேலையை ராஜினாமா செய்துவிட்டு சென்னையில் 'பிரசண்ட விகட'னில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார் அழகிரிசாமி. அதுவே அவரது முதல் பத்திரிகைப் பணி. தொடர்ந்து 'ஆனந்த போதினி'யிலும் வேலைபார்த்தார். இப்பத்திரிகைகளில் மிகுதியும் உரைநடையைக் கையாள வேண்டிய நிலையில் கவிதைப் பெண் ஓர் ஓரமாக நின்றுவிட்டாள் போலும். அழகிரிசாமியின் கவியாற்றலை மடைமாற்றி உரைநடைப் பக்கம் முழுவதும் திருப்பிவிட்டது பத்திரிகைப் பணியும் 'பிரசண்ட விகடன்' ஆசிரியர் நாரண. துரைக்கண்ணனும் எனலாம். இருப்பினும் அழகிரிசாமி தன் கவிதைக் குழந்தையை ரகசியமாக வளர்த்துக்கொண்டே வந்தார்.



# பெருமை

## பழ. அதியமான்

புனைபெயர்கள்: ஜி.செல்லையா, கு.அ., அ.ராதா, அ.சீதா, இடைசைப்புலவன் என்னும் செல்ல, சுருக்க, மகள், மனைவி புனைபெயர்களில் உரைநடைகளை எழுதிவந்த அழகிரிசாமி, கவிதை எழுத இரண்டு புனைபெயர்களையே பயன்படுத்தியிருக்கிறார். குவளை, தார்க்கோல் என்பன அவ்விரு புனைபெயர்கள். குவளை என்கிற பெயரையே தொடக்கத்திலிருந்து பெரும்பான்மையாகப் பயன்படுத்தியிருக்கிறார். 'சக்தி'யில் வெளிவந்த சாரல் என்னும் ஒரு கவிதையின் சிறு துளி பின்வருவது. குயில் பாட்டின் தொனியை மனதுக்குக் கொண்டு தருகிறது இந்த நற்கவிதை: 'ஊரெல்லாம் சோர்ந்து உறங்கிடினும், சந்திரனார்/பாரெல்லாம் காணப் பவனி வரும் காட்சியதை/சாரல் துளி மறைக்கும் சகியாக் கொடுமையினை— நேரம் பலவாக நெஞ்சுருகப் பார்த்திருப்பேன்'.

பின்னர் காந்தி மறைந்த 1948இல், அவர் பிறந்த நாளன்று சென்னை வானொலி ஏற்பாடுசெய்த முக்கியமான கவியரங்கில் அழகிரிசாமி கவிதை பாடினார். கவியரங்கிற்குக் கவிஞரே தலைமை ஏற்கும் வழக்கம் தொடங்காத அக்காலத்தில், அப்போதைய அமைச்சர் பக்தவத்சலம் தலைமையில் அக்கவியரங்கம் நடைபெற்றிருக்கிறது. பின்னரும் வானொலியில் 1959இல் நிகழ்ந்த பொங்கல் கவியரங்கமும் அமைச்சர் பக்தவத்சலம் தலைமையில் நடைபெற்றது. அதிலும் தங்கம்மாள் பாரதி, கண்ணதாசன் போன்றோரோடு 'புதிய கதிர்' என்ற தலைப்பில் அழகிரிசாமி கவிதை பாடினார்.



இரட்டையர் கவிதை: 1949 இல் கோயமுத்தூரில் ஜி.டி.நாயுடு மாளிகையில் ச.து.சு.யோகியார் தலைமையில் நடந்த பாரதி விழாவிலும் கவிதை பாடினார். இக்கவியரங்கில் கவிதை புதிய வடிவம் எடுத்தது. புதுமைப்பித்தன் பரம்பரைக் கொடியில் பூத்ததாகக் குறிப்பிட்ட இன்னொரு மலரான ரகுநாதனுடன் இரட்டையராகப் பாடிய கவிதை அது. பரஸ்பரம் இருவரும் ஒருவர் அடி எடுத்துக் கொடுக்க மற்றொருவர் முடித்துக்கொண்டு வருவார். முதல் பாட்டின் முதல் இரண்டு அடிகளை ரகுநாதன் பாடுவார், பின்னிரண்டு அடிகளையும் அடுத்த பாட்டின் முதல் இரண்டு அடிகளையும் அழகிரிசாமி பாடுவார். அதைத் தொடர்ந்து வரும் நான்கு வரிகளை ரகுநாதன் பாடுவார். இந்த முறையில் 4 வரிகள் கொண்ட 19 கண்ணிகளை இருவரும் அக்கவியரங்கில்





இணைந்து பாடினர். ரகுநாதன் 'திருச்சிற்றம்பலக் கவிராயர்' என்ற புனைபெயரில் புகழ்பெற்ற கவிஞராக மலர்ந்தவர் என்பது நாம் அறிந்ததே. அழகிரிசாமியின் கவிதையாற்றல் குடத்தில் இட்ட விளக்காக எவரும் அறியாமலிருந்தாலும், ஒளிர்ந்துகொண்டுதான் இருந்தது.

இரட்டையர் பாடிய கவிதையின் பத்து வரிகளை இங்கு பார்க்கலாம்: '...சொல்லுக்கு அழகேற்றும் அழகிரியான் அணி செய்யக் கேட்டிடுவீர்/பழகு தமிழ் எம்மிரட்டைப்பா./ ராவிலே கண் விழித்து ரயிலில்/ வரும்போது/ பாவிலேயே கண் வைத்துப் பாடினோம் — நாவிலே/ வந்து சரஸ்வதியார் வாழாக் கலியுகத்தில்/ சொந்தக் கவியாய் துணிந்து./ காட்பாடி ஜங்ஷனிலே காப்பியின்றி டீ குடித்து/ ராப்பாடியாய் நாங்கள் ராத்திரியில் — பாப்பாட/ எதுகையோடு போராடி எதிர்க்கட்சி தானாடி/ இதுவுரைத்தோம் கேட்பீர் இனி.' தந்திருக்கும் பாடலில் முதல் நான்கடிகள் ரகுநாதனும் பின்னான்கு அடிகள் அழகிரிசாமியும் பாடியவை. தொடரும் இரண்டடிகள் ரகுநாதன் பாடியவை.

சாகித்யங்கள்: 1940கள் காலத்திய பெரும்பான்மை எழுத்தாளர்கள்போல அழகிரிசாமியும் இசையறிவு மிக்கவர். அவருடைய ஊர்க்காரரும் நண்பருமான கி.ராஜநாராயணனும் இசையார்வம் மிக்கவர். இசைக் கலைஞர்கள் காருகுறிச்சி அருணாசலம், விளாத்திகுளம் சுவாமிகள் ஆகியோர் இவர்களின் இசை ஆதர்சங்கள். அழகிரிசாமி சாகித்யங்கள் எழுதும் ஆற்றலையும் உடன் வளர்த்துக்கொண்டே வந்திருக்கிறார். இதற்கான ஆதாரங்கள் அவரது நாட்குறிப்பிலும் கிடைக்கின்றன. ஆனால், எழுதிய சாகித்யங்களைத் தொகுத்துவைக்கவோ பத்திரப்படுத்தவோ இல்லை எனத் தெரிகிறது. திடீரென அழகிரிசாமி தன் 47 ஆவது வயதில் 1970இல் அகால மரணம் அடைந்துவிட, அவர் மனைவி இசைக் கலைஞர் சீதாலட்சுமி, அழகிரிசாமி எழுதிய சாகித்யங்களைத் தேடினார். அவரது பால்ய கால நண்பர் கி.ராவிடமும் அவர் கேட்டிருக்கக் கூடும்.



அதைக் குறித்து கி.ரா. எழுதிய பதில் கடிதத்திலிருந்து (4.4.1971) சில வரிகள்: 'வீடெல்லாம் தேடிப் பார்த்ததில் அழகிரிசாமியின் சாகித்யங்கள் ஐந்து கிடைத்தன. 'யார் எனக்குத் தூது சொல்லுவார்' (சண்முகப்பிரியா), 'போய் வருவேன் என் சுவாமி' (நடபைரவி), 'தூது சொல்ல யாரும் இல்லையே' (சஹானா), 'ராசாதி ராசர் மெச்சும்' (ஆனந்த பைரவி), 'வருவதற்கென்ன கோபமோ' (ஹிந்தோளம்). இன்னும் தேடிப் பார்த்தால் மற்றவைகளும் கிடைக்கக்கூடும்' என்று அந்தக் கடிதம் தொடர்ந்து நம்பிக்கையூட்டிச் செல்கிறது. அவரது நூற்றாண்டிலாவது கு.அழகிரிசாமியின் ஆற்றலின் பன்முகங்களும் விகசிக்கட்டும். அதற்கு 'தேடிப் பார்த்தால் மற்றவைகளும் கிடைக்கக்கூடும்' என்கிற கி.ரா.வின் வாக்கு கைவிளக்காகட்டும்.

"என்ன உக்தியைக் கையாளலாம் என்பது பற்றி நான் தனியே யோசிப்பது கிடையாது. நுணுக்கம், அமைப்பு இவற்றைப்பற்றியும் வரையறுத்துக்கொண்ட ஒருசட்ட வரம்புக்குள் உட்பட்டு நான் எண்ணிப் பார்ப்பதும் கிடையாது. நேரடியாக அன்றாட வாழ்வில் பெறும் அனுபவங்களை,அவற்றின் உணர்வுகளின் தூண்டுதலின் பேரில் மனத்தில் ஏற்படும் கற்பனை வளத்துடன் சேர்த்து எழுதுகிறேன்" — கு.அழகிரிசாமி

எழுத்தாளர் கு.அழகிரிசாமி, தமிழ் சிறுகதையின் முன்னோடிகளில் முக்கியமானவர். சிறு சம்பவங்களை கோத்து அதில் தேர்ந்த கதையினை சொல்லும் கதை சொல்லி. குழந்தைகளுக்கான எழுத்தாளர் என்று இலக்கிய உலகம் கூறினாலும், சிறுவர்களின் அக மற்றும் புறஉலகத்தை சமூக முதலீட்டோடு இணைத்து பெரியவர்களுக்கான குழந்தைகளின் கதையைச் சொன்ன வித்தகர்.

அணுவளவும் தற்பெருமை அற்றவராய் வாழ்வதற்கான மனமுதிர்ச்சி கொண்டவர்கு. அழகிரிசாமி. எளிமை, அடக்கம் உள்ளிட்ட பல உயரிய நற்குணங்களின் தொகுப்பாய் வாழ்ந்த அவர் மாபெரும் இலக்கியவாதியாக மட்டுமல்லாமல், மாமனிதராகவும் விளங்கினார் என்பதே அவரின் மேலான பெருமை.

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!

தொடர்புகளுக்கு

editor@ithamil.com

புதினம்

# சிவகாமியின்




மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## கலங்கிய குளம் 35

ஆஹா! அந்தப் பழைய தாமரைத் தடாகம்தானா இது? சிவகாமியும் தானும் எத்தனையோ இன்பமான தினங்களைக் கழித்த குளக்கரைதானா இது? ஆம்; அதுதான் ஆனால் அதன் தோற்றம் இப்போது அடியோடு மாறிப் போயிருந்தது. மாமல்லரின் மனம் அடைந்திருந்த நிலையை அந்தத் தாமரைக்குளம் நன்கு பிரதிபலித்தது.

பளிங்குபோல் தெளிந்த தண்ணீர் ததும்பிக் கொண்டிருந்த தடாகத்தில் இப்போது பெரும் பகுதி சேறாயிருந்தது. காண்போர் கண்களையும் உள்ளத்தையும் ஒருங்கே கவர்ந்து பரவசப்படுத்திய செந்தாமரை மலர்கள், குவிந்த மொட்டுக்கள், பச்சை வர்ணக் குடைகள் போல் கவிந்து படர்ந்திருந்த இலைகள் — இவை ஒன்றும் இப்போது இல்லை. யானைகளின் காலினால் சேற்றோடு சேர்த்து மிதிக்கப்பட்ட சில தாமரை இலைகள் காணப்பட்டன. வாடி வதங்கிய இலைகளையுடைய தாமரைக் கொடிகள் துவண்டும் உலர்ந்தும் கிடந்தன.




குளக்கரையில் தழைத்துச் செழித்திருந்த விருட்சங்களின் கிளைகள் முறிக்கப்பட்டுப் பாதி மொட்டையாகக் காணப்பட்டன.

ஆ! அந்த விசுப்பலகை! அதுவும் பாதியில் முறிந்து ஒரு பகுதி தரையில் துகள் துகளாய்க் கிடந்தது. இன்னொரு பாதி அப்படியே பிளந்த முனைகளுடன் நின்றது.

இருதயம் உடைந்த மாமல்லர் அந்தப் பிளந்த விசுப்பலகையின் மேல் உட்கார்ந்தார். சுற்று முற்றும் பார்த்தார். பழைய ஞாபகங்கள் ஒன்றையொன்று தள்ளிக் கொண்டு போட்டியிட்டுக் கொண்டு வந்தன.

வசந்த காலத்தில், வனத்திலுள்ள மரங்களெல்லாம் புதுத் தளிர்களும் புஷ்பங்களுமாய்க் குலுங்கிக் கொண்டிருந்த நாட்களில், எத்தனையோ தடவை சிவகாமியைத் தேடிக் கொண்டு அவர் அங்கு வந்ததுண்டு. கானகத்துப் பட்சிகள் கலகலவென்று சப்தித்துக் கொண்டிருந்த நேரங்களில், அவரும் சிவகாமியும் அதே விசுப்பலகையில் உட்கார்ந்து, கண்களோடு கண்களும் கரங்களோடு கரங்களும் இருதயத்தோடு இருதயமும் பேசும்படி விட்டு, வாய்மூடி மௌனிகளாய் நேரம் போவது தெரியாமல் இருந்ததுண்டு.

கீழ் வான முகட்டில் பச்சை மரங்களுக்கிடையே பொற் குடத்தைப் போல் பூரண சந்திரன் உதயமாகும்போது, அந்த முழுமதியையும் சிவகாமியின் முகத்தையும் மாமல்லர் எத்தனை தடவை ஒப்பிட்டுப் பார்த்திருப்பார்!

தாமரைக் குளத்திலே ததும்பிய தெளிந்த நீரின் விளிம்பிலே நின்று, மேலே தோன்றிய சிவகாமியின் உண்மை உருவத்தையும் தண்ணீரிலே தெரிந்த



# சபதம் 35

கல்கி

அவளுடைய பிரதி பிம்பத்தையும் மாறி மாறிப் பார்த்து மகிழ்ந்தது எத்தனையோ நாள்!

இம்மாதிரி ஞாபகங்கள் எல்லாம் மாமல்லருக்கு ஆரம்பத்தில் இன்பத்தையளித்தன. ஆனால் இடையிடையே, “இனிமேல் அந்த மாதிரி அனுபவங்கள் நமக்குக் கிட்டப் போவதே இல்லை” என்ற நினைவு வந்ததும் மனத்தில் கொடிய வேதனை உண்டாயிற்று. இனிமேல் பொறுக்க முடியாது என்ற மனோநிலை ஏற்பட்டதும் மாமல்லர் குதித்து எழுந்தார். விரைந்து சென்று குதிரை மீது தாவி ஏறி ஆயனர் வீட்டை நோக்கிச் செலுத்தினார்.

காஞ்சியிலிருந்து புறப்பட்ட சமயம் அவர் மனத்திலிருந்த அமைதி இப்போது இல்லை. அமைதிக்குப் பதிலாக இப்போது கோபமும் ஆத்திரமும் அவர் மனத்தில் குடிகொண்டிருந்தன. சிவகாமியைக் கொள்ளை கொண்டுபோன சளுக்கப் பகைவர்கள் மீது குரோதம் எழுந்தது.

மூடத்தனத்தினால் சிவகாமியைப் பறி கொடுத்த ஆயனர்மீது கோபம் கோபமாக வந்தது.


புத்த பிக்ஷுவின் மீது இன்னதென்று விவரமாகாத சந்தேகமும் கோபமும் ஏற்பட்டன. ஆ! அந்தப் பாஷாண்டியினிடம் அவருக்கு எப்போதுமே நல்ல அபிப்பிராயம் கிடையாது. பிக்ஷு மனம் வைத்திருந்தால் சிவகாமியைக் காப்பாற்றியிருக்கலாமல்லவா? ஏன் காப்பாற்றவில்லை? ஏன் ஆயனரிடம் செய்தி ஒன்றும் சொல்லவில்லை? பிக்ஷு என்ன ஆனார்? எப்படி மாயமாய் மறைந்தார்?




சிவகாமியின் அரங்கேற்றம் தடைப்பட்ட அன்றிரவு இராஜ விஹாரத்தின் அருகில் புத்த பிக்ஷுவைச் சுட்டிக் காட்டிச் சக்கரவர்த்தி தமக்கு எச்சரித்தது



மாமல்லருக்கு நேற்று நடந்ததுபோல் ஞாபகம் வந்தது. உடனே, கோபம் தந்தையின் பேரிலேயே திரும்பிற்று. மகேந்திர பல்லவரின் மந்திர தந்திரங்கள், சூழ்ச்சிகள், வேஷங்கள் இவற்றினாலேதான் பல்லவ இராஜ்யம் இன்றைக்கு இந்தக் கதியை அடைந்திருக்கிறது! தாமும் சிவகாமியை இழக்கும்படி நேரிட்டிருக்கிறது!



திடீரென்று ஒரு விபரீதமான சந்தேகம் மாமல்லரின் உள்ளத்தில் உதித்தது. ஒருவேளை சிவகாமி சிறைப்படும் வண்ணம் சூழ்ச்சி செய்தவர் மகேந்திர பல்லவர்தானோ? இல்லாவிடில் எதற்காகத் தன்னைப் போர்க்களத்துக்கு அனுப்பிவிட்டு, மண்டபப்பட்டு கிராமத்திலிருந்து சிவகாமியைத் தருவிக்கிறார்? எதற்காக அரண்மனைத் தோட்டத்தில் ஒரு சுரங்க வழியை ஏற்படுத்தி அதைக் கண்ணபிரானின் மனைவிக்குத் தெரியும்படி செய்திருக்கிறார்? ஒருவேளை அந்தப் பெண் கமலி கூடச் சக்கரவர்த்தியின் சதிக்கு உடந்தையாயிருந்திருப்பாளோ? எல்லாரும் சேர்ந்து தன்னை இப்படி வஞ்சித்துவிட்டார்களோ! ஆஹா! இது என்ன சதிகார உலகம்? துரோகமும், தீவினையும் நிறைந்த சதிகார உலகம்!



இத்தகைய மனோநிலையில் மாமல்லர், ஆயனர் வீட்டு வாசலுக்கு வந்து சேர்ந்தார். சிவகாமி சிறைப்பட்டது சம்பந்தமாக மர்மமாகவும், விளங்காமலும் இருந்த சில விஷயங்களை ஆயனரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள அவர் விரும்பினார். வீட்டு வாசலுக்குச் சற்றுத் தூரத்திலேயே குதிரையை நிறுத்தி விட்டுத் தாமும் சற்று அங்கேயே நின்று மனத்தை அமைதிப்படுத்திக் கொண்டார். பிறகு சாவதானமாக நடந்து வந்து ஆயனர் வீட்டுக்குள் நுழைந்தார்.



வீட்டுக்குள்ளே பேச்சுக் குரல் கேட்டது அவருக்குச் சிறிது வியப்பையளித்தது. ஆயனர் யாருடன் பேசிக் கொண்டிருக்கிறார்?

உள்ளே சிற்ப மண்டபத்தில் ஆயனருக்கு அருகில் உட்கார்ந்திருந்த மனிதனைப் பார்த்ததும் மாமல்லருடைய வியப்பு அளவு கடந்தது. அந்த மனிதன் ஒற்றர் தலைவன் சத்ருக்னன்தான்!

சத்ருக்னனை அங்கே கண்டதுகூட மாமல்லருக்கு அவ்வளவு வியப்பளிக்கவில்லை. சத்ருக்னனுடைய முகத்தைப் பார்த்ததும் பளிச்சென்று இன்னொரு முகம் ஞாபகத்துக்கு வந்தது. அப்படி ஞாபகத்துக்கு வந்த முகம் சற்று முன்னால் காட்டுப் பாதையில் அவர் பார்த்த பெண்ணின் முகமேதான்!

என்ன அதிசயமான ஒற்றுமை? ஒருவேளை சத்ருக்னனுடைய தங்கை அல்லது தமக்கையோ அவள்? அல்லது ஒருவேளை இவனே...? சந்தேகம் தோன்றிய ஒரு கணத்திற்குள்ளேயே அது தீர்ந்து விட்டது. சத்ருக்னனுக்கு அருகில் ஒரு சேலையும், மற்றும் ஸ்திரீகளுக்குரிய சில ஆபரணங்களும் கிடந்ததை நரசிம்ம பல்லவர் பார்த்தார்.

(சபதம் தொடரும்)

# வறுமை

நண்பர்களுடன் செல்லும்
உணவகங்களில்
என்றைக்குமே நான்
பணம் செலுத்த முந்துவதில்லை
அத்தனை கனமான எண்கள்
என் பையிலோ
வங்கி கணக்கிலோ இல்லை.
அடுத்த மாதம்
வந்து சேரும் வரவு என்ற
எந்த உத்திரவாதமும் அற்று
பூஜ்ஜியங்கள் குறையும்
என் வங்கிக்கணக்கு
குறைந்த பட்ச இருப்பின்
எல்லைக்கு முன்னும் பின்னும்
ஒரு அகதியைப் போலஅலைகிறது
மாதம் முழுதும்.

அதனால்,
அதிகபட்சம் நான் செய்வது
செலவழிக்க எத்தனிப்பது போல
பைக்குள் கையை விட்டபடி
மேலெழுவது தான்.
யாரேனும் வேண்டாமென்று
கரம் பிடித்து மறுத்து விட
கடவுளை வேண்டிக் கொள்வேன்
அப்படியாக ஒரு தேவ தூதன்
ஒவ்வொரு முறையும்
காப்பாற்றி விடுவார்.

சிலமுறை
யாரும் தடுக்காத வஞ்சத்தில்
காலாவதியான
ஒரு வங்கி அட்டை
சரியான நேரத்தில்
எனை காப்பாற்றி விடும்.
இதற்காகவே
எந்த செயலிக்கும்
என் அலைபேசியில்
இடமில்லை
மீன் இல்லா குளத்திற்கு
தூண்டில் எதற்கு.




இப்படியான
எந்த ஒரு பாசாங்குமற்று
என் மேஜைக்கு
ரசீதை
நான் எழாமல்
எனக்கு முன்பே பெற்றுக்கொள்ளும்
அவளிடம் மட்டுமே
வெளிப்படையாக அறிவித்தேன்
என் வறுமையை.

**ஜி.ஏ.கௌதம்**



# கரப்போரம்

## வான் வழங்கும் அமிழ்தம்


தண்ணீரின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும், இருக்கும் நீர்வளங்களைமேம்படுத்தவும், மழை நீர் சேமிப்பின் அவசியம், நீர் மாசுபாட்டால் ஏற்படும் நோய்கள், தண்ணீர் பயன்பாட்டின் சிக்கனம் ஆகியன குறித்து மக்களிடையே பிரசாரம் செய்யவும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22—ஆம் தேதி உலக தண்ணீர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

உலக தண்ணீர் தினம், முதல் முதலில் 1992—ஆம் ஆண்டில் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோசில் நடந்த சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் முன்மொழியப்பட்டது. 1993—ஆம் ஆண்டு ஐ.நா. சபை மார்ச், 22—ஆம் தேதியை உலக தண்ணீர் தினமாக அறிவித்த பின் உலக நாடுகளால் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ‘அமைதிக்காக நீர்’ என்பது ஐ.நா.வின் சர்வதேச நிலத்தடி நீர் ஆதார மதிப்பீட்டு மையத்தால் (ஐஜிஆர்எசி) முன்மொழியப்பட்ட 2024—ஆம் ஆண்டிற்கான உலக தண்ணீர் தினத்தின் கருப்பொருளாகும்.

எதிர்காலத்தில் கிடைத்தற்கரிய பொருளாக தண்ணீர் மாறப் போகிறது என்பதால், உலக நாடுகளிடையே அமைதி மற்றும் ஒற்றுமையை வளர்க்கவும், எல்லை கடந்த நீர்வளங்களை தண்ணீர் தேவைப்படும் நாடுகளிடையே பங்கீடு செய்ய வேண்டியதன் அவசியத்தையும் இக்கருப்பொருள் உணர்த்துகிறது. உலக தண்ணீர் தினத்தின் சின்னம் ஐ.நா.வின் நீல நிறத்திலுள்ள நீர்த்துளியின் வடிவமாகும். நீர் அனைத்து உயிரினங்களின் வாழ்க்கையோடு ஒன்றிவிட்ட அத்தியாவசிய சக்தியாகவும், உயிர் வாழ அடிப்படைத் தேவையாகவும் உள்ளது.



உயிர் வாழ்க்கைக்கும், உலக இயக்கத்திற்கும் நீரின் இன்றியமையாமையை நம் முன்னோர் அன்றே உணர்ந்திருந்தனர். அதனால், நீர்வளத்தைப் பெருக்கினர்; நீர்ப்பாசனத்திற்கு வழிவகுத்தனர்; வாழ்வியல் சடங்குகளில் முதன்மையளித்து சிறப்பித்தனர்; நீர் நிலைகளுக்கு இன்மையையும் அளித்து வழிபட்டனர். உலகின் பல பகுதிகளில் நன்னீர்ப் பற்றாக் குறை காணப்படுகிறது. நீர் ஆதாரங்கள் மனிதத் தவறுகளால் வேகமாக மாசுபட்டு வருகின்றன. மக்கள்தொகைப் பெருக்கம், நகர்ப்புறக் கழிவுநீர், தொழிற்சாலைக் கழிவுநீர், காடுகள் அழிப்பு, வேதிப் பொருள்களின் வெளியேற்றம், ஏரி, குளம் போன்ற நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு போன்ற அனைத்தும் இதற்குக் காரணங்கள். இந்தியா வற்றாத நதிகளையும், வளமான நீர்நிலைகளையும், நிலத்தடி ஊற்றுக்களையும் தன்னகத்தே கொண்ட திருநாடு. உலகிலேயே அதிக மழைப்பொழிவுள்ள சிரபுஞ்சி இந்தியாவிலுள்ளது. வற்றாத ஜீவநதிகள் இந்தியாவில் ஓடுகின்றன. செறிவு மிக்க நீர்






# நீரை! உயிராய்

பாறப்புறத் இராதாகிருஷ்ணன்

வளங்கள் நிரம்பப் பெற்றிருப்பதாலே இந்தியா ஒரு வேளாண்மை நாடு என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. 'இந்தியாவில் தேவையைவிடப் பத்து மடங்கு அதிக தண்ணீர் உள்ளது' என்றார் ஆங்கிலேய ஆட்சிக் காலத்து தலைமை நீர்வளப் பொறியாளர் சர் ஆர்த்தர் காட்டன்.

அப்படியிருந்தும் குடிநீருக்கும், பிற தேவைகளுக்கும் தட்டுப்பாடோடு நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்தியா — பாகிஸ்தான் இடையேயான சிந்து நதி நீர் பிரச்னை, இந்தியா — சீனா இடையேயான பிரம்மபுத்ரா நதி நீர் பிரச்னை, இந்திய மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பங்கீட்டு பிரச்னை இவை இன்னும் தீர்ந்தபாடில்லை. மகாகவி பாரதியார், 'வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்' என்று பாடியது அவருடைய கனவல்ல; இந்திய விடுதலைப் போராட்டத்தின் லட்சியத் திட்டம். கர்நாடக மாநிலம், பெங்களூரில், கோடை தொடங்குவதற்கு முன்பே கடுமையான தண்ணீர் பஞ்சம் நிலவுகிறது. அங்கு கடந்த ஆண்டு போதிய மழை பொழியாததால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளது. மேலும், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக காவிரி ஆற்றில் நீர்வரத்து மிகவும் குறைந்துள்ளது.





தண்ணீர்பற்றாகுறை நீர்ப்பாசனத்தை பாதித்ததோடு, குடிநீர் தட்டுப்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளது. போதிய மழையின்மை, ஆழ்த்துளைக் கிணறுகள் வடு கிடப்பது, நிலத்தடி நீர் கு□ல், நீர் மேலாண்மை குறித்துத் திட்டமிடாமை போன்றவை பெங்களூரில் தண்ணீர் பிரச்னை ஏற்படக் காரணங்களாகும். பெங்களூர் காவிரியிலிருந்து ஒரு நாளைக்கு சுமார் 1,450 மில்லியன் லிட்டர் தண்ணீரைப் பெற்றும், அந்நகரம் இன்னும் ஒரு நாளைக்கு 1,680 மில்லியன் லிட்டர் தண்ணீர் பற்றாகுறையை எதிர்கொள்கிறது. அங்கே வசிப்பவர்களுக்கு குடிக்கவும் குளிக்கவும்கூட தண்ணீர் இல்லை என அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.




தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக பல்வேறு தனியார் பள்ளிகள், பயிற்சி மையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டு, இணையதள வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் துறையின் மையமாக உள்ள பெங்களூரில் தகவல் தொழில்நுட்பத்துறை ஊழியர்கள் சொந்த ஊர் சென்று வீட்டிலிருந்தபடியே வேலை செய்ய முடிவு

செய்துள்ளனர். தண்ணீரின் மகத்துவத்தை, சேமிப்பை, பயன்படுத்துவதில் சிக்கனத்தை அனைவரும் உணர வேண்டும்.




குளிப்பதற்கு உட்பட அனைத்து வகையான பயன்பாட்டிற்கும் அளவான தண்ணீரையே பயன்படுத்த நாம் இப்போதிருந்தே பழகிக் கொள்ள வேண்டும். அரசு மழைநீர் சேமிப்புத் திட்டத்தைக் கட்டாயமாக்க வேண்டும். நீர்நிலை ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அவற்றை பாரபட்சம் பார்க்காமல் அகற்றி, அங்கு மீண்டும் நீர்நிலைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை உள்ளாட்சி நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்.

காடுகள் அழிப்பதைத் தவிர்த்து, காடுகளை உருவாக்க வேண்டும். இல்லையெனில் கோடையில் தண்ணீர் பிரச்னை பெரும் பிரச்னையாகிவிடும். வாழ்வின் அமுதமாவும், நாட்டின் அரிய வளங்களில் ஒன்றாகவும் மாறிட்ட நீரை வீணடிக்காமல், சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியது நம் ஒவ்வொருவரின் சமூகக் கடமையாகும். இன்றைய நீர் சேமிப்பு நாளைய உயிர் பாதுகாப்பு. தண்ணீர்ப் பற்றாக்குறை தவிர்ப்பது எப்படி?

மார்ச் 22ஆம் தேதி உலகத் தண்ணீர் நாள். ஆனால், தண்ணீர் பற்றிச் சமீப காலமாக வரும் தகவல்கள் நம்மைப் பயமுறுத்துகின்றன. தண்ணீருக்காகப் போர் மூளும் அபாயம் உள்ளதாக ஐக்கிய நாடுகள் அவையின் முன்னாள் பொதுச் செயலாளர் கோஃபி அன்னான் 2001ஆம் ஆண்டிலேயே கூறியுள்ளார். தென் ஆப்ரிக்காவின் தலைநகரங்களில் ஒன்றான கேப்டவுனில் 2018இல் நிகழ்ந்ததுபோல, தற்போது பெங்களூருவில் வரலாறு காணாத தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டுக்குள் உலகத்திலுள்ள மூன்றில் இரண்டு பகுதி மக்கள் கடுமையான தண்ணீர்ப் பஞ்சத்தை சந்திப்பார்கள் என்கிறது உலக உணவு — விவசாய அமைப்பு. இப்பிரச்சினைக்கு என்னதான் தீர்வு?

நீர்த் தேவையில் மாற்றங்கள்: மத்திய நீர்வள அமைச்சகத்தால் வெளியிடப்படும் தரவுகளின்படி, ஓர் ஆண்டில் பயன்பாட்டுக்குக் கிடைக்கும் நீரின் அளவு 1,123 பிசிஎம். ஆனால், அதிகரித்துவரும் மக்கள்தொகையாலும், விவசாயம், தொழில் துறைகளின் அதிவேக வளர்ச்சியாலும், தண்ணீரின் தேவை பல மடங்கு உயர்ந்துள்ளது. உதாரணமாக, மத்திய நீர் ஆணையத்தின் தரவுகளின்படி, கடந்த 2000இல் 634 பிசிஎம் ஆக இருந்த, நாட்டின் மொத்த நீர்த் தேவையானது, 2025இல் 1,093 பிசிஎம்மாகவும், 2050இல் 1,447 பிசிஎம்மாகவும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் மொத்தத் தண்ணீர்த் தேவையானது, தண்ணீர் இருப்பைவிட அதிகரிக்கக்கூடும்.




தண்ணீர்ப் பஞ்சத்தை மதிப்பிடுவதற்காக உலகளவில் பயன்படுத்தப்படும் அளவுகோலின்படி, எங்கெல்லாம் தனிநபர் பயன்பாட்டுக்காக ஓர் ஆண்டில் கிடைக்கின்ற தண்ணீர் 1,700 கனமீட்டர் அளவுக்குக் குறைவாக உள்ளதோ, அங்கே தண்ணீர்ப் பஞ்சம் உள்ளதாகக் கூறலாம். இதன்படி, இந்தியாவில் தற்போது ஏறக்குறைய 76% மக்கள் தண்ணீர்ப் பஞ்சத்தில் உள்ளார்கள். மத்திய நீர் ஆணையத்தால் மொத்தமாக வகைப்படுத்தப்பட்டுள்ள 20 பெரிய ஆற்றுப் படுகைகளில் **(river basin)**, வெறும் ஒன்பது படுகைகளில் வசிப்பவர்கள் மட்டுமே தற்போது தண்ணீர்ப் பஞ்சம் இல்லாமல் வாழ்கிறார்கள்.

தண்ணீர்ப் பயன்பாட்டிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தியாவில் தற்போது மொத்தமாகப் பயன்படுத்தப்படும் 1,093 பிசிஎம் நீரில், ஏறக்குறைய 84% விவசாயத்துக்கும், 16% வீடு, தொழிற்சாலை, இதர துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், 2050இல் நீரின் மொத்தத் தேவையானது 1,447 பிசிஎம்மாக உயரலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. விவசாயத் துறையின் தேவை 910 பிசிஎம்மிலிருந்து 1,072 பிசிஎம்மாகவும், மற்ற துறைகளின் தேவை 183—லிருந்து 375 பிசிஎம்மாகவும் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, மொத்த நீர்ப் பயன்பாட்டில், விவசாயத் துறையின் பயன்பாடு 74% ஆகக் குறையும், மற்ற துறைகளின் பயன்பாடு 26% ஆக அதிகரிக்கும். இத்தரவுகள் தண்ணீரின் தேவை பன்மடங்கு அதிகரிக்கப் போவதாக எச்சரிக்கின்றன.

செய்ய வேண்டியவை: தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க இரண்டு வகையான தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன. ஒன்று, நீர் ஆதாரத்தைப் பெருக்குவது. மற்றொன்று, நீரைச் சேமிப்பது. அணைகள் கட்டியும், புதிய குளங்களை வெட்டியும், ஆழ்குழாய்க்

கிணறுகளை அமைத்தும்நீர் இருப்பை உயர்த்தலாம் எனச் சிலர் கருதுகிறார்கள். ஆனால், தண்ணீரின் கொள்ளளவைநினைத் தபோதெல்லாம் உயர்த்த முடியாது. ஒரு நாட்டின் — பயன்படுத்தக்கூடிய மொத்தத் தண்ணீரின் அளவு (water potential) வரையறுக்கப்பட்டஒன்று. அதை மீறி அணைகள் கட்டினால், சுற்றுச்சூழல்பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்பட்டுவிடும். நமதுநாட்டின் பயன்படுத்தக்கூடிய மொத்த நீர்ப்பாசனஅளவு (Irrigation potential) 13.99 கோடிஹெக்டேர்கள், இவற்றில் ஏறக்குறைய 90%உருவாக்கப்பட்டுவிட்டன. எனவே, புதிய நீராதாரத்தைப் பெருக்குவது கடினம். இதன் காரணமாக, நீரின் தேவையைக் குறைத்து, நீரின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.




நீர் ஒரு விலையில்லாப் பொருள் என்ற கருத்து நம் நாட்டில் நிலவிவருகிறது. இதனால், நீர் பயன்பாட்டுத் திறன் (water use efficiency) மிகவும் குறைவாக உள்ளது. நீருக்கு விலையை நிர்ணயிப்பதால் மட்டும், நீர்ப் பற்றாக்குறையை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்றாலும், குறைந்தபட்ச அளவீட்டு விலையை நிர்ணயிப்பதன் மூலம், இதன் பயன்பாட்டுத் திறனை அதிகரித்து, நீரைச் சேமிக்க முடியும்.

ஏறக்குறைய 85% நீரைப் பயன்படுத்தும் விவசாயத் துறையில், நீரைச் சேமிக்க முயற்சி எடுக்க வேண்டும். தற்போது நடைமுறையில் இருந்துவரும் பழங்கால வாய்க்கால் பாசன முறையில் நீர் பயன்பாட்டுத் திறன் வெறும் 35—40% மட்டுமே. வாய்க்கால் மூலம் பயிர்களுக்கு நீரைக் கொடுப்பதால் ஏறக்குறைய 60% நீர் விரயமாகிறது. ஆனால், சொட்டு நீர் (drip irrigation), தெளிப்பு நீர் (sprinkler irrigation) முறைகளின் மூலமாகக் குறைந்தபட்சம் 50% நீரைச் சேமிக்க முடியும். 40—60%வரை அதிக மகசூல் கிடைக்கும். குறைந்த சாகுபடிச் செலவுடன் மின்சாரத்தையும் சேமிக்க முடியும். நுண் நீர்ப்பாசனத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான முறைகளைக் கண்டறிவதற்காக மத்திய விவசாய அமைச்சகத்தால் 2004இல் அமைக்கப்பட்ட குழு (Report of the task force on micro irrigation), குறைந்தது 85 பயிர்களைஇந்நீர்ப்பாசன முறையின்கீழ் பயிர்செய்ய முடியும் என்றும், ஏறக்குறைய 7 கோடி ஹெக்டேர் இப்பாசன முறைக்குச் சாத்தியமான பரப்பளவாக இருப்பதாகவும் கணக்கிட்டுள்ளது. தற்போது ஏறக்குறைய 1.5 கோடி ஹெக்டேர் மட்டுமே இப்பாசன முறையைப் பயன்படுத்திவருகின்றன.

கால்வாய்ப் பாசனம் மூலமாக ஏறக்குறைய 1.9 கோடி ஹெக்டேர் பரப்பளவில் தற்போது பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மத்திய அரசால் அமைக்கப்பட்ட நீர்ப் பாசனத்துக்கான விலைக் குழு (Report of the committee on pricing of irrigation water) கால்வாய்ப் பாசனத்தில் நீர் பயன்பாட்டுத்திறன் மிகக் குறைவு எனக் கூறியுள்ளது. விவசாயிகளுக்குப் பொருந்தக்கூடிய நீர்ப்பாசன விலையை நிர்ணயித்து, நீர் எப்படி, எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்ற கணக்கு முறையை (water accounting) அறிமுகப்படுத்தியதால், மகாராஷ்டிர மாநிலம் கால்வாய் நீர்ப் பயன்பாட்டுத் திறனை அதிகரித்துள்ளது. இதே போன்று நீர்க் கணக்கு முறையை நாடு முழுவதும் கொண்டுவர வேண்டும்.




தற்போதுள்ள மொத்த நீர்ப்பாசனப் பரப்பளவான 98 மில்லியன் ஹெக்டேரில், நிலத்தடி நீர்ப்பாசனத்தின் பங்கு ஏறக்குறைய 68%. ஆனால், நிலத்தடி நீர், கட்டுப்பாடில்லாமல் உறிஞ்சப்படுவதால் அதன் மட்டம் வேகமாகக் குறைவதோடு, சுற்றுச்சூழல்சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. நிலத்தடி நீர் திறனற்ற முறையில் பயன்படுத்தப்படுவதற்கு ஒரு முக்கியக் காரணம், மாநில அரசுகளால் வழங்கப்படும் இலவச மின்சாரம் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. எனவே, குறு — சிறு விவசாயிகள் தவிர, மற்றவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குவதை முறைப்படுத்துவது நல்லது.

நெல், கரும்பு, வாழை, கோதுமை, காய்கறிகள் போன்ற அதிக நீர் குடிக்கும் பயிர்களின் பரப்பளவு இந்தியாவில் அதிகரித்துவருகிறது. இதன் சாகுபடிப் பரப்பளவைக் கட்டுப்படுத்துவதற்கு, குறைந்தபட்ச ஆதார விலைக் கொள்கைகளில் தேவையான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். வேகமாக நிகழ்ந்துவரும் காலநிலை மாற்றங்கள், மழை அளவைக் குறைத்து, தண்ணீர்ப் பற்றாக்குறையை மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. தண்ணீர்த் தட்டுப்பாடு உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி வறுமையை அதிகரிக்கும். அரசு சுதாரிக்க வேண்டிய தருணம் இது!




## இனிப்பை அறவே தவிர்ப்பது சரியா?

தமிழ்நாட்டின் பல தேநீர் கடைகளில் ‘இனிப்பு அதிகமாக போடுங்கள்’ என்று சொல்பவர்களின் முகத்தில் அல்லது சொல்லும் தொனியில் ஒரு மெல்லிய கர்வம் தென்படும். எனக்கு உடலில் எந்த பிரச்சினையும் இல்லை அல்லது நான் அதிகமாக இனிப்பு சாப்பிடுவேன், ஆனால் என் உடலுக்கு ஒன்றும் ஆகாது என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பாக அது இருக்கும்.

அதுவே நாட்டுச் சர்க்கரை அல்லது கருப்பட்டி கலந்த தேநீராக இருந்தால் இன்னும் மனநிறைவுடன் வாங்கிப் பருகுவார்கள். சாதாரண தேநீரை விட விலை அதிகமாக இருந்தாலும், வெள்ளைச் சர்க்கரை என்றால்தானே பிரச்சினை, நாட்டுச் சர்க்கரை அல்லது கருப்பட்டி என்றால் உடலுக்கு நல்லது, இதை தாராளமாக குடிக்கலாம் என்ற எண்ணம் தான் காரணமாக இருக்கும்.

அதே சமயத்தில், உடல் எடை குறித்து அதிகம் கவலைக் கொள்பவர்கள் சர்க்கரை சேர்த்த உணவு என்றாலே சற்று விலகி நிற்பார்கள். கொஞ்சம் கூட சர்க்கரை சேர்த்துக்கொள்ள மாட்டேன், ஒரு கிராம் சர்க்கரை எடுத்தால் கூட ஒரு கிலோ உடல் எடை கூடிவிடும் என்பது போல ஒரு அச்ச உணர்வு அவர்களுக்கு இருக்கும்.

உணவில் அல்லது பானங்களில் சேர்க்கப்படும் இனிப்பு குறித்து அனைவரிடமும் பொதுவாக எழும் சில கேள்விகள், வெள்ளைச் சர்க்கரைக்கு மாற்று தான் நாட்டுச் சர்க்கரை, கருப்பட்டி, தேனா?


தினமும் எவ்வளவு வெள்ளைச் சர்க்கரை சேர்த்துக்கொண்டால் பிரச்னை இல்லை அல்லது எடை கூடாது? இனிப்பை முழுதாக தவிர்த்துவிட்டால் உடலுக்கு நல்லது தானா? இத்தகைய கேள்விகளுக்கான பதில் என்ன?

சர்க்கரை என்றால் என்ன?

“சர்க்கரை என்றாலே நம் கண் முன் கலக்கப்படும் வெள்ளைச் சர்க்கரை அல்லது கடைகளில் இருக்கும் இனிப்பு பொருட்கள், சாக்லேட்டுகள் என்றுதான் நினைக்கிறோம். ஆனால் காலையில் உண்ணும் இட்லியில் இருந்து தோசை, சாதம் என அனைத்திலும் சர்க்கரை உள்ளது” என்கிறார் குழந்தைகள் நல மருத்துவர் மற்றும் உணவு ஆலோசகர் அருண் குமார்.

“சர்க்கரை என்றாலே அடிப்படையில் அது சுக்ரோஸ்தான். குளுக்கோஸ் மற்றும் பிரக்டோஸ் கலந்ததுதான் இந்த சுக்ரோஸ். நாம் வழக்கமாக சாப்பிடும் இட்லி, தோசை, சிறு தானியங்களில் இருப்பதுதான் குளுக்கோஸ். உடலுக்கு ஆற்றல் தருவது இந்த குளுக்கோஸ்தான். ஆனால்








**சிராஜ்**


அதனுடன் இருக்கும் பிரக்டோஸ்தான் சிக்கலே.

ஏனென்றால் சர்க்கரையில் இருக்கும் குளுக்கோஸ் உடலில் எளிதாக கரைந்து ஆற்றலாக மாறும். ஆனால் பிரக்டோஸ் என்பது கல்லீரலுக்கு சென்று அங்கிருந்து ஆற்றலாக மாற்றப்படும். எனவே அதிகமாக இனிப்பு அல்லது சர்க்கரையை எடுத்துக் கொள்ளும்போது, அதை ஆற்றலாக மாற்ற முடியாமல் கல்லீரல் திணறும். அப்போது பிரக்டோஸ் கொழுப்பாக கல்லீரலில் படிந்து விடும்.

இவ்வாறு படியும் கொழுப்பு, ரத்தத்திலும் கலந்து விடும். எனவே தான் உலக சுகாதார நிறுவனம் ஒரு நாளுக்கு 25 கிராமுக்கு (5 ஸ்பூன் அளவு) மேல் சர்க்கரை எடுத்துக்கொண்டால் ஆபத்து என பரிந்துரைக்கிறது. உடனே பலர் நினைக்கலாம், நான் ஒரு ஸ்பூன் அல்லது இரண்டு ஸ்பூன் சர்க்கரை தானே தேநீரில் கலந்து குடிக்கிறேன், எனவே பிரச்னை இல்லை என.

ஆனால் முன்னர் சொன்னது போல, பல உணவுப் பொருட்களில் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ சர்க்கரை உள்ளது. எனவே அதையும் கணக்கில் கொள்ள வேண்டும். இதையெல்லாம் சேர்த்து தான் 25 கிராம் சர்க்கரை என்று சொல்கிறது உலக சுகாதார நிறுவனம். எனவே முடிந்தளவு நேரடி சர்க்கரையை குறைத்துக் கொள்ள வேண்டும்" என்கிறார் மருத்துவர் அருண்குமார்.




வெள்ளைச் சர்க்கரைக்கு மாற்றா நாட்டுச் சர்க்கரை, கருப்பட்டி, தேன்?

பலரும் நாட்டுச் சர்க்கரை அல்லது கருப்பட்டியை வெள்ளைச் சர்க்கரைக்கு மாற்றாக முன்வைக்கிறார்கள். அதில் செய்யப்படும் இனிப்புகள் அல்லது பலகாரங்களை, மக்கள் அதிக விலை கொடுத்து வாங்கவும் செய்கிறார்கள். உண்மையில் நாட்டுச் சர்க்கரை உடலுக்கு நல்லதா?




“வெள்ளைச்சர்க்கரையோ,நாட்டுச்சர்க்கரையோ, தேனோ அல்லது பனை வெல்லமோ, எல்லாமே மாவுச் சத்து தான். 1 கிராம் மாவுச்சத்தில் 4 கலோரிகள் உள்ளது. இது பொதுவானது. ஆனால் சத்துக்கள் என்று பார்த்தால் வெள்ளைச் சர்க்கரைக்கும் வெல்லத்திற்கும் வித்தியாசம் உள்ளது. வெல்லத்தில் கால்சியம், இரும்பு, பொட்டாசியம் சத்துக்கள் உள்ளது. இதனால் தான் குழந்தைகளுக்கு வெள்ளைச் சர்க்கரையை விட வெல்லம் கொடுப்பது நல்லது” என்கிறார் ஊட்டச்சத்து நிபுணர் மீனாட்சி.


தொடர்ந்துபேசிய அவர்,“கிளைசிமிக்இன்டெக்ஸ் என்ற ஒரு குறியீடு உள்ளது. அதாவது ஒரு உணவை எடுத்துக்கொள்ளும்போது, நம் உடலின் சர்க்கரை அளவு எவ்வளவு கூடுகிறது என்பதன் குறியீடு. கருப்பட்டி எடுத்துக்கொள்ளும்போது உடலில் சர்க்கரை அளவு அதிகம் உயராது. அப்போது கிளைசிமிக் இன்டெக்ஸ் 35 ஆக இருக்கும்.



ஆனால் வெள்ளைச் சர்க்கரை எடுத்துக்கொண்டால் 60 ஆக இருக்கும், இது மிகவும் அதிகம். எனவே இந்த விதத்தில் பார்த்தால் கருப்பட்டி நல்லது தான். தேனும் அப்படிதான், உடலின் சர்க்கரை அளவை அதிகமாக பாதிக்காது. மேலும் வெல்லத்தை விட கருப்பட்டியில் இன்னும் அதிக சத்துக்கள் உள்ளன. இதுதான் வித்தியாசம். மற்றபடி எந்தவகை சர்க்கரை என்றாலும் அதிகமானால் ஆபத்துதான்” என்கிறார் ஊட்டச்சத்து நிபுணர் மீனாட்சி.

இதுகுறித்து பேசிய மருத்துவர் அருண்குமார், வெள்ளைச் சர்க்கரைக்கு, நாட்டுச் சர்க்கரை அல்லது கருப்பட்டி ஒருபோதும் மாற்று இல்லை எனக் கூறுகிறார். “கரும்பிலிருந்து முற்றிலும் சுத்திகரிக்கப்பட்டு, 100% சுக்ரோஸுடன் வருவது தான் வெள்ளைச் சர்க்கரை. அதுவே நாட்டுச் சர்க்கரை அல்லது வெல்லம் என்றால், 90 முதல் 92% சுக்ரோஸ் இருக்கும். கருப்பட்டி என்றால் 85 முதல் 90% சுக்ரோஸ், தேன் என்றால் 80%. எனவே மக்கள் நினைப்பது போல பெரிய வித்தியாசம் இல்லை.”

“நாட்டுச் சர்க்கரையில் இனிப்பு சுவை குறைவாக இருக்கும். எனவே ஒரு ஸ்பூன் வெள்ளை சர்க்கரை பயன்படுத்த வேண்டிய இடத்தில் 2 அலலது 3 ஸ்பூன் நாட்டுச் சர்க்கரை போடுவார்கள். அது மிகவும் ஆபத்து. எனவே எல்லா வகை சர்க்கரையையும் அளவாக தான் எடுக்க வேண்டும்” என்கிறார் மருத்துவர் அருண்குமார்.




“முழுக்க முழுக்க பொய். அதிக உடல் எடை என்பது அதிக கொழுப்பு. எனவே எளிய உண்மை என்னவென்றால், உணவைக் குறைத்து உடற்பயிற்சி செய்தால்தான் கொழுப்பு கரைந்து ஆற்றலாக மாறும். மாவுச் சத்து குறைவாக எடுப்பது, விரதம் இருப்பது போன்ற முறைகளும் உதவி செய்யலாம். வெந்நீரில் அல்லது எலுமிச்சை சாறில் தேன் கலந்து குடித்துவிட்டு, வழக்கமாக உண்ணும் உணவையே எடுத்துக்கொண்டால் எந்த பயனும் இல்லை” என்கிறார் மருத்துவர்.

பழங்களில் இருக்கும் சர்க்கரை நல்லதா?

“ஒவ்வொரு பழத்திலும் குளுக்கோஸ், சுக்ரோஸ், பிரக்டோஸ் என மூன்று வித சர்க்கரைகளும் வெவ்வேறு அளவுகளில் உள்ளது. நேரடி சர்க்கரைக்கும் பழங்களில் உள்ள சர்க்கரைக்கும் உள்ள முக்கிய வித்தியாசம் என்னவென்றால், பழச் சர்க்கரை நார்ச்சத்துடன் இணைந்து வருகிறது.

பழச்சாறாக இல்லாமல் முழு பழமாக எடுத்துக்கொண்டால் அந்த நார்ச்சத்து கிடைக்கும். அது போல உடலில் சர்க்கரை ஏறும் விகிதமும் (கிளைசிமிக் இன்டெக்ஸ்) குறைவாக இருக்கும். இட்லி, தோசை அல்லது சாதம் போன்றவற்றை விட பழங்கள் குறைவாகவே ரத்தத்தில் சர்க்கரை அளவைக் கூட்டும். ஆனால் அதற்காக பழங்களையும் அதிகம் எடுத்துக்கொள்ளக் கூடாது.

சிலர் பழங்களை மட்டும் உண்பது என்ற முறையை பின்பற்றி, அதிக பழங்களை மட்டுமே உண்டு, கல்லீரலில் கெட்டக் கொழுப்பு படிந்து, எங்களிடம் சிகிச்சைக்கு வருகிறார்கள். எனவே எந்தப் பழமாக இருந்தாலும் ஒரு 100 கிராம் போல எடுத்துக்கொண்டால் போதும்” என்கிறார் மருத்துவர் அருண்குமார்.




“நீரிழிவு பிரச்னை வரக்கூடாது, உடல் எடையை குறைக்க வேண்டும் என நினைப்பவர்கள் நேரடி சர்க்கரையை தவிர்ப்பது நல்லது அல்லது இரண்டு ஸ்பூன் அளவு வரை எடுத்துக்கொள்ளலாம். அதுவே நீரிழிவு இருப்பவர்கள் என்றால் கண்டிப்பாக நேரடி சர்க்கரை எடுத்துக் கொள்ளக் கூடாது. அது எந்த வகை சர்க்கரையாக அல்லது இனிப்பாக இருந்தாலும் சரி


சில நீரிழிவு உள்ளவர்கள் உணவுக்கு பதிலாக பழங்களை எடுத்துக்கொள்கிறார்கள். அது தவறு. தன் உடலின் ரத்த சர்க்கரை அளவைப் பொறுத்து, எவ்வளவு பழங்களை, எந்த நேரத்தில் அவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள் என்பதும் முக்கியம். ஆனால்,குறிப்பிட்ட சில பழங்களில்பொட்டாசியம் சத்து இருப்பதால் குறைவான அளவில் பழங்களை எடுத்துக்கொள்வது அவர்களுக்கு நல்லது தான்” என்கிறார் ஊட்டச்சத்து நிபுணர் மீனாட்சி.

நீரிழிவு நோயாளிகளுக்கு நேரடி சர்க்கரையை விட, அரிசி உணவுகள் தான் ஆபத்து. அதுதான் ரத்த சர்க்கரை அளவை உடனே அதிகப்படுத்தும். சில விளம்பரங்கள் ‘சுகர்—ப்ரீ’ என்ற பெயரில் பிரக்டோஸ் மட்டுமே உள்ள சர்க்கரையை தேநீர் அல்லது காபியில் கலந்து குடிக்கச் சொல்கிறார்கள். பிரக்டோஸ் ரத்த சர்க்கரை அளவை உடனே உயர்த்தாது ஆனால் நீரிழிவு நோயின் வீரியத்தை

அதிகப்படுத்தும். எனவே நீரிழிவு நோயாளிகள் அறவே சர்க்கரையை தவிர்க்க வேண்டும் அல்லது மிகக்குறைவாக எடுக்க வேண்டும்.

சர்க்கரை அதிகம் எடுத்துக்கொண்டால் என்னவாகும்?

சிக்கல்கள் உருவாகும். எனவே ஒரு வெள்ளைச் சர்க்கரை வில்லன், நாட்டுச் சர்க்கரை ஹீரோ என்பது முற்றிலும் தவறு. எதையும் அளவோடு எடுப்பது நல்லது” என்றார் மருத்துவர் அருண்குமார்.




சர்க்கரை அதிகம் எடுத்துக்கொண்டால் உடல் பருமன் மட்டுமல்லாது இதய நோய்களுக்கான அபாயமும் அதிகரிக்கும் என்கிறார் மருத்துவர் அருண்குமார்.

“சர்க்கரை அளவுக்கு அதிகமாக எடுக்கும்போது, கல்லீரல், ரத்தத்தில் கொழுப்பு கூடும், இன்சுலின் எதிர்ப்புத் தன்மை அதிகமாகும். சர்க்கரை அதிகம் எடுத்து பழகியவர்களுக்கு, மற்ற உணவுகளில் திருப்தி இருக்காது.

எனவே அதிகமாக உணவுகளை எடுத்துக்கொள்வார்கள். இது உடல் பருமனுக்கும் இதய நோய்களுக்கும் வழிவகுக்கும். பெண்களுக்கு பிசிஓடி எனப்படும் சினைப்பை நோய்க்குறி ஏற்படும். உயர்ரத்த அழுத்தம், யூரிக் ஆசிட் பிரச்சினை என அதிக சர்க்கரையால் பல




சர்க்கரை அதிகமானால் அது மதுவை விட மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்கிறார் ஊட்டச்சத்து நிபுணர் மீனாட்சி.

“எந்த சர்க்கரையாக இருந்தாலும் அதிகமாக எடுத்துக் கொண்டால், உடலில் கெட்டக் கொழுப்பு கூடும். உதாரணமாக ஒரு பாட்டில் குளிர்பானத்தில் 8 முதல் 10 ஸ்பூன் என்ற அளவில் சர்க்கரை சேர்க்கப்பட்டிருக்கும். எனவே தினமும் குளிர்பானம் குடித்தால், கல்லீரலில் கெட்டக் கொழுப்பு கூடும்.

எப்படி அதிகமாக அல்லது தினமும் மது குடித்தால் கல்லீரல் கெடுமோ, அதிகமாக சர்க்கரை எடுப்பதாலும் அதே அளவில் கல்லீரல் கெடும். உடல் எடை கூடுவது, நீரிழிவு நோய், இதய நோய் என சர்க்கரையுடன் பல உடல்நலப் பிரச்னைகளுக்கு தொடர்பு உள்ளது” என எச்சரித்தார் ஊட்டச்சத்து நிபுணர் மீனாட்சி.



தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
இனிய
தமிழ் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA™
VARSHA
1Kg
Traditional taste that Lingers

# மனச்சுவை

## நகைச்சுவை என்னும் தனிச்சுவை !

மனித இனத்திற்கு நகைச்சுவை மிக மிகத் தேவை. 'மனித குலத்திற்குக் கிடைத்துள்ள சக்திவாய்ந்த ஆயுதம் சிரிப்பு' என்று புகழ்பெற்ற எழுத்தாளர் மார்க் ட்வைன் கூறினார். 'எனக்கு மட்டும் நகைச்சுவை உணர்வு இருந்திருக்கா விட்டால், என் வாழ்வில் எதிர்ப்பட்ட துன்பங்கள் எப்போதோ என்னை அழித்துவிட்டிருக்கும்' என்று அண்ணல் காந்தியடிகள் கூறினார். முற்காலத்தில் மன்னர்களின் அரசவையில் நகைச்சுவை நாயகர் இருந்தனர் என்று தெரிகிறது. கிருஷ்ணதேவ ராயரின் அவையில் இருந்த தெனாலி ராமனை இங்கு நினைவு கூரலாம். இக்காலத்தில் சர்க்கஸ் என்ற பொழுதுபோக்கு அரங்கத்தில் சிலர் சிரிப்பு மூட்டுவார்கள். நாடகங்களில் நகைச்சுவை இடம் பெறும். நகைச்சுவைக் கென்றே நடத்தப்படும் நாடகங்களும் இருக்கின்றன. அதுபோலவே நகைச்சுவைக்கு மட்டுமே நடத்தப்படும் தொலைக்காட்சிகளும் உள்ளன. திரைப்படங்களிலும் நகைச்சுவைக் காட்சிகளுக்குச் சிறப்பிடம் தரப்படுகிறது.

மனிதனுக்குச் சிந்தனை ஆற்றல் இருக்கிறது; சிரிப்பு என்ற சிறப்பும் இருக்கிறது. இது மனிதனுக்கு மட்டுமே இருக்கிறது. தொல்காப்பியர் மனிதனிடம் அமைந்த மெய்ப்பாடுகளைப் பற்றிக் கூறும்போது, நகையே, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்றார். அவர் நகைச்சுவையைத்தான் முதலில் கூறினார். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பேராசிரியர் மூன்று வகையான சிரிப்பைச் சொன்னார். அவை முறுவலித்தல், நகுதல், சிரித்தல் என்பவை. திருவள்ளுவரும், 'சிரிக்காதவருக்கு, இந்தப் பெரிய உலகம், ஒளியுள்ள பகற்பொழுதிலும் இருட்டில் இருப்பதாக இருக்கும்' என்கிறார்.



இலக்கியத்தில் பள்ளு, குறவஞ்சி முதலிய நூல்களில் நகைச்சுவை இருக்கும். சிலரின் நகைச்சுவை உரைகள் மேலோட்டமாக இருக்கும். சிலரின் சொற்கள் முதலில் சிரிப்பை ஊட்டும்; பின்பு சிந்தனையைத் தூண்டும். இதுவே சிறந்த நகைச்சுவை. 'பொம்பளை சிரிச்சா போச்சு, புகையிலை விரிச்சா போச்சு' என்பது ஒரு பழமொழி. இதற்கு அடிப்படைக் காரணம் உள்ளது. தண்ணீர் படிந்திருப்பதைப் போன்று மாயத் தோற்றம் அமைந்திருந்த கூடத்தில், உண்மை உணராத துரியோதனன் தன்



# போக்கும் நகைச்சுவை

முனைவர்
மலையமான்

கீழாடையைக் கையால் உயர்த்திப் பிடித்து நடக்க முயன்றான். அவனுடைய அறியாமையைக் கண்டு திரௌபதி சிரித்தாள். துரியோதனன் கடுங்கோபம் கொண்டான். பாரதப் போர் நடந்தது.

அமைதியான — மகிழ்ச்சியான வாழ்வு பறிபோனது. இதுதான், 'பொம்பளை சிரிச்சா போச்சு' என்ற பழமொழி ஆனது. சிரிப்பு என்பதற்குரிய ஆங்கிலச் சொல் ஸ்மைல். தற்போது ஸ்மைஸ் என்ற புது ஆங்கிலச் சொல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சொல்லை டைரா பேங்க்ஸ் என்ற அமெரிக்கப் பெண்மணி படைத்தார். வாயால் மட்டும் சிரிப்பது ஸ்மைல். கண்ணாலும் முழு உடம்பாலும் சிரிப்பதே ஸ்மைஸ் ஆகும். குழந்தைப் பருவத்தில் சிரிப்பு அதிகமாகப் பொங்கும். இல்லற வாழ்வுப் பருவத்தில் சிரிப்பு வறண்டு போகும். சிலரின் முதுமைப் பருவத்தில் சிரிப்பு மரணம் அடைந்துவிடும். சிரிக்கும்போது மனம் மகிழ்ச்சி அடைகிறது.




மனமகிழ்ச்சியின்போது எண்டோர்ஃபின் என்னும் ஹார்மோன் சுரக்கிறது. இது உள்ளம் உற்சாகமாய் இருக்க உதவுகிறது. சிரிப்புக்கு எதிர் நிலையான மன இறுக்கம் இருக்கும் போது, கார்டிசோல் என்னும் ஹார்மோன் சுரக்கிறது. இது உடல்நலக் கேட்டுக்குக் காரணமாய் அமைகிறது. சிரிப்பு காணமாக உடம்பில் நடைபெறும் நிகழ்வு பற்றிச் சில கோட்பாடுகள் கூறப்படுகின்றன.




நீக்கக் கோட்பாட்டின்படி நம் உணர்ச்சிகள் சிரிப்பு மூலம் வெளிப்படுகிறது. இணக்கக் கோட்பாடு, சிரிப்பையும் அதற்கான சூழ்நிலையையும் புரிந்து கொள்ள உதவுகிறது. உயர்வுக் கோட்பாட்டின்படி, மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம் என்பது தெரிகிறது. அரசியலாளர்களுக்குச் சிறந்த பேச்சாற்றலே மூலதனம். அவர்களின் சிரிப்பு, துணை மூலதனம். நோயாளியை வரவேற்கும் மருந்துவருக்கு அவருடைய புன்முறுவல் முதன்மையான எளிமையான சிறந்த மருந்து. மழலைப் பள்ளி ஆசிரியையின் முகத்தில் மலர்நத சிரிப்பு மாணவச் செல்வங்களுக்கு வழங்கப்படும் வரவேற்பு மடல். காதலியின் இளமை முகத்தில் முதலில் தோன்றும் ஒலிப்பு இல்லா மென்முறுவல், அறிமுகக் கடிதம். மனைவியின் கேள்விக்குப் பதில் சொல்லமுடியாத கணவனின் மௌனச் சிரிப்பு அவனுடைய பாதுகாப்புக் கேடயம். துன்பம் தாக்கும்போது, எழும் சிரிப்பு. அதை வெல்லும் ஆயுதம். இது திருவள்ளுவர் கூறிய வழிமுறை.





கசப்பான உண்மையைச் சொல்ல வேண்டிய கட்டாயம் உருவாகும்போது, நகைச்சுவைச் சூழலை ஏற்படுத்தினால் இடர்ப்பாடு எழாது.


இது பெர்னாட்ஷா சொன்ன உத்தி. திருக்குறளார் முனிசாமி என்ற சொற்பொழிவாளர் முன்பு பட்டி தொட்டி களிலும் பேசி வந்தார். அவருடைய சொற்பொழிவு முழுவதும் நகைச்சுவை மிளிர்வதாக இருக்கும். கோபம் கொப்பளித்துக் கொண்டிருக்கும் நிலையில் இருந்த ஒருவன் 'உனக்கு அறிவு இருக்குதா' என்று கேள்வி கேட்டுச் சீறிப் பாய்வான். 'அதை நீ வாங்கிய கடையைக் காட்டு, நானும் கொஞ்சம் வாங்கிக் கொள்கிறேன்' என்று எதிராளி பதில் சொல்வான் என நகைச்சுவை தோன்றும்படி, திருக்குறளார் கூறுவார். சமயத் தொண்டு புரிந்த கிருபானந்தவாரியார் சுவாமிகளின் உரையிலும் நகைச்சுவை கலந்து வரும். அவரைப் போற்றுவதறகாகக் கையில் மாலை ஏந்தி ஒருவன் வேகமாக வந்தான். அவன் வாரியார் சுவாமிகளைப் பார்த்தான். அவருடைய கழுத்தில் மாலை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. வந்தவன் தயங்கி நின்றான். அவனுடைய மன நிலையை வாரியார் சுவாமிகள் உணர்ந்தார். அவர் தன் கழுத்திலிருந்த மாலையைக் கழற்றினார். அருகில் இருந்தவரிடம் அதைக் கொடுத்தார்.



வந்தவன் அதைக் கண்டான். அவருடைய வெறுங்கழுத்தில் தான் கொண்டுவந்த மாலையைச் சூடினான்; மகிழ்ச்சி அடைந்தான். அவரை வணங்கி விட்டுச் சென்றான்.

அப்போது வாரியார் சுவாமிகள், அந்த நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டு, 'இதிலிருந்து என்ன தெரிகிறது? நம்மிடம் இருப்பதை யாருக்காவது கொடுத்தால்தான் அடுத்தவர் நமக்குக் கொடுப்பார்' என்றார். இந்த நயமான பேச்சு சிரிப்பை எழுப்பியது; சிந்தனையையும் எழுப்பியது. கவிஞர் கண்ணதாசன் ஒரு






கூட்டத்தில் பேசுவதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால், நீண்ட நேரம் கழித்து வந்தார். மக்கள் அவர்மேல் வருத்தத்துடன் இருந்தார்கள். கண்ணதாசன் அதை உணர்ந்தார். அவர் பேசத் தொடங்கியவுடன் ‘எனக்குப் பிடித்த மதம் ஒன்று உள்ளது. அது யாருக்காவது தெரியுமா’ என்று கேட்டார். ஒருவரும் விடை கூறவில்லை. அவரே ‘எனக்குப் பிடித்த மதம் தாமதம்’ என்று கூறினார்.

கைத்தட்டல் மேற் கூரையைத் தாக்கியது; மக்களின் வருத்தத்தைப் போக்கியது. இங்கிலாந்தில் லோமாலிண்டா பல்கலைக்கழகம் இருக்கிறது. அங்குச் சிரிப்பு பற்றிய ஆய்வு நடந்தது. தினமும் அரைமணி நேரம் நகைச்சுவைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தால் மன இறுக்கம் தரும் ஹார்மோன்களின் செயற்பாடு குறைகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. மற்றொரு ஆராய்ச்சி பின் வரும் முடிவை அறிவித்தது. நம் உடம்பில் சி. எதிர்வினைப் புரதம் உள்ளது. இது அதிகரித்தால், இதயம் தொடர்பான நோய்கள் வரும்.

நாள்தோறும் நகைச்சுவைக் காட்சிகளைப் பார்ப்பதாலோ, நகைச்சுவை நிகழ்ச்சிகளைப் படிப்பதாலோ சி — எதிர்வினைப் புரதம் 66% விழுக்காடு குறைந்து விடும் என்பதே அந்த ஆய்வு முடிவு. இப்படி நகைச்சுவை நல்ல மருத்துவப் பலன்களையும் அளிக்கிறது. மனமகிழ்ச்சி தரும் நகைச்சுவை, முகத்திலுள்ள தசை நார்களுக்குப் பலம் ஏற்றுகிறது. அது தினமும் புதிய நண்பர்களைத் தருகிறது. அதன் காரணமாக நினைத்ததை எளிதாகச் சாதிக்க முடிகிறது. டேல் கார்னீஜி என்பவர், சுய முன்னேற்ற நூல்களை எழுதிய புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர். அவர் ‘கவலையை விடு; வாழ்வைத் தொடங்கு’ என்ற நூலை எழுதி வெளியிட்டார். நகைச்சுவையின் சிறப்பை அவர் அந்த நூலில் குறிப்பிட்டார்.

நகைச்சுவை, ஒருவனை உயர்த்தும். எல்லா இடத்திலும் நகைச்சுவையாளனுக்கு வரவேற்பு கிடைக்கும். அது அவனுக்குத் தலைமைத் தன்மையும் தரும். அலுவலகத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் நகைச்சுவையாளராக இருந்தால் அவருக்கு முழு ஒத்துழைப்பு கிட்டும். அவருடைய திட்டுதலும் வசவுச் சொற்களும் பிறரிடம் பாதிப்பை ஏற்படுத்தாது. தொழில் துறையிலும் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும்.




இன்றைய வாழ்வியலைச் சுற்றி அல்லல் அலைகள் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றன; துன்ப வேல்கள் இதயத்தைத் துளைத்துக் கொண்டிருக்கின்றன; ஏமாற்ற முதலைகள் வாயைப் பிளந்து கொண்டு காத்துக் கொண்டிருக்கின்றன; நயவஞ்சகப் புலிகள் பாய்வதற்குப் பதுங்கிக் கொண்டிருக்கின்றன; தோல்வி வல்லூறுகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன.

துரோக நாகப்பாம்பு படம் எடுத்துக் கொத்துவதற்கு நேரம் பாத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் நம்பிக்கை என்ற நல்ல தேவதை, மனிதனின் அருகில் தன்னந்தனியாக நின்று கொண்டிருக்கிறது. அதற்கு உறுதுணையாக சிறிய பாதுகாப்பாக நகைச்சுவை ஓர் ஓரத்தில் இருக்கிறது. மன இறுக்கப் புதைகுழியில் விழுந்து வாடும் மனிதனுக்கு அது உதவும் கரத்தை நீட்டுகிறது.

இது சிரிப்புக்குரிய செய்தி அல்ல, சிந்தனைக்குரிய தகவல். உளவியல் என்பது அண்மையில் தோன்றிய புதிய துறை. இன்று உளவியல் துறையில் மருத்துவர்கள் உதவி செய்கிறார்கள். வருங்காலத்தில் நகைச்சுவைத் துறை என்ற ஒன்று தோன்றும். அத்துறையிலும் அருந்தொண்டு புரிவதற்கு வல்லுநர்கள் வரக்கூடும்.

# தமிழ் 2024

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL




## MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | 10 | 11 | 12 |
| | | | | 17 | 18 | 19 |
| | | | | 24 | 25 | 26 |
| | | | | 31 | | |




## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |


## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email: editor@ithamil.com


VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers